கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(20.08.2017 - 20 ஆவணி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 166, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

**விழாக்கள்**

**புனித மொனிக்கா 27 ஆவணி**

**புனித அகஸ்ரின் 28 ஆவணி**











E.C. பர்னாந்து

# மடுத் திருப்பதியில் அற்புதமாக மழை பொழிவித்த மருதமடு அன்னை



2017ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ந் திகதி மரியன்னையின் விண்ணேற்பு விழா ஆடம்பரமற்ற நிலையில் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டின் தொனிப் பொருளாக "தூய ஜோசப்வாஸ்" ஆண்டையொட்டிய கருப்பொருளே எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் முன்னைய நாள் 14ம் திகதி திடீரெனப் பெய்த மழையினால் மாலைச்சிறப்பு ஆராதனை நடைபெறவில்லை. இருப்பினும் மடுத் திருப்பதியின் பரிபாலகரும் ஏனைய குருக்களும் எடுத்த சிறப்புத் தீர்மானத்தின் படி அன்றைய தினம் 5 மணியளவில் அன்னைக்கு மனுக்குலத்தை ஒப்புக்கொடுக்கும் செபம் சொல்லப்பட்டு, அன்னையின் திருச்சுரூபத்தினால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. சுமார் 2 மணிநேரம் பெய்த கடும் மழையினால் மடுப்பிரதேசம் வெள்ளக் காடாகக் காட்சியளித்ததோடு தற்காலிக விடுதிகளில் தங்கியிருந்தோர் பல அசௌகரியங்களுக்கு உள்ளா-னார்கள். சிலர் அன்னையின் ஆசீரைப் பெற்ற மகிழ்ச்சியில் தத்தமது வீடுகளுக்குத் திரும்பினார்கள். இருப்பினும் மாலை மீண்டும் மழை பெய்யாத காரணத்தினால் மறுநாள் காலை 6.00 மணிக்கு திருநாட் திருப்பலி ஆடம்பரமற்ற முறையில் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.


அதன்படி அன்னையின் விண்ணேற்புத் திருவிழாத் திருப்பலி கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் பல ஆயர்கள் புடைசூழ கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சிங்கள மொழியிலே மறையுரையை பேராயர் வழங்கினார். அதிலே எபேசு சங்கத்திலே "மரியன்னை மனுக்குலத்தின் தாய்" என்று பிரகடனப்படுத்தப்பட்டது. உரோமபுரியில் அன்னைக்கு ஆலயம் எழுப்பவேண்டும் என்ற வேளையில் சாந்த மதியா மஜோரி என்ற இடத்தில் இதைக் கட்டவேண்டும் என்று பணித்தார். அதேபோன்று தான் மடுத்திருப்பதியிலும் மழைவேண்டும் என்று யாத்திரிகள் கேட்ட வேளையில் அங்கு மட்டுமே மழைபெய்து வெள்ளமாகியது. இதுதான் அன்னையின் அன்பு. தன்னுடைய பிள்ளைகளுக்குத் தேவையானதை அவள் தந்து கொண்டிருக்கின்றாள். எனவே தான் இறைவனும் அவளைத் தேர்ந்தெடுத்தார். அவளிலே காணப்பட்ட அந்த விசுவாசம் தான் அவளை இந்நிலைக்கு உயர்த்தியது. எனவே அவளது பிள்ளைகளாகிய நாமும் இறைவனிலே ஆழமான விசுவாசம் கொள்ள வேண்டும்.

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையாக இருப்பதற்கும் காரணம் அவர் இறைவனிலே கொண்டிருந்த ஆழமான விசுவாசம், இறைவனின் விருப்பத்தை அப்படியே நம்பிச் செயற்பட்டார். எங்கும் கேள்வி எழுப்பவில்லை. இறை நம்பிக்கையிலே வாழ்ந்தார். உமது உள்ளத்தை ஒருவாள் ஊடுருவும் என்று அன்னை மரிக்கும் கூறப்படுகின்றது. இங்கு எல்லாம் விசுவாசமாக....

15

## தேவத்தை நோயாளர்கள் தினம்



27.08.2017

பிற்பகல் 1.30 மணிக்கு செபமாலை தியானத்துடன் ஆரம்பமாகும்.

## கரித்தாஸ், இலங்கை – SEDEC

### திண்ம கழிவுப் பொருட்கள் கட்டுப்படுத்தல், ஒழுங்கமைவு விடயமாக சமூக விழிப்புணர்வை அறிமுகம் செய்தல் மாநாடு

இம்மாதம் 23ம் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு "லங்காரம, பெல்கம் பிளேஸ், கொழும்பு 08ல் தேசிய இயக்குனர், அருட்தந்தை மகேந்திர குணதிலக்க அடிகளார் வழிநடத்தலுக்கமைய ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பற்றிய விபரம்....

02




## வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலய வருடாந்த திருவிழா



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலய வருடாந்த திருவிழா 2017.08.13 அன்று காலை 8.00 மணிக்கு சிறப்புத் திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

## "இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப மொழியை கருவியாகக் கொள்ள வேண்டும்"

### பௌத்தமத தேரர் ஒருவரின் நூல் வெளியீட்டு விழாவின்போது கர்தினால் ஆண்டகை



எமது நாட்டினுள் வாழ்கின்ற மக்களிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப நாம் மொழியை ஓர் கருவியாக்கிக் கொள்ள வேண்டும். எமது தாய்மொழியைத் தவிர ஏனைய மொழிகள் குறித்து எவ்வித அறிவும் இல்லாததிருந்ததால் கடந்த காலங்களில் நாம் மிகவும் துர்பாக்கியமான சம்பவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது என்று கொழும்பு உயர்...

15

**ஆண்டவரே என்றும் உள்ளது உமது பேரன்பு (தி.பா 138)**

# கரித்தாஸ், இலங்கை – SEDEC -

## திண்ம கழிவுப் பொருட்கள் கட்டுப்படுத்தல், ஒழுங்கமைவு விடயமாக சமூக விழிப்புணர்வை அறிமுகம் செய்தல் மாநாடு

சமூகச் சேவைகளில் தம் பணிகளை ஈடுபடுத்திக் கொள்ளும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கரித்தாஸ் SEDEC பணித்தளமானது, மனித தலைமுறைக்கே சேதம் விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களை ஓர் முறையான ஒழுங்கமைவுக்கு கொணரும் விடயம் பற்றியும், அது சம்பந்தமாக அவர்களது பொறுப்புக்கள் பற்றியும் ஓர் விழிப்புணர்வை சாதாரண நகர வாசிகள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன், ஓர் சமூக விழிப்புணர்வு பிரச்சாரம் ஒன்றை ஒழுங்கு செய்ய முன்வந்துள்ளது.

சித்திரை மாதத்தில் மீற்றொற்றமுலவில் நடந்தபேரழிவைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் வெவ்வேறு நிலைகளில் எடுத்த முயற்சிகளை பாராட்டி, கத்தோலிக்க திருச்சபையானது, கழிவுப் பொருட்கள் ஒழுங்கமைவு விடயம் பற்றி அனைத்து நகரவாசிகளும் முன்னுரிமை கொடுத்து பொறுப்போடு செயலாற்ற வேண்டிய கடப்பாட்டை முன்வைக்கிறது.

சுற்றுச் சூழல் நிபுணர்களதும், பெற்றுக்கொள்ளும் புள்ளிவிபர அடிப்படையிலும் இலங்கையில் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 23,000 நிறுதலளவைக்கூறு கழிவுகள் சேருகின்றது. இதனளவு நகரங்களினதும் மாநகரங்களில் 8000 ஆகவும் கொழும்பில் மட்டும் 1,200 ஆகவும் கணிக்கப்படுகின்றது. மதிய உணவுப் பொதிகளின் தாள்கள் மட்டும் கிட்டத்தட்ட 15 மில்லியனாகவும் அப்புறப்படுத்தப்படும் பொது உறைகள் 20 மில்லியனாகவும் கணிக்கப்படுகிறது. இலங்கையின் மொத்த கழிவுகளில் 10 - 15 வீதம் பொலித்தீனாகும்.

கொழும்பு உயர்மறைமாவட்ட ஆயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வழிகாட்டலுக்கேற்ப கரித்தாஸ் மேற்கொள்ளும் இந்த செயல்திட்டமானது பின்வரும் குறிக்கோளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது.

1. கழிவுகளை முறையான ஒழுங்கான ஒழுங்கமைவுக்கு கொண்டுவராவிட்டால் ஏற்படக்கூடிய மிக தீவிரமான சேத விளைவுகள்.

2. நன்கு அறிமுகப்படுத்தப்பட்டு வரும் 3R ஆராய்ச்சி முறையின் முக்கியத்துவம்.

REDUCE - பாவனையை குறைத்தல்

REUSE - மறுபயன்பாட்டுக்கு உட்படுத்தல்

RECYCLE - மறுசுழற்சி

3. வீடுகளிலும், நிறுவனங்களிலும் முறையே கழிவுப் பொருட்களை வகைக்கேற்ப வேறுபடுத்தி சேர்த்தல். மேலும் இச்செயல் திட்டமானது நிரூபிக்கப்பெற்ற ஓர் உரமாக்கல் முறையையும் அறிமுகம் செய்கிறது. அதாவது திரு. கோஜி ரக்குறா எனப் பெயர் கொண்ட யாப்பான் ஆராய்ச்சியாளரால் கண்டு பிடிக்கப்பட்ட “ரக்குறா” உரமாக்கும் முறையாகும்.

**இலக்கு :**

திண்ம கழிவுகள் சார்ந்த ஒழுங்கமைப்பு

**நோக்கம் :**

கழிவு உற்பத்தியை முடிந்த அளவுக்கு குறைத்தல்

**கருத்துப்படிவம்**




ரக்கூறா முறை

**3R என்றால் ?**

REDUCE - குறை

REUSE - மறுபயன்படுத்து

RECYCLE - மறுசுழற்சிக்கு உட்படுத்து

இந்த செயற்திட்டமானது ஆரம்பத்தில் கொழும்பு மறைமாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு, பின்பு மற்றைய மறைமாவட்டங்களுக்கும் அங்கேயுள்ள கரித்தாஸ் நிறுவனங்களினால் செயல்படுத்தப்படும் இச்செயற்பாட்டின் வளர்ச்சிக்கு, இலங்கை கரித்தாஸ் SEDEC பின்வரும் அதிகாரிகளின் ஆதரவை பெற்றுள்ளது.

- பெருநகரங்களதும், மேற்கு மேம்பாட்டு அமைச்சு
- திரு. அனுராத விஜயவர்த்தன, சமூக மேம்பாட்டு அதிகாரி, உள்ளூர் அரசாங்க உதவி ஆணையாளர் பணித்தளம், கொழும்பு.

இவர் ரக்கூறா உரமாக்கல் திட்ட, செயல் திறனாளராகவும், ஆதரவாளராகவும் இருக்கின்றார்.

தேசிய இயக்குனர், அருட்பணி மகேந்திர குணதிலக்க என்பவரால் வழிநடத்தலுக்கமைய ஆரம்பிக்கப்பட்ட, இந்த கரித்தாஸ் SEDEC கழிவுப்பொருள் - ஒழுங்கடைவுத் திட்டம் இலங்கை கத்தோலிக்க மாநாட்டின் ஆதரவின் கீழ் ஆவணி 23ந் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு “லங்காரம, பெல்கம் பிளேஸ், கொழும்பு 08ல் இடம்பெறவுள்ளது. இதன் பங்கேற்பாளர்களாக அனைத்து கத்தோலிக்க துறவற மேலதிகாரிகளும் தத்தம் ஆயர்களோடு ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வார்கள்.



இலங்கை அமரபுர மஹா நிக்காயவின், தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் வணக்கத்துக்குரிய கொடுகொட தம்மவாச தேரரின் பதவி பொறுப்பேற்கும் விழாவானது, அண்மையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில், மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு விசேட விருந்தினர்களாக, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஓய்வுபெற்ற பேராயர் ஒஸ்வலட் கோமிஸ் ஆண்டகை ஆகியோர் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

**படங்கள் மற்றும் தகவல் ரீ சுனில்**



கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்க பணிக்கு பொறுப்பான பேராயரின் பதிலாளர் அருட்பணி. மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளாரின் மேற்பார்வையின் கீழ் கொழும்பில் முழுநேர சிறப்புத் தியானம் 7வது தடவையாக, சாலக்குடி டிவைன் தியான இல்லத் தமிழ் தியானக் குழுவினர் வழிநடத்திய நற்செய்தியும், குணமளிக்கும் சிறப்புத் தியானமும் முகத்துவாரம் டிலாசால் புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் இடம்பெற்றபோது அருட்பணி. அருண் லூயிஸ் அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும், அருட்பணி. Binoy Chakkanikunnel அவர்கள் நற்செய்தி அறிவிப்பதையும், அருட்பணி மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளார் உரையாற்றுவதையும், திரு அன்ரனி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து உரையாற்றுவதையும் பங்குபற்றிய மக்களையும் படங்களில் காணலாம்.

**படங்கள் மற்றும் தகவல் பேர்னாண்டோ**



புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தில் உறுதிபூசுதல் பெறும் மாணவர்களுக்கான கருத்தரங்கு 12.08.2017 அன்று மாலை 3.00 மணிக்கு கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி சசிரேகா ஜெரால்டின் அவர்களால் வழிநடத்தப்பட்டது. அன்றைய தினம் நடைபெற்ற கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

**தகவல் : மறையாசிரியர், புதுச்செட்டித் தெரு.**

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
20 ஆவணி, 2017 ஞாயிற்றுக்கிழமை.

**நமது இன்ப துன்பங்களிலும், வெற்றி தோல்விகளிலும் அவர் நமக்குக் கைகொடுத்துக் கொண்டே இருக்கிறார் என்ற நம்பிக்கை உணர்வுதான் நாம் இறைவனோடு கொள்ளவேண்டிய உறவின் நங்கூரம்.**

நமக்கு வாழ்வு என்கிற மாபெரும் கொடையை அளித்தவர் இறைவனே. இந்த வாழ்வுக்குத் தேவையானவற்றை இறைவன் நமக்கு வழங்குவார் என்ற இறை நம்பிக்கை வேண்டும். "எதை உண்போம்? எதை குடிப்போம்? எதை அணிவோம்?" என்று கவலைப்படுவது கடவுளின் தந்தைக்குரிய பராமரிப்புத் தன்மையில் நமக்கிருக்க வேண்டிய பிள்ளைக்குரிய நம்பிக்கை உணர்வுக்கும் முரணானது. நம்மால் இயன்றதைச் செய்து வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்வோம் எஞ்சியதைக் கடவுள் கவனித்துக் கொள்வார் என்ற மனநிலை நமக்குத் தேவை. இறையாட்சி மதிப்பீடுகளான அன்பு, இரக்கம், நீதி, சமத்துவம் போன்ற சொற்களைச் செயற்படுத்துவதில் மட்டும் நாம் கவலைப்பட வேண்டும். இவையே மானிட நல்வாழ்வுக்குத் தேவையானவை.

இயேசுவின் மீட்புப் பணியில் இடம்பெற்றவை. "கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" என்ற இயேசுவின் நம்பிக்கையூட்டும் ஆணைகள், மக்களுக்கும் தந்தைக் கடவுளுக்கும் இடையே வளர்க்கப்படவேண்டிய நெருங்கிய உறவுக்கு ஓர் அடித்தளம். நமது இன்ப துன்பங்களிலும், வெற்றி தோல்விகளிலும் அவர் நமக்குக் கைகொடுத்துக் கொண்டே இருக்கிறார் என்ற நம்பிக்கை உணர்வுதான் நாம் அவரோடு கொள்ளவேண்டிய உறவின் நங்கூரம்.

"கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்" என்ற இயேசுவின் அடித்தளமான சொற்கள் அவர் தம் இறைத்தந்தையின் சார்பாக அக்கறையுடனும், கரிசனையுடனும் நமக்குத் தரும் வேண்டுகோள்கள். தந்தையோடு நாமொரு நிரந்தரமான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் வழிகளாகும். மனித நேயத்தையும், ஒற்றுமை உணர்வுகளையும் உருவாக்க வழிகாட்டியது இயேசுவின் பொன்விதி. இது உலக வரலாற்றில் பல சமயத் தலைவர்கள் வழியாக எதிரொலித்துள்ளது. புத்தரும், கன்பூசியசும் "பிறர் உனக்குச் செய்யக் கூடாது என்று நீ விரும்புதை, பிறருக்கு நீ செய்யாதே" என்று போதித்தனர். கிரேக்க வரலாற்றிலே ஓமர், எரோதிதுஸ் போன்ற அறிஞர்கள "பிறர் உனக்கு ஏற்படுத்தும் துன்பங்களை நீ பிறருக்கு ஏற்படுத்தாதே" என்றனர். இயேசுவின் பொன்விதியானது கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும், தாக்கத்தை ஏற்படுத்துமானால் எமது வாழ்வில் துன்பங்கள் இல்லை, கவலைகள் இல்லை, தோல்விகள் இல்லை, பிரச்சினைகள் இல்லை, என்றுமே இறைவனுக்குள் மகிழ்ந்து வாழலாம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# திருமுழுக்கு யோவான்
# நேர்மை தவறாத போராளி

இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக போற்றப்படுபவர் திருமுழுக்கு யோவான். இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி திருமுழுக்கு கொடுத்த பெருமை இவரையே சாரும். இவர் அனைத்தும் துறந்த துறவியாக பாலைவனத்தில் வெட்டுக் கிளியையும் காட்டுத் தேனையும் உண்டு விலங்கு தோல் அணிந்து புதுவகையான இறைசெய்தி பகிர்ந்தவர். மனந்திரும்பியவர்களுக்கும், திருமுழுக்கு அருட்சாதனம், பெறுபவர்களுக்கும், துறவிகளுக்கும், நெய்வோருக்கும் பாதுகாவலர் ஆவார். யோவான் என்ற பெயருக்கு "அருளளிப்பவராம் யாவே" என்று பொருள். "திருமுழுக்கு" என்கிற அடைமொழி மக்களுக்கு இவர் திருமுழுக்கு கொடுத்த நிமித்தம் கொடுக்கப்பட்டது. இவர் இறைவனின் கொடையாக செக்கரியாவுக்கும் எலிசபெத்துக்கும் அவர்களின் முதிர் வயதில் ஆலய குருவின் சந்நிதியில் பிறந்தவரும் அன்னை மரியாளின் உறவினரும் ஆவார். இறைமகன் இயேசுவின் வருகையை முன்னறிவிக்கும் முக்கிய பணி இவரிடமே அளிக்கப்பட்டிருந்தது. இவரைப் பற்றி ஏசாயா மற்றும் மலாக்கு புத்தகங்களில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது. அனைத்து நற்செய்திகளும் திருத்தூதர் பணி புத்தகமும் இவரை முக்கிய நபராய் மெய்ப்பித்து காட்டுகிறது. இவருடைய பிறப்பைப்பற்றி கூறும்போது இவரின் உன்னத பிறப்பினை நம்பாத காரணத்தால் இவரின் தந்தை செக்கரியா பேச்சிழக்கிறார். செக்கரியாவுக்கு தோன்றிய கபிரியேல் தூதர் முதுமையில் குழந்தைப் பேறு சாத்தியப்படும் அற்புதத்தையும் யோவான் என்ற பெயரை முன் தெரிவித்தும் அவரது வாழ்வுப் பணியை வலியுறுத்திய நிகழ்வே திருமுழுகக்கு யோவானின் முதன்மை பங்கினை வலியுறுத்துகின்றது.


இச்சம்பவம் முடிந்து ஆறு மாதங்களுக்கு பின் கர்ப்பிணிகளான அன்னை மரியாளும் எலிசபெத்தம்மாளும் சந்தித்தபோது மரியாளின் குரல் கேட்ட அக்களிப்பில் துள்ளியவர் திருமுழுக்கு யோவான். இவர் பிறந்தபின் வானதூதர் கூறிய பெயரையே குழந்தைக்கு இடவேண்டி சக்கரியா பலகையில் எழுதிய மறுகணம் நாவின் கட்டவிழ்க்கப்பட்டார். தனது வாலிப வயதில் திருமுழுக்கு யோவான் யோர்தான் நதிக்கரையில் துறவு மேற்கொண்டார். இவர் மக்களை மனமாற்றத்திற்கும் அதன் அடையாளமாக திருமுழுக்கு சடங்கிற்கும் அழைத்தார். இவரின் வாழ்வும் போதனையும் பல்வேறு மக்களை ஈர்த்தது. சிலர் இவரது சீடர்களாகவும் மாறினர். இறைமகன் வருகை பற்றிய போதனையும் மனமாற்றம் பற்றிய அழைப்பும் பரிசேயர்களையும் சதுசேயர்களையும் அரசியல் செல்வந்தர்களையும் மெய்சிலிர்க்கச் செய்தது. இவருடைய சீடர்கள் இயேசுவின் போதனையின் ஈர்க்கப்பட்டு இயேசுவின் நெருங்கிய சீடர்களாய் மாறினர். ஒரு முறை யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்கு யோவான் பெருந்திரளான மக்களுக்குத் திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். அவ்விடம் வந்த பாவமறியா இயேசு தனக்கு திருமுழுக்கு பெற வேண்டிய போது அவருடைய இறைத்தன்மையை நன்கறிந்திருந்ததால் பெரிதும் வியப்புற்றார். கிறிஸ்து திருமுழுக்கு பெற்றபின் யோவானின் பணி நிறைவு பெற்றது. இதன் பின் ஏரோது மன்னரின் தவற்றினை சுட்டிக்காட்டியதால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார் திருமுழுக்கு யோவான்.

15



## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# பொருட்செல்வத்தை தேடி அருட்செல்வத்தை இழப்பதா?



**பொருள்தான் எல்லாம் அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும்.**

பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதைக் குறிக்கோ-ளாகக் கொண்டுள்ள நுகர்வுக் கலாச்சாரத்தினால் இன்று பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றிவிட்டது. இச்சந்தை மனிதனையே இலக்காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவையான பொருளீட்டுவதிலேயே இரவு பகலாக தன் முழுக்கவனத்தையும் செலுத்தி தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

## மனிதன் பொருளுக்கு சமமானவனா?

இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப்படுகிறான். இன்று அரசோ ஏனைய நிறுவனங்களோ பொருளைப் பயன்படுத்துவதுபோலவே மனிதனைப் பயன்படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன்படுத்தமுடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு அதன்பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றிவிடுகின்றன. இன்று வயோதிபர் இல்லங்களில் உள்ளவர்களோடு உரையாடினால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

## இரு பரிமாணங்கள்

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம் அதுவே **'தெய்வம்'** என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையுமே தேடாதுவிடுகிறான். அப்படித் தேடினாலும் சுயதேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

## மனித முன்னேற்றம்

பேராசையோடு சொத்தைத்தேடுதல் தனி மனிதனின் தன்னிறைவுக்கும், மனித மாண்புக்கும் பெருந்தடையாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி" என்கிறது ***'மனித முன்னேற்றம்'*** என்னும் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தை 6ம் பவுலின் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதை சுட்டி நிற்கிறது.

## அறிவற்ற செல்வன்

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. "செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்துவைக்க இடமில்லையே! என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்துவைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து மகிழ்ந்திரு என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" "பலருடை-டய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞான-மாகவே நின்று விடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்று விடுகிறது.

## இறுதி வார்த்தைகள்

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்:

***'உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தைமட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்துவிட்டேன் என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமிய ~ங்களையும் நான் தேடியிருக்கவேண்டும்'***

சொத்துக்களின் தொடர்தேடல் ஒருவரின் தொலை நோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்புசெய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?"

**வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்' திருத்தந்தை பிரான்சிஸ்**

இவர் யாரோ? இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக் கொள்ளலாம். ஆனால் வாழ்வை?... காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்." இறப்பின் போது இந்த இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசிந்ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐ போன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டு பிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்து செல்லுகின்றன அல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ?

இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது: "வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்" என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதவாது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்கு புண்ணியத்தையும் இன்பத்தையும் தருகிறது. மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடியவேண்டி ஏற்படும்.

மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?

- ☆ எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடுவேண்டும்.
- ☆ நாம் மனித மாண்பை மதிக்கவேண்டும். எமது உடல், அறிவு, ஆன்மா என்பவை புனிதமானவை என்பதை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்கவேண்டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண்போடு நடத்தவேண்டும்.
- ☆ இந்த நுகர்வுக் கலாசாரத்தால் நாம் தொலைத்துவிட்ட கொடைகள், ஆசீர்வாதங்களை மீளக் கண்டு பிடிக்கவேண்டும். குறிப்பாக குடும்ப உறவுகளை நன்கு பேணவேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழவேண்டும்.

சமூக, சகோதர உதவிகளில் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்டோரின் நல்வாழ்வின் உயர்ச்சிக்காக தன்னலமற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்தனையோ எடுகோள்கள் வரலாற்றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.

***அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகள்***

## அவரவர் எண்ணபடி

இரண்டு சகோதரர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்கள். சின்னவர் பிடிவாதக்காரர். கிழக்குப் பக்கம் உள்ள நிலம்தான் வேண்டும் என்றார். பெரியவர் சாது. மேற்குப் பக்கத்தை எடுத்துக்கொண்டார்.

நீரோட்டம் பார்த்தவர் வரப்புக்கு அருகில்தான் நீர் இருப்பதாகச் சொன்னார். இருவரும் நடுவரப்புக்கு அருகில் தத்தம் பகுதியில் கிணறு தோண்டினார்கள்.

சுமார் 10 அடி ஆழத்தில் இரண்டு குழிகளும் வெட்டப்பட்டன. தனித்தனியே இரண்டு செப்புக் குடங்கள் கிடைத்தன. இளையவரின் வயலில் கிடைத்த குடம் சிறியதாக இருந்தது. பெரியவரின் குடம் கொஞ்சம் பெரியது.

சின்னவர் விடவில்லை. தனக்குத் தான் பெரிய குடம் வேண்டும் என்றார். குடும்பத்தினரும் ஊர் மக்களும் இது நியாயமில்லை என்று சொல்லிப் பார்த்தார்கள். சின்னவர்தான் பிடிவாதக்காரராச்சே. விட்டுக்கொடுக்க மனமில்லை... வாதாடி, போராடி.... அதனைப் பெற்றுக்கொண்டார்.


பெரியவர் மீண்டும் விட்டுக்கொடுத்தார். சமாதானமாகத் தன் பெரிய குடத்தைக் கொடுத்துவிட்டுச் சிறிய குடத்தை எடுத்துக்கொண்டார். ஊர் கலைந்தது. எல்லோரும் வீடு திரும்பினார்கள.



சின்னவர் குடம் நிறைய வெள்ளிக்காசுகள் அவர் பெருமையாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டார். ொரியவரின் குடம் நிறையத் தங்கக் காசுகள் அவர் அமைதியாக அதைப் பயன்படுத்தி முன்னேறினார்.

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா உரோமைய மண்ணில் அன்னை



20

அன்னை தெரசாவின் சகோதரிகள் வெனசுவேலாவுக்குச் சென்றது 1965ஆம் ஆண்டு ஆடி திங்கள் 28ம் நாள். இ∴து அவர்களது சபையின் வரலாற்றில் முக்கியமானதொரு நிகழ்ச்சி. இதற்குப் பின் இச்சபை வளர்பிறை என வளரத் தொடங்கியது. 1970ஆம் ஆண்டு முடிவதற்குள் மூன்று கண்டங்களில் ஒன்பது புது மடங்களை நிறுவவிட்டனர் என்றால் அது பாராட்டுக்குரிய சாதனையன்றோ? ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் இப்புதுச் சபையின் விழுதுகள் படர்ந்து வளரத் தொடங்கின. வெளிநாடுகளில் விழுதுகளை விடத் தொடங்கிய இச்சபை இந்திய மண்ணில் புதுப்புது வேர்களையும் ஊன்றத் தொடங்கியது. 13 புது இல்லங்களை அது இந்தியாவில் நிறுவியிருக்கின்றது. ஏற்கனவே தொடங்கப்பெற்ற நிறுவனங்கள் பல விரிவாக்கப்பட்டன. 1961ம் ஆண்டில் அசன்சோலில் தொடங்கப் பெற்ற தொழுநோய் விடுதி படிப்படியாக அமைக்கப்பெற்ற இக்குடியிருப்பு இன்று ஆயிரக்கணக்கான தொழுநோயாளிகளுக்கு அடைக்கலம் தருவது மட்டுமன்றி அவர்கள் மனித மாண்புடன் வாழ்வதற்கும் உதவியாக இருந்து வருகின்றது.

இந்தியாவுக்கு வெளியே வெனசுவேலாவுக்கு அடுத்தபடியாக இச்சபையின் கிளை தொடங்கப்பெற்றது உரோமையில்தான். வெனசுவேலாவுக்கு முதல் நான்கு சகோதரிகளை அழைத்துச் செல்லுகையில் அன்னை தெரசா பாப்பானவரின் ஆசீர் பெற உரோமைக்குச் சென்றார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் தெரசாவையும் சகோதரிகளையும் ஆசீர்வதித்தது மட்டுமன்றி உரோமையின் கிராமப்புறங்களுக்கும் சகோதரிகளை அனுப்பிவைத்திட அன்னையிடம் கேட்டுக்கொண்டார். இந்தப் பாப்பானவர்தான் 1964இல் மும்பையில் நடந்த சர்வதேச நற்கருணை மாநாட்டில் கலந்துகொண்ட போது தாம் பயணம் செய்த வெண்ணிற லிங்கன் காரை அன்னைக்கு அன்பளிப்பாகக் கொடுத்துச் சென்றவர்.

பாப்பானவரின் வேண்டுகோளுக்கிணங்க 1968ஆம் ஆண்டு ஆவணி திங்கள் 22ம் நாள் அன்னை தம் சகோதரிகளுடன் உரோமைப் பெருநகரில் வந்திறங்கினார். ஆவணி 22 என்பது இச்சபையினருக்கு முக்கியமானதொரு நாள். அதை மரியாயின் மாசற்ற இருதய விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. 16 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் காளிகாட்டில் தொடங்கிய விடுதிக்கு "நிர்மல் ஹிருதய்" எனப் பெயரிடக் காரணம் இப்போது விளங்குகிறல்லவா?

இதுவரைக்கும் இந்திய நாடு ஒரு வேத போதக நாடாகவே இருந்து வந்துள்ளது. அதாவது கிறிஸ்தவ சமயத் தொண்டு செய்ய மேல்நாடுகளையே நாடி வந்துள்ளது. இவ்வாறு ஒரு வேதபோதக நாடாகிய இந்திய நாட்டிலிருந்து கத்தோலிக்க திருச்சபைக்கே நடுநாயகமாக, பாப்பரசரின் இருப்பிடமாக விளங்கும் உரோமைக்குச் சமயத் தொண்டுபுரிய அருட்சகோதரிகளை அனுப்புவதைக் கேட்ட பெரியவர்கள் சிலர் நெற்றியைச் சுளித்தனர். வேறு சிலர், ஏற்கனவே நூற்றுக்கணக்காக கன்னியர் சபைகளைக் கொண்ட உரோமைக்கு மற்றுமொரு கன்னியர் சபையை இறக்குமதி செய்வதன் அறிவுத் திறனைக் கண்டு வியப்படைந்தனர்.

ஆயினும், பாப்பானவர் அன்னை தெரசாவின் சகோதரிகளை வரவேற்றார். ஏனென்றால் இத்தனை துறவற சபைகள் இருந்தும், அதன் கிராமப்புறத்து ஏழைமக்கள் மத்தியில் பணிபுரிந்திட ஒரு சபையினர் கூட முன்வரவில்லை. இந்த ஏழை மக்கள் வாழும் இடம்தான் "டோர் ∴பிஸ்கால்" அங்கே அன்னை ஒரு மடத்தை நிறுவினார். அதனைச் சகோதரி ஸ்டெல்லாவின் பொறுப்பில் ஒப்படைத்தார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த சகோதரி ஸ்டெல்லாவுக்கு இத்தாலி மொழி தண்ணீர் பட்டபாடு.

மடம் என்றவுடனே பெரிய கட்டடம் என்று எவரும் எண்ணிவிட வேண்டாம். இந்த மடம் வெறும் கொட்டகை, அதன் ஒரு பக்கம் வரவேற்பறை. மறுபக்கம் சிறு கோவில். இந்தச் சிறுகோவிலில் தான் தினமும் காலையில் திருப்பலி நடைபெறும். திருப்பலி நிறைவேற்றி வந்தவர் மாரியோ என்னும் இத்தாலியக் குரு.

அவரது கதை ஒரு சோகக் கதைதான். இளம் வயதிலேயே இந்திய நாட்டுக்குச் சென்று சமயத் தொண்டு புரிய வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் கார் விபத்தில் அகப்பட்டு இரண்டு கால்களையும் இழந்தார். அவருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த மூன்றுபேரும் உயிரிழந்தனர். அவர் மட்டும் உயிர் தப்பினார். ஆயினும், இரண்டு கால்களையும் இழக்க நேர்ந்தது. அத்துடன் இந்தியாவுக்குச் சென்று சமயப்பணி புரியவேண்டும் என அவர் காட்டிய மனக்கோட்டையும் மணற்கோட்டையாகிவிட்டது. இந்தியாவுக்குப் போக முடியாமற்போனாலும் இந்தியச் சகோதரிகளுக்காவது பணிபுரிவோமே என்று அன்னை தெரசாவின் சகோதரிகளுக்குத் திருப்பலி நிறைவேற்றி வந்தார்.

மாரியோ அடிகளார் திருப்பலி நிறைவேற்றும் பலிபீடத்துக்குப் பின் ஒரு சிலுவை வைக்கப்பட்டிருக்கிறது. அச்சிலுவையில் தொங்குகின்ற இயேசுவின் வார்த்தைகள் சுவரில் எழுதப்பெற்றிருக்கின்றன. "ஹோ சே தே" இந்த இத்தாலியச் சொற்களின் பொருள் "நான் தாகமாயிருக்கிறேன்".

கோவிலின் மறுபுறம் உள்ளது வரவேற்பறை. விருந்தினரை வரவேற்பதற்கு இது பயன்பட்டது. அத்துடன் சிறுவர் சிறுமியருக்கு வகுப்புக்கள் நடைபெறுவதும் அவ்வறையில்தான். இளம்பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிப்பதும் அங்கேதான். சகோதரிகள் இரவில் படுத்துறங்குவதும் அதே அறையில்தான்.

சகோதரிகள் புரிந்துவந்த பணிகளில் ஒன்று சிறு குழந்தைகளைக் கண்காணிப்பது. வேலை செய்யும் தாய்மார்கள் தங்கள் கைக் குழந்தைகளைச் சகோதரிகளின் பொறுப்பில் விட்டுச் செல்வார்கள். இந்தக் குழந்தைகள் காப்பகத்துக்கு "ஆசிலோ" என்பது பெயர். இதில் ஏறக்குறைய அறுபது மழலைகள் கண்காணிக்கப்பெற்று வந்தன.

இவ்வேலைகளைத் தவிர உள்ளூரிலும் சகோதரிகள் பல்வேறு பணிகளைப் புரிந்து வந்தனர். இத்தாலி நாட்டு கிராமப்புறத்து குடும்பங்கள் நம் நாட்டு கிராமப்புறக் குடும்பங்களைப் போல் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருபவைதான். இருப்பினும் அங்கேயும் நோயாளிகளும் வயோதிபர்களும் தனிமையில் வாடிக் கொண்டிருந்தார்கள். தள்ளாத வயதில் அவர்களைக் கவனிக்க ஓர் ஆள் பக்கத்தில் இல்லை எனில் அவர்களின் கதி என்னவாகும்?

இதோ! 93 வயதுடைய பெரியவர் ஒருவர். குடுகுடு கிழம். கொம்பசைத்தால் உதிரும் பழம். ஒரு வாரமாக பாயும், படுக்கையுமாகப் படுத்திருக்கிறார். அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை. சகோதரி ஒருவர் அவ்வீட்டுக்குள் நுழைகிறார். பெருக்குமாற்றை கையில் எடுத்து வீட்டைப் பெருக்குகிறார். பாத்திரங்களை எல்லாம் சுத்தம் செய்கிறார் பெரியவரையும் குளிப்பாட்டி உட்கார வைக்கிறார்.

அப்பெரியவரோ இதுவரைக்கும் கன்னியர்களையும் குருக்களையும் பேசியும் ஏசியும் வந்தவர். அவர் ஒரு கிறிஸ்தவர். ஆனால், அவர் அச்சகோதரியைப் பார்த்து, "நீங்கள் என் வீட்டுக்குக் கடவுளையே கொண்டு வந்தீர்கள். இப்போது ஒரு குருவானரை



அழைத்து வாருங்கள்". உடனே அச்சகோதரி ஒரு குருவானவரைத் தேடிப் போகிறார். பெரியவர் தமது வாழ்வின் இறுதி நாட்களில் கடவுளுடன் ஒப்புரவாகி நல்ல மரணம் அடைகிறார்.

பல ஆண்டுகளுக்குப் பின் அந்நிகழ்ச்சியை அன்னை அமெரிக்காவில் நடந்த குருக்களின் கூட்டமொன்றில் கூறியிருக்கிறார். கூட்டம் முடிந்ததும் குருவானவர் ஒருவர் அன்னையிடம் வந்து, "நான் என் குருத்துவத்தைத் துறக்க எண்ணியிருந்தேன். உங்கள் உரையைக் கேட்டபின் என் மனதை மாற்றிக் கொண்டேன். இச்சகோதரிகள் இத்தகைய நன்மைகளைச் செய்திருக்க நானும் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது. இன்றைக்கே கிறிஸ்துவின் குருவாக மீண்டும் உழைக்கப் போகின்றேன்" என்றார்.

இன்னொரு முதியவர். பெயர் எமீலியோ. குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டவர். எப்போதும் குடிப்பதற்கு மதுவைக் கேட்டுக் கொண்டே இருப்பார். அவரையே அவரால் கவனிக்க முடியவில்லை. அப்படிப்பட்டவர் நோய்வாய்ப்பட்டு படுத்துவிட்டால் கேட்கவா வேண்டும்! படுத்த படுக்கைதான். அவரைக் கவனிக்கவும் ஆள் இல்லாமல் அவதிப்பட்டார்.

இந்நிலையில்தான் சகோதரி சில்வியா அவரது வீட்டுக்குள் நுழைந்தது. வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்ததோடு எமீலியோவையும் சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. அவரை வீட்டில் வைத்துக் கண்காணிக்க முடியாமற்போகவே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எமீலியோ சகோதரிகளின் வாழ்வோடு எவ்வளவு ஒன்றாகிவிட்டார் என்றால் அவரின் புகைப்படைத்தைச் சகோதரிகளின் பார்வை அறையில் எப்போதும் தொங்கவிட்டிருந்தனர். குடிகாரர் எமீலியோ கடவுளோடு ஒப்புரவாகி நல்ல மரணம் அடைந்தார் என்றால் அந்தப் பெருமை சகோதரி சில்வியாவையே சாரும்.

1970ஆம் ஆண்டு மே திங்கள் 4ம் திகதி டோர் பிஸ்காலுக்குப் பக்கத்திலுள்ள சான் ஸ்டெ∴பனோ ஆலயத்தில் நவதுறவிகள் நான்கு பேரை அன்னை தெரசா தமது சபையில் ஏற்றுக்கொண்டார். உரோமையிலுள்ள கன்னியர் மடம் நவதுறவிகளின் மடமாக உயர்த்தப்பட்டது. இனி ஐரோப்பிய நாடுகளிலிருந்து தெரசாவின் சபையில் சேர விரும்புவோர் கல்கத்தாவிலுள்ள தாய் மடத்துக்கு வரத்தேவையில்லை. உரோமையிலேயே சேரும் வசதியை அன்னை செய்துகொடுத்தார். அதன் விளைவாக அச்சபையில் இளம் பெண்கள் பலர் நார்வே, ஸ்வீடன், பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி மற்றும் டச்சு நாடுகளிலிருந்து வந்து சேர்ந்தனர்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

ஞான ஒளி GNANA OLI
20 ஆவணி 2017

# எது அடக்கம்? அடக்கம் அடிமைத் தனம் அன்று



அடக்கம் ஒரு நல்ல பண்பு. குறிப்பாக அனுபவம் இல்லாத புதிய துறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் அடக்கம் மிகவும் பயன்படும். இதனால்தான் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அடக்கம் தேவை என்கிறார்கள். ஆனால் பலர் அடக்கம் என்றால் அடிமைத்தனம் என்று பொருள் கொள்கிறார்கள். இது தவறானது.

அடக்கம் ஒரு வகை சுய கட்டுப்பாட்டுப் பயிற்சி. தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்பது போன்ற அகம்பாவம் இல்லாமல் பேசும் செயல்படும் பண்பு. பிறர் என்ன சொன்னாலும் முதலில் அதைப் பொறுமையாகக் கேட்டு நிதானமாகச் சிந்திக்கும் பண்பு.

அடக்கமுள்ளவர்கள் யாரோடும் முரண்படக் கூடாது என்பது சரியன்று. ஆனால் நமது முரண்பாட்டைக்கூடப் பணிவாகவும் மற்றவர் மனதைப் புண்படுத்தாமல் வெளிப்படுத்த வேண்டும். சந்தேகங்களைப் பணிவோடு கேட்டு நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் நமது கருத்தை ஒத்துக் கொள்ளாவிட்டால் நாம் நமது கருத்தை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது அடக்கமுள்ளவர்களின் அடிப்படைப் பண்பு. அடக்கமுள்ளவர்கள் மற்றவர்கள் சொல்வதற்கு எல்லாம் தலையாட்டிக் கொண்டு அவர்கள் வழியிலேயே போக வேண்டும் என்பதில்லை. பணிவாக, ஆனால் உறுதியாக நமது மனச்சாட்சிப்படி செயல்படுவதும் அடக்கப் பண்புதான்.

**உறுதியாக, பணிவாகத் தனது மனச்சாட்சிப்படி செயல்படுவதே அடக்கம்.**

இன்றைய குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும், பணியாளர்களுக்கும் அடக்கமே இல்லை என்று பலர் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

ஓரளவுக்கு இதில் உண்மை இருக்கிறது. ஆனால் இதை முழுமையாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நமது முந்திய தலைமுறை, அடக்கம் என்ற சொல்லுக்கு அடிமைத்தனம் என்று பொருள் கொள்கிறது. ஒருவருடைய வயதுக்கும் அறிவுக்கும் மரியாதை கொடுத்து ஒழுக்கத்தோடு நடந்து கொள்வதுதான் அடக்கம்.

முதியவர்களின் கருத்துக்கு உரிய மதிப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியானதன்று.

அந்தந்த வயதில், பதவியில், தங்கள் செயல்களைத் தாங்களே திட்டமிட்டுத் தேர்வு செய்துகொள்ளும் உரிமை இளைய தலைமுறைக்கு உண்டு. பெரியவர்கள் சொல்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக தங்களுக்குத் தெளிவாகத் தெரிந்த தவறான பாதையில் இளைஞர்கள் செல்லத் தேவையில்லை.

தனது மேலதிகாரி என்பதற்காக அவர் செய்யத் தூண்டும் தவறான காரியத்தை அப்படிச் செய்ய வேண்டும் என்பதும் அவசியமில்லை.

இப்படிப்பட்ட நேரங்களில், அமைதியாக, நியாயமான காரணங்களை எடுத்துச் சொல்லி பெரியவர்களுக்குப் பணிய மறுப்பதும்கூட ஒரு வகையில் அடக்கம்தான்.

**தவறு செய்ய வற்புறுத்தப்படும்போது பணிவோடு அதை மறுப்பதும் அடக்கம்தான்.**

## சிந்திக்க சில நிமிடங்கள்



# மகிழ்ச்சிக்கு எத்தனையோ வழிகள்

ஓர் ஊரில் வயதான அம்மா எப்பொழுதும், அழுதுகொண்டே இருப்பார்கள். ஆனால் அந்த ஊரில் யாருக்குமே அவர் அழுவதற்கான காரணம் தெரியவில்லை. ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு துறவி வந்தார். இந்த அம்மா அழுது கொண்டே இருப்பதைப் பார்த்து பரிதாபப்பட்டார். அந்த அம்மாவிடம் துறவி சென்று ஏனம்மா இப்படி அழுது கொண்டே இருக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த அம்மா எனக்கு இரண்டு மகள்கள். ஒருவரின் கணவன் குடை விற்பவர், மற்றவரின் கணவர் செருப்பு தைப்பவர். வெயில் காலத்தில் குடை அதிகம் விற்காது. ஆனால் அந்த மகள் வறுமையில் வாடுவாள். மழைக்காலத்தில் செருப்பு அதிகம் விற்காது அதனால் அந்த மகளும் கஷ்டப்படுவாள். அதை நினைத்து தினமும் அழுதுகொண்டு இருக்கின்றேன் என்றார். அதைக்கேட்ட துறவிக்கு சிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. துறவி சொன்னார் மழைக்காலத்தில் குடை அதிகம் விற்கும், அதில் கிடைக்கும் வருவாயில் அந்த மகள் வசதியாக வாழ்வாள். வெயில் காலத்தில் செருப்பு அதிகம் விற்கும், அதில் கிடைக்கும் வருவாயில் அந்த மகள் வசதியாக வாழ்வாள் அதை மறந்து விட்டீர்களா? என்று கேட்டார். அப்பொழுதுதான் அந்த வயதான அம்மாவுக்கு அறிவு தெளிந்தது.

**மகிழ்ச்சியடைய எத்தனையோ வழிகள், காரியங்கள் உள்ளன. அதை விட்டுவிட்டுத் துன்பங்களையே தோளில் சுமப்பது ஏன்? மகிழ்வான நேரங்கள் முழுமையாக அனுபவிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.**

# 1000 காகித நாரைகள் தரும் அமைதி



1945ம் ஆண்டு, ஆகஸ்ட் 6ம் தேதி, ஹிரோஷிமாவில் அணுகுண்டு தாக்குதல் நிகழ்ந்தபோது, சடக்கோ சசாக்கி (Sadako Sasaki) என்ற பெண் குழந்தைக்கு 2 வயது. பத்தாண்டுகள் கழித்து, அச்சிறுமிக்கு, இரத்தப் புற்றுநோய் ஏற்பட்டது. அவருக்கும், இன்னும் பலநூறு சிறுவர், சிறுமியருக்கும் உருவான இரத்தப் புற்றுநோய், அணுக்கதிர் வீச்சினால் உருவானது என்று கண்டுபிடிக்கப்பட்டது. சிறுமி சடக்கோ, இனி ஓராண்டு வாழக்கூடும் என்று கூறப்பட்டது. சாவதற்கு தான் விரும்பவில்லை என்று, அவர் கூறியபோது, அச்சிறுமியின் தோழிகள், அவரிடம், "காகித நாரைகள்" பற்றிய பாரம்பரியக் கதையைக் கூறினர்.

அதாவது, ஒருவர், 1000 காகித நாரைகளைச் செய்தால், அவர் விழையும் ஓர் ஆசை நிறைவேறும் என்ற கதையைச் சொன்னார்கள். அதன்படி, சிறுமி சடக்கோ, காகித நாரைகளைச் செய்ய ஆரம்பித்தார். அவர் 644 நாரைகள் செய்து முடித்ததும் இறந்தார். அவர் இறந்ததும், அவரது நண்பர்கள் சேர்ந்து, பல்லாயிரம் காகித நாரைகளைச் செய்து, நிதி திரட்டி, சிறுமி சடக்கோ நினைவாக ஒரு சிலையை நிறுவினர். இன்றளவும், காகித நாரைகளை, சிறு குழந்தைகள் செய்து, அந்தச் சிலைக்கருகே காணிக்கையாக வைக்கின்றனர். சிறுமி சடக்கோ, 1000 நாரைகளைச் செய்யத் தொடங்கிய வேளையில், அவர் மனதில் என்னென்ன ஆசைகள் இருந்திருக்கும் என்பதைச் சிறிது கற்பனை செய்து பார்க்கலாம். தான் உயிர் வாழவேண்டும் என்ற ஆசை, கட்டாயம் அச்சிறுமியின் மனதில் இருந்தது. அத்துடன், தான் துன்புறுவதுபோல், இனி உலகில் எந்தக் குழந்தையும் துன்புறக்கூடாது என்ற ஆசையும் அக்குழந்தையின் மனதில் தோன்றியிருக்கும் என்று நம்பலாம்.

இன்றும், சடக்கோவின் சிலைக்கருகே காகிதப் பறவைகளைக் காணிக்கையாக்கும் ஆயிரக்கணக்கான குழந்தைகள், ஹிரோஷிமாவில் நிகழ்ந்தது, இனி, உலகில் ஒருபோதும் நிகழக்கூடாது என்ற ஆசையுடன் இந்தக் காணிக்கையைச் செலுத்துகின்றனர்.



# முடக்கப்பட்ட குழந்தைகளின் உலகம்

தன் மகள் வழிப்பேரன், திண்ணையில் தன் கண்முன்னாலேயே விளையாடிக் கொண்டிருக்க, பக்கத்து வீட்டுப் பெண்மணியுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார், அம்புஜம் பாட்டி. அந்த 2 வயது சிறுவன், எதையோ எடுக்க அவசரமாக ஓடியதில், கால் தடுமாறி, கீழே விழுந்தான். அடி எதுவும் பலமாக படவில்லை என்பதை, தூரத்திலிருந்தே பார்த்து முடிவுசெய்த பாட்டி, தன் கண்களை இறுக மூடிக்கொண்டு அமர்ந்திருந்தார். சற்று எழுந்து, தன் பாட்டியைப் பார்த்த சிறுவன், தன் விளையாட்டைத் தொடர்ந்தான். "ஏன் பாட்டி, பிள்ளையைப்போய் தூக்கி விட்டிருக்கலாமே" என்றார் பக்கத்து வீட்டுப் பெண்மணி. "என் பேரன் மீது எனக்கு அளவு கடந்த பாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், குழந்தைகளைப் பொத்தி, பொத்தி வளர்ப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. தெருவில் இறங்கி விளையாடக்கூடாதாம், புழுதி ஒத்துக்காதாம். எந்தக் குழந்தை இன்று நம் பாராம்பரிய விளையாட்டுக்களை விளையாடுகின்றது? பின் எப்படி அவர்களுக்கு மனவுறுதியும் உடலுறுதியும் கிட்டும்? இன்று குழந்தைகளிடையே போட்டிகளைத்தான் நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அவனைவிட நீ அதிக மார்க் வாங்கி காண்பிக்கவேண்டும் என, பாடம், படிப்பு, டியூஷன், மனப்பாடம், மதிப்பெண், என இவை போதும் என்ற மனநிலையை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். நாம் கதை சொல்லி சோறு ஊட்டினோம். குழந்தைகள் நம் முகத்தைப் பார்த்துக்கொண்டு சோறுண்டன. இன்றோ தொலைக்காட்சியைப் போட்டுவிட்டு, சோறூட்டுகிறார்கள். கதைகள் சொல்லி குழந்தைகளில் ஓர் அழகான கற்பனை உலகம் உருவாக உதவிய காலங்கள் இன்றில்லை. நிலா நிலா ஓடிவா, என்ற இயற்கை பந்தங்களுக்கும் இன்று நேரமில்லை. எதை எதைச் செய்யவேண்டும் என கற்றுக் கொடுத்தோம் ஒரு காலத்தில். ஆனால் இன்றோ, குழந்தைகள் என்னச் செய்கிறார்கள் என்பதை கவனிக்க நேரமின்றி, செய்தபின், அதைச் செய்யாதே என கண்டிப்பதில் என்ன பயன் இருக்கப்போகிறது? செய்த தவறை புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கிறோமா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்?". இவ்வாறு, பாட்டி பேசிக்கொண்டே செல்ல, அந்த காலத்து இரண்டாம் வகுப்பு ஆசிரியராக இருந்த பாட்டிக்குள், இத்தனை ஏக்கம் இருக்கிறதா என, வாயடைத்துப்போய் நின்றார், பக்கத்து வீட்டுப் பெண்மணி.



# இறைவார்த்தை வழிபாடு

## WLX - பேதுரு -

### பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு (20.08.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு தின திருவழிபாட்டில் நம்பிக்கையுடன் கலந்து கொள்ள வந்திருக்கும் நமக்கு "அம்மா உமது நம்பிக்கை பெரிது நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்ற இயேசுவின் வார்த்தைகள் நம்பிக்கை தருகின்றன. தனது நம்பிக்கையில் நிலையாக இருப்பதால் கானானியப் பெண்ணின் மகளை குணப்படுத்துகின்றார் நம் ஆண்டவர் இயேசு. கடவுள் எல்லா மக்களுக்கும் உரித்தானவர் அவரைக் குறுகிய வட்டத்திற்குள் அடைத்து வைக்க முடியாது. எல்லா மக்களையும் கடவுளின் பிள்ளைகளாகப் பார்க்கும் இயேசு தீர்சிதோன் பகுதிக்கு சென்றபோது கனானியப் பெண்ணின் நம்பிக்கையை கண்டு மலைத்துக் போய் அவளின் மகளைக் குணப்படுத்துகின்றார். இந் நிகழ்ச்சியின் ஊடாக புற இனத்தவரும் கிறிஸ்துவின் சீடராக மாற முடியும் என்பதையும் இறைவனின் விருந்தில் பங்குபெற குறிபிட்ட இனமோ, மொழியோ குலமோ தடையாக இருக்க முடியாது என்பதையும் இயேசு ஆண்டவர் என விசுவசிக்கும் அனைவருக்கும் நல்வாழ்வு உண்டு என்பதையும் இயேசு வலியுறுத்துகின்றார். நம்பிக்கை தான் வாழ்க்கைக்கு புது அர்த்தம் கொடுக்கின்றது. எனவே நாமும் இறை நம்பிக்கை உள்ள மக்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசா 56:1,6-7** பிற இன மக்களை நான் என் திருமலைக்கு அழைத்து வருவேன்

**பதிலுரைப் பாடல் :**
கடவுளே மக்களினத்தார் உம்மைப் புகழ்ந்து போற்றிடுவார்

**இரண்டாம் வாசகம் : உரோ 11:13-15,29-32**
கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருட்கொடைகளையும் திரும்ப பெற்றுக் கொள்வதில்லை

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இயேசு விண்ணரசு பற்றிய நற்செய்தியை பறைசாற்றினார் மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 15:21-28**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மனிதம் வளர்ப்பதே மதத்தின் பணி என்பதை உணர்ந்து ஏனைய மதத்தவரோடு நல்லுறைப் பேணி வரும் திருச்சபையையும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் ஆசீர்வதிக்கவும் மனிதத்தை நோக்கி அவர்கள் வழி நடக்கவும் தேவையான அருள் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

அன்பைப் போதிக்க வந்த மதங்களைச் சார்ந்த எமது நாட்டின் மக்களும் தலைவர்களும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கவும், மதப்பூசல்கள், வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து இயேசுவின் பாரபட்சமற்ற மனநிலையை தமதாக்கிக் கொண்டு நாட்டை முன்னேற்றிட வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசு வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களையும், மதங்களையும் அவர் மதித்து நடந்தது போல் நாம் நடக்கவும் இயேசு பெண்களுக்கு கொடுத்த பணி உரிமையை பணிவிடை புரிவது நற்செய்தி அறிவிப்பது போன்றவற்றில் பெண்களுக்கு சமஉரிமையை வழங்கவும், கானானேயப் பெண்ணிடம் இருந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நாமும் பின்பற்றி வாழவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு (27.08.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு தினத்தில் கால்பதிக்கும் நமக்கு இன்றைய நற்செய்தி இயேசுவை நாம் யாரென்று நினைக்கின்றோமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. தொழுநோயாளிக்கு மருத்துவராக பேய்பித்தடிவருக்கு விடுதலையளிப்பவராக, யாயீர் மகளுக்கு வாழ்வு அளிப்பவராக, விபச்சாரப் பெண்ணிற்கு மன்னிக்கும் கடவுளாக, பார்வையற்ற பார்த்திமேயுக்கு ஒளியாக, லாசருக்கு உயிர்ப்பாக இருந்த இயேசு நமக்கு யாராக இருக்கின்றார்? கிறிஸ்துவை நாம் நம்புகின்றோமா? விசுவசிக்கின்றோமா? இயேசுவை இறைமகன் என்றும் மெசியா என்றும் அறிக்கையிட்ட பேதுருவின் நம்பிக்கை அறிக்கை குறைவுபடுகிறதா? படிப்பறிவற்ற பாமர மனிதனான பேதுரு திருச்சபையின் தலைவர் ஆனார். இது இறைவன் அவருக்கு அளித்த பரிசு நம் ஒவ்வொருவரையும் இறைவன் தன்னுடன் வாழ்வதற்கும் தன் பணியை தொடர்ந்து ஆற்றிடவும் சிந்தித்து செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசா 22:19-23**
தாவீது குடும்பத்தாரின் திறவுகோலை அவன் தோழின்மேல் வைப்பேன்

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே என்றும் உள்ளது உமது பேரன்பு

**இரண்டாம் வாசகம் : உரோ 11:33-36**
அனைத்தும் கடவுளிடமிருந்தே வந்தன. அவராலேயே உண்டாயின. அவருக்காகவே இருக்கின்றன.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா உன் பெயர் பேதுரு இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில் அதன் மேல் வெற்றிக்கொள்ளா அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 16:13-20**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசு பேதுருவுக்கு வழங்கிய தலைமைப் பண்புகளைப் பின்பற்றி திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் வழுவா வரம் கொண்ட திருச்சபையின் ஒழுங்கு முறைகளை சரிவர நிறைவேற்றி வாழ்ந்திடத் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

துன்ப துயரங்கள் எம்மை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லும் ஏணிப்படிகள் என்பதை நாம் உணர்ந்து நம் மத்தியில் வாழும் ஏழை எளியவர் துயர் துடைக்கும் பணிகளில் நாம் ஈடுபடவும், இறைவன் யார் என்பதை எமது அனுபவங்களால் கண்டுணரவும் வேண்டிய வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று..

மனிதன் பார்ப்பது வெளிஉருவத்தை, கடவுள் பார்ப்பது உள்ளத்தின் அழகை என்பதை உணர்ந்தவர்களாக திருமுழுக்கால் நாம் பெற்றுக்கொண்ட அழைப்பையும் எமது பொறுப்புக்களையும், கடமைகளையும் நிறைவேற்றி நிலைவாழ்வுக்கு உரியவர்களாக வாழ்ந்திடத் தேவையான வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...



# அடிப்படை வாதம் – ஒரு வரல

அடிப்படை வாதம் என்ற சொற்றொடரைப் பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் பரவலாகப் பாவித்து வருகின்றனர். இன்னும் சிலர் அடிப்படைவாதக் குழுக்களுக்குள் சிக்கி வருவதையும் காணலாம். பன்னாடுகளிலும் முக்கியமாக புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அடிப்படைவாதக் குழுமங்களின் செயற்பாடு அதிகமாக இருப்பது கண்கூடு. அடிப்படைவாதக் குழுமங்களுக்கும் அடிப்படைவாதத்திற்கும் இடையே உள்ள தொடர்பையும் வேறுபாட்டையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதம், இந்து அடிப்படைவாதம், பௌத்த அடிப்படைவாதம் என்று பலவிதமாகக் குறிப்பிடுவதைக் காணலாம். விவிலியவாதம் என்று அகராதியில் பார்க்கும்போது விவிலியத்துக்கு அடிப்படைவாதக் கருத்துகளைக் கூறுபவர்கள் என விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

## அடிப்படைவாதம் என்றால் என்ன?

அடிப்படைவாதத்தைப் பற்றி சுருக்கமான வரை-விலக்கணத்தைத் தர முடியாது. அடிப்படை வாதிகளின் தன்மை, அவர்களுடைய போக்கு, பின்னணி, அரசியல் - சமூக கருத்துக்களை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். எல்லா மதத்தினரிடையேயும் அடிப்படை வாதம் உண்டு. அடிப்படைவாதம் என்றால் (fundamentalism) எனக் காண்கின்றோம். அடிப்படைவாதக் குழுமங்களை புதிய மதக் குழுக்களாக கருதுவதும் எல்லா மதத்தினரிடையே இக் குழுக்களின் வளர்ச்சிப்படிகள் அரசியல் சக்தியாக பரிணமிப்பதையும் நாம் குறிப்பிடலாம். கிறிஸ்தவ மதத்தினரிடையே பல அடிப்படைவாதக் குழுமங்-களின் வளர்ச்சியை நாம் காணலாம். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இக் குழுமங்கள் பெருகியுள்ளதையும் கம்யூனிச ஆட்சி அகற்றப்பட்ட நாடுகளில் இக் குழுமங்களின் தாக்கத்தையும், எழுச்சியையும் அடிப்படைவாதம் எனும்பொழுது கிறிஸ்தவ மதத்திடையே விவிலியத்தை நேரிடையாக வாசித்து விளக்க முற்படுவதையும் காணலாம். அடிப்படைவாதக் குழுமங்களிடையே இந்தப் பண்பை நாம் கண்டுகொண்டாலும், தமக்கிடையே ஒரு பிரிவினையை உருவாக்கிக் கொள்வதையே தமது வழக்கமாகக் கொள்கின்றன. இக்குழுமங்களை ஆங்கிலத்தில் செக்ற் (Sect) என்று கூறுவார்கள். புலம் பெயர்ந்த தமிழரிடையேயும் இக் குழுமங்களின் செயற்பாடு அதிகமாயிருப்பதைக் காணலாம். அடிப்படைவாதக் குழுமங்கள் தம்மிடையே பிரிவினையைக் கண்டாலும் கத்தோலிக்க திருச்சபையை எதிர்ப்பதில் ஒருமைப்பாட்டைக் கண்டுகொள்வார்கள். போதிய மறை அறிவு இன்மையையும் தாழ்வு மனப்பான்மையையும், அடிமை மனப் போக்கையும் காரணமாகக் குறிப்பிடலாம். புலம் பெயந்ததினால் பண்பாட்டு வேரிழந்து போனவர்களும், குடும்ப உறவு அற்றுப் போனவர்களும் இக் குழுமங்களில் சிக்கிக் கொள்ளுகின்றனர்.

## வரலாற்றுப் பின்னணி

Fundarmentalism என்ற சொல்லும் ஆங்கிலத்தில் மிக அண்மையில் தொடர்பு சாதனங்களில் வழக்கத்திற்கு வந்த சொல்லாகும். 1910 - 15களில் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட Fundamentals என்ற ஆங்கிலத் துண்டுபிரசுரத்திலிருந்து இச் சொல்லாக்கத்தை உள்வாங்கியுள்ளார்கள். இச் சொல்லாக்கத்தின் ஆரம்பம் அமெரிக்க ஆங்கிலமொழியில் இருந்தாலும், இன்று இது பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. ஈரான் நாட்டில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியை அடிப்படைவாதிகளின் வெறியெனக் கொள்வர். அயோத்தியில் இஸ்லாமிய மசூதி இடிக்கப்பட்டு, இராமர் கோயில் கட்ட எடுத்த முயற்சியை இந்து அடிப்படைவாதிகளின் எழுச்சியெனக் குறிப்பிட்டு லத்தீன் அமெரிக்க நாடுகளில் மற்றும் வளர்ந்துவரும் நாடுகளிலும் அடிப்படைவாதம் எழுச்சி கண்டு அரசியல் நோக்கோடு வளர்ந்து வருவதை கருத்திற்கொள்ளலாம்.

## அடிப்படைவாதிகளின் தன்மை

விவிலிய அடிப்படைவாதிகள் விவிலியத்தின் தவறாத் தன்மையை வலியுறுத்துவார்கள். தங்கள் கருதுகோள்களைச் சுட்டிக்காட்ட விவிலியத்தை அடிப்படையாகக் மேற்கோள் காட்டுவார்கள். விவிலியத்தின் தன்மையோ, பல்வேறு நூல்களையோ, எழுதப்பட்ட காலத்தையோ ஆசிரியர்களின் நோக்கங்களையோ, இறையியல் பின்னணியையோ கருத்திற் கொள்ளாமல் சொல்லுக்கு சொல் அர்த்தம் எடுத்துக்கொள்வதைக் காணலாம். விவிலியத்தை வரலாற்று ரீதியாக இறையியல் பின்னணியில் அதன் ஆசிரியர்களின் தன்மையோடு பொருள்கொள்ள முற்பட்ட விவிலிய அறிஞர்களுக்கு எதிராகத்தான் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டு வருவதை நாம் காணலாம். விவிலிய வார்த்தைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பொருள் கொடுக்க முற்படுவதும், தனிப்பட்டவர்களின் கனவுகளுக்கும் காட்சிகளுக்கும் தனியிடம் அளிக்கப்படுவதும் தெளிவாக இருப்பதால் குழுமங்களிடையே பிரிவினை ஏற்படுகிறது. விவிலியத்தை அதிகாரப்பூர்வமாக விளங்கிக் கொள்ளவும், பாரம்பரியத்தின் பின்னணியில் விவிலிய வார்த்தைகளுக்கு அர்த்தம் காணவும் வேண்டும். தனிப்பட்ட ரீதியில் விவிலிய வார்த்தைக்கு விளக்கம் கூற முற்படும்பொழுது அவரது சொந்தக் கருத்துக்கு இடம் அளிக்கப்படுவதால் பிரிவினையைத் தவிர்க்க முடியாது. இந்த அடிப்படைவாதிகளின் கல்வினிசம் (Calvinism) என்று அழைக்கப்படும் நெதர்லாந்து கிறிஸ்தவ வாத்தினால் தூண்டப்பெற்று மற்றும் லூத்தரன், அங்கிலிக்கன் போன்ற பல சபைகளிலிருந்தும் பிரிந்து சென்றவர்கள் புதிய சீர்த்திருத்தவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொண்டாலும் பழைமைவாதக் கருத்துகளையே முன்வைப்பார்கள்.

## 1. விவிலிய அடிப்படை :

விவிலிய வார்த்தையை அடிப்படையாக பொருள்கொள்ள முற்படுவர். விவிலிய ஆய்வை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. விவிலிய மொழிபெயர்ப்பு மாற்றத்தை இவர்கள் ஏற்றுக் -கொள்வதில்லை. பொது விவிலியத்தைத் தங்களுக்குள் கொண்டிருக்கமாட்டார்கள். பழைய கேள்விகளைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். வரலாற்றோட்டத்திற்கேற்ப சொற்கள் மாறுபடுவதையும், புதிய சொற்கள் உருவாகுவதையும் நாம் காணலாம். இதனால் காலத்திற்கு காலம் புதிய மொழிபெயர்ப்புகள் வெளிவருகின்றன. இது ஒரு கூட்டு முயற்சியே அன்றி தனிப்பட்ட செயற்பாடல்ல. கிறிஸ்தவ மறைகளிடையே பிரிவினையை நீக்கி ஒருமைப்பாடு காணவேண்டும் என்ற நோக்கோடு விவிலியத்தை பொதுவாக மொழிபெயர்ப்பதுண்டு. பல மொழிகளில் விவிலியத்தை பொது விவிலியமாக மொழிபெயர்த்துள்ளனர்.

இது தமிழிலும் அண்மையில் வெளியிட-ப்பட்டது. சிறப்பாக பழைய ஏற்பாடு எபிரேயத்திலும், கிரேக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டதாக கத்தோலிக்க திருமறை கூறினாலும், அடிப்படைவாதிகள் எபிரேயத்தில் மட்டும்தான் வெளிப்படுத்தப்பட்டது என்று கூறுவார்கள். இதனால் கிரேக்கத்தில் எழுதப்பட்ட நூல்களை அவர்கள் கருத்தில் கொள்வதில்லை. யூதர்கள் இடம்பெயர்ந்து புதிய இடங்களுக்கு சென்றதும் எபிரேய மொழியை விட்டுவிட்டு அந்நாட்டு மக்களின் மொழியைப் பேசத் தொடங்கினார்கள். புதிய ஏற்பாட்டின் வரலாற்று ரீதியாக கருதப்படும் முதல் நூல் பவுல் தெசலோனியருக்கு எழுதிய கடிதம் கி.பி 60 - 65 ஆண்டுகளில் எழுதப்பட்டதாக விவிலிய அறிஞர்கள் கூறுவர். புதிய ஏற்பாட்டு நூல்கள் இவைதான் என்று தீர்மானித்ததும் திரு அவைதான். தமிழ் இறையியலாளர்கள் அனைவராலும் பல ஆண்டுகள் ஆய்வு செய்து வழங்கப்பட்ட பொது விவிலியத்தை அடிப்படைவாதிகள் ஏற்றுக்கொள்ளாததுடன், மொழிபெயர்ப்பு மாற்றத்திற்கும் உடன்பட மாட்டார்கள். இவர்களின் விவிலியத்தின் சில பகுதிகள் வேண்டுமென்று மொழிபெயர்க்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் புகுத்தப்பட்டதைக் காணலாம். விவிலியத்தை பிரதியாக்கம் செய்தபொழுது தவறுகள் ஏற்பட்டதை ஏற்றுக்கொண்டால் புதிய மொழிபெயர்ப்புகளை ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாது. அடிப்படைவாதிகள் பல சமயங்களில் பழைய ஏற்பாட்-டையும், அதிலுள்ள சில ஆளுமையை மட்டும் பேசுவார்கள். பழைய ஏற்பாட்டு நூல்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுத்து வடிவம் பெற்றது. அடிப்படைவாதிகள் தங்கள் மறைக் -கோட்பாட்டிற்கேற்ப பழைய ஏற்பாட்டைப் பொருள் கொள்கின்றனர்.

## 2. கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்றுக்கொள்வதில்லை

கத்தோலிக்க திரு அவை அனைத்து மறைக-ளுடனும் முக்கியமாக பிரிந்து சென்ற சகோதரர்களோடும் பல்வேறு மட்டங்களில் உரையாடல்களை நடத்தி வருகின்றது. பல்வேறு சூழ்நிலைகளால் கிறிஸ்தவம் பிரிக்கப்பட்டுள்ளது. மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் உருவாக்க வேண்டுமென்று பலர் உழைக்கிறார்கள். றோமன் கத்தோலிக்க திருஅவையும் அதைச் சார்ந்தவர்களும் ஓர் அமைப்பாகவும், ஏனைய திருஅவைகளைச் சேர்ந்தவர்கள் உலகத் திருச்சபைகளின் மன்றமாகவும் (World Council of Churches) ஜெனிவாவில் செயற்படுவதையும் காணலாம். ஆனால் இந்த அடிப்படைவாதக் குழுமங்கள் உலகத் திரு அவை மன்றத்தில் உறுப்பினராக இருப்பதில்லை. உலகத் திரு அவை மன்றத்தின் அங்கத்துவத்தையும் இவர்கள் கோருவதில்லை. இதனால் இவர்கள் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டிற்குத் தடையாக அமைவதோடு அதை விமர்சிப்பதையும் நாம் காணலாம்.

## 3. தனிப்பட்ட கனவுகளும் காட்சிகளும்

பொதுத்தன்மை இல்லாது தனிப்பட்ட விளக்க-த்திற்கும் தனிப்பட்ட இறைவாக்குகளுக்கும் கூடிய இடம் அளிக்கப்படுகின்றது. போதிய கட்டுப்பாட்டின்மையையும் குறிப்பிடலாம். இவை குழுமத் தன்மையைப் பேணுவதோடு, தம்மிடையே பிரிந்து செல்வதையும் காணலாம். அங்கத்தவர்கள் புதிதாக சேரும்பொழுது ஒவ்வொரு குழுமங்களும் தங்கள் திருமுழுக்கை வலியுறுத்துவது உண்டு. ஒவ்வொரு சபைகளிலிருந்தும் மாறும்பொழுது புதிய திருமுழுக்கைப் பெறுகின்றனர். இச் செயற்பாடு திருமுழுக்கை அர்த்தமற்றதாக்கி விடுகின்றது. இச்சபைகள் பழைய அடிப்படை-வாதக் கருத்துக்களை முன்வைத்து தங்களை மேன்மைப்படுத்தி பிரிவினையை உருவாக்குவார்கள் தாங்கள்தான் இரட்சிக்கப்பட்ட மக்கள் என்றும் மற்றவர்கள் சாத்தான்கள் என்றும் கூறுவதற்கு ஒவ்வொரு அடிப்படைவாதக் குழுவும் முன்னிற்கும்.

## 4. இரண்டாவது வருகை

இயேசுவின் இரண்டாவது வருகையையும் இறுதிக்-காலத்தையும் பற்றி அதிகம் பேசுவார்கள் இது நிகழ்கின்ற காலத்தைப் பற்றியும் இடத்தைப் பற்றியும் பேசுவதோடு அவ்வேளைகளில் தங்கள் குழுமங்களைச் சேர்ந்தவர்களே அதற்கு ஏற்புடையவராய் இருப்பர் என வலியுறுத்துவார்கள். இந் நிகழ்வுபற்றி தங்களுக்குள் பல்வேறு கருத்துக்ளையும் குழுமங்கள் முன்வைப்பதோடு அதை வலியுறுத்தி தங்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்துவர். இயேசுவின் இரண்டாம் வருகையையும் இறுதிக் காலத்தையும் ஆயிரம் ஆண்டுகால அரசைப் பற்றியும் குழுமமாகப் பேசி, 2000 ஆண்டுடன் உலகம் முடியும் என்றவர்கள் தற்போது அதை 300 ஆண்டாக மாற்றிக் கூறுவதையும் கவனத்தில் கொள்ளலாம்.

## 5. இவர்கள் வரல

அடிப்படைவாதிகள் சிறு குழுமப் பண்புக
அதிகாரத்தையோ ஆட்சிய-மைப்பையோ வி
தங்கள் சிறு குழுமங்களிடையே இதைப் பே
விட்டுவந்த திரு அவையைப் பகிரங்கமா
குழுமங்களின் ஆரம்பத்தையும் வளர்ச்
வரலாற்றோடு நோக்கலாம். ஐரோப்பாவி
நோக்கிப் புலம் பெயர்ந்த மக்களிடை
ஆரம்பமாகி வளர்ச்சியடைந்தது. இவைக
பிரதேசம், கடவுளால் தெரிவுசெய்யப்பட்ட
தாங்கள்தான் தெரிவு செய்யப்பட்ட மக்கள்
அதுபோலவே தாம் இணைந்துள்ள சபை
வாதிடவும் தயங்கமாட்டார்கள். சுயமாக விவி
கூறமுற்பட்டு தமக்குள்ளேயே பிரிவினை
இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் ஏற்பட்
இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. இக்
மீண்டும் சீர்த்திருத்தப்படாத மறுமலர்ச்சி
பற்றிப் பேசுமேயன்றி புதிய மாற்றத்தையோ
காணுவதில்லை.

## 6. பாரம்பரியப்

இக்குழுமங்கள் திருஅவையின் பாரம்பரிய
மறுத்தாலும், தங்கள் பாரம்பரியத்தை வலியு
நாம் காண்கிறோம். இவர்கள் பெரும் சக்தி
தங்களிடையே எழும் கருத்து முரண்பாடு
சென்று புதிய சபைகளைத் தோற்றவி
குழுமங்களின் எண்ணிக்கை பெருகும். அ
பாரம்பரியங்களின் கூட்டுமுயற்சி என்றா
மறுமலர்ச்சியின் பாரம்பரியமாகவே இ
நற்செய்தி அறிவித்தலுக்கும், ஆட்சியமை
நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். கத்தே
பல வளர்ச்சிக்குன்றிய நாடுகளில் மக்
பேணக் குரல் கொடுக்கின்றது. திரு அ
தன்மையையும் பலத்தையும் குறைக்குமுக
குழுமங்களை அரசியல் ரீதியாக பாவிப்ப
இவ் அடிப்படைவாதக் குழுமங்களின் செய
நாடுகளிலும் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின்
இருக்கின்றது. திரு அவை தனிப்பட்ட இரட்
-தில்லை எனக் குற்றம் சாட்டும் இவர்கள் இ
இரட்சிக்கப்படாதவர்கள் என்ற இருபிரிவுக
பேசிக் -கொள்வார்கள். இரட்சிக்கப்பட்டவர்க
தங்களைச் சுற்றி வேலியமைத்து தனி
காணலாம். சமூகத் -தோடும், மற்றவர்கே
மேட்டிமைப்போக்கோடு சீவிப்பார்கள்.



# லாற்று ஆய்வு

## றாறு

ளைப் பேணுவார்கள்.
விரும்பாத பொழுதிலும்,
பணுவார்கள். தாங்கள்
க எதிர்பார்கள். இக்
சியையும் அமெரிக்க
லிருந்து அமெரிக்கா
யே இக்குழுமங்கள்
ள் தாங்கள் கண்ட
பிரசேதம் என்றும்,
என்றும் கூறினார்கள்.
பையே சிறந்தது என
லியத்திற்கு விளக்கம்
களை ஏற்படுத்துவர்.
ட மறுமலர்ச்சியையும்
க்குழுமங்கள் மீண்டும்
யடையாத சபைகள்
மறுமலர்ச்சியையோ

0

த்தை ஏற்றுக்கொள்ள
றுத்துகின்ற பண்பினை
யாக பரிணமிக்காமல்
காரணமாக பிரிந்து
ப்பார்கள். இதனால்
அடிப்ப-டைவாதம் பல
லும், நற்செய்திவாத
தக் காணமுடிகிறது.
ப்புமுள்ள தொடர்பை
தாலிக்கத் திருஅவை
கள் உரிமைகளைப்
வயின் உலகளாவிய
மாக அடிப்படைவாதக்
தை நாம் காணலாம்.
ற்பாடு வளர்ந்துவரும்
மத்தியிலும் அதிகமாக
சிப்பைப் பற்றி பேசுவ
இரட்சிக்கப்பட்டவர்கள்,
ளைப் பற்றி அதிகம்
ளாக எண்ணுபவர்கள்
மையில் இருப்பதைக்
ளாடும் உறவாடாமல்

## 7. புதுமைகள்

இக் குழுமங்களை நவீன வைத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். புதுமை-கள் நிகழலாம். அது ஒரு இறை நிகழ்ச்சி, படிப்படையாக நோய் குணமடையும் ஆனால் வைத்தியத் துறை மனிதரிடையே மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கின்றது. புதுமைகள் நிகழ்வதாக இக் குழுமங்கள் வலியுறுத்தி புதுமைகளைப் பற்றியே பேசுவார்கள். எல்லா நிகழ்ச்சிகளையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளாப் பேசுவார்கள். இதனால் புதுமைகள் தங்கள் கூட்டத்தில் நடப்பதாகப் பேசிக் கொள்வார்கள். பல்லாண்டுகளாக மேற்கொண்ட போதைவஸ்து, பாலியல் தொடர்புகளிலிருந்து தாம் விடுபட்டுவிட்டதாக சாட்சியம் பகர்வார்கள். இதற்கு ஆதாரமாக விவிலியத்தை மேற்கோள் காட்டுவார்கள்

## 8. இறைபரப்புத் தன்மை


இக் குழுமங்கள் மறைபரப்புத் தன்மையுடைதாகக் காணப்படும். தாங்கள் பெற்றுக்கொண்ட செய்தியை மற்றவர்களுக்குக் கூறவேண்டும். தூர இடங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று ஆர்வமுள்ளவர்களாகக் காட்டிக்கொண்டாலும், இவர்கள் கிறிஸ்தவத்தைவிட அமெரிக்க வாதத்தையே முன்வைப்பார்கள். குறிப்பாக இன விடுதலையை நோக்கிப் போராடுதல் தவறு என்றும் ஆட்சித் தலைவரின் கட்டளைக்கு அடிபணிவதே கடவுளின் கட்டளை என்றும் பழைய ஏற்பாட்டை துணைக்கு அழைப்பார்கள். தங்களுக்குள் குழுமத் தன்மையைப் பேணுவதால் மறைபரப்புப் பணி அதிகம் வெற்றியளிப்பதில்லை. மறைபரப்புதலையும், மறைக்கல்வியையும் வேறுபடுத்த வேண்டும் இரண்டும் வேறுபட்ட பணிகள்.

அடிப்படைவாதக் குழுமங்களினால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கம் பற்றி பலர் அறிவர். ஐக்கிய அமெரிக்கா வாக்கோ நகரில் சில ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருந்த சபையொன்று குழுவாகத் தற்கொலை செய்துகொண்டதை உதாரணமாகக் கொள்ளலாம். இக்குமுழுமங்களைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்டவர்களாகக் காணப்படுவதையும் சமூகத்திலிருந்து ஒதுங்யிருப்பதையும் சிந்திக் -கின்ற தன்மையை இழந்ததையும் நாம் அவதானிக்கலாம். இதை ஒருவித நோய் என்று குறிப்பிடலாம். இதில் நோய்க்குரிய அம்சத்தைக் காணலாம். இக் குழுமங்களில் சேர்பவர்கள் தங்கள் சுய சிந்தனையை இழந்து வருவதுடன், மற்றவர்களுடன் உரையாட விரும்பாது, தமது கருத்துக்களே சரியென வலிறுயுறுத்துவார்கள் இதனால் இவர்களுடன் உடனடியாக நாம் பேசமுடிவதில்லை. காலம் செல்லச் செல்ல இவர்கள் வெறுப்படைந்த நிலையில் காணப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். இவர்களை அவதானித்து மீண்டும் சமூக வாழ்விற்கு கொண்டுவருவது நலமாகும். இவர்கள்மேல் பரிவும் பாசமும் உடையவர்களாக இருந்து பணியாற்ற வேண்டும்

நன்றி : இறை தொடுவானம்



# வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தின் திருவிழா மற்றும் முதல்நன்மை நிகழ்வுகள் சில..



படங்கள் : திரு. மைக்கல்







# வழித்துணை நானே


ஒரு வயதான தம்பதிக்கு ஒரே மகன். நல்ல செல்வ நிலையில் இருந்து, ஏழ்மைக்கு தள்ளப்பட்டவர்கள். வளமையில் இருந்தபோது ஒருவருக்கு பணத்தை கடனாகக் கொடுத்திருந்தார்கள். கஷ்ட நேரத்தில் அது நினைவுக்கு வரவே, தங்கள் மகனை அனுப்பி அத்தொகையை வாங்கிவரச் சொன்னார்கள். "கடன் பெற்றவரையும், அவர் இருக்கும் இடமும், அங்கு போகும் வழியும் தெரியாதே" என்றான் மகன். "நாம் நம்பும் கடவுள் அதற்கு வழிசெய்வார். நீ போய் அந்த நபரின் ஊர் பற்றிய விவரம் தெரிந்த யாரையாவது தேடிப்பிடித்து கொண்டு வா" என்று அனுப்பினார்கள்.

அந்த மகனும், கடன்பட்டவர் பெயர், நாடு விவரத்துடன் வெளியில் சென்றான். அப்பெற்றோர் நம்பியபடியே, அந்த விபரங்கள் தெரிந்த நபர் ஒருவர் அவர்களது மகனுக்கு எதிரே வந்தார். அந்த மகன், எதிரில் பயணப்பட்டு வரும் அந்த நபரிடம், தான் போக வேண்டிய ஊர், சந்திக்க வேண்டிய நபர் பற்றிய விபரங்களைக் கூறவே, அந்த நபரும் "அவரை எனக்குத் தெரியும். அவர் வீடும் எனக்குத் தெரியும்... வா... நான் அழைத்துச் செல்கிறேன்" என்று கூறினார்.

வயதான பெற்றோரும் அந்த வழித்துணை நபருடன் தங்கள் மகனையும், அந்தக் கடன் பத்திரத்தோடு அனுப்பி வைத்தனர். கடன்பட்டவர் யார்? அவர் இருக்குமிடம் எது? அங்கு எப்படிப் போக வேண்டும்? என்று அறியாத நிலையில், ஆண்டவர்தாமே அதற்கான வழியைக் காட்டுவார் என்று நம்பி எடுத்த முயற்சி கைகூடி, அந்த வழித்துணை நபரின் உதவியுடன் கடனையும் வசூலித்து வெற்றியுடன் வீடு திரும்பினான் மகன்.

இந்தக் கதையிலிருந்து, "கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதையும், எண்ணுவதற்கும், எதிர்பார்ப்பதற்கும் மேலாக கடவுள் துணை புரிவார் என்பதையும், வழிப்பணத்திலும், வாழ்க்கைப் பயணத்திலும் கடவுளை நம்பி நடந்தால், அவரே நமக்கு வழிகாட்டுவார் என்பதையும், நம் அனைத்துப் பயணங்களிலும் ஆண்டவரது துணையை நாடி, அவரை அழைக்க வேண்டும்" என்பதையும் கற்றுக்கொள்வோம்.

எப்போதோ கொடுத்த கடன் இப்போது உதவும் என்று எதிர்பார்த்த வயதான தம்பதி யார்? வசூலிக்கச் சென்ற அவர்களது மகன் யார்? வழித்துணையாய் சென்றவர் யார்? வாங்கிய கடனை மறுக்காமல் திருப்பி செலுத்தியவர் யார்? என்று அறிய உங்கள் விவிலியத்தில் தோபித்து 5 மற்றும் 9ம் அதிகாரங்களை படித்துப் பாருங்கள்.



## வர்ணம் தீட்டுக

## மாணவர்களே!

இன்னிசை கேளுங்கள் ரசிக்கத் தொடங்குங்கள்
ஓவியம் வரைந்திடுங்கள் உணரத் தொடங்குங்கள்
இயற்கையை நோக்குங்கள் மதிக்கத் தொடங்குங்கள்
வாழ்க்கையை உணருங்கள் வாழத் தொடங்குங்கள்

அதிகாலையில் எழுந்திருங்கள் இலட்சியத்தை
அடையுங்கள்
உடற்பயிற்சி செய்யுங்கள் மனதை
ஒருமுகப்படுத்துங்கள்
படிக்கத் தொடங்குங்கள் புதியவற்றினை அறிந்து
கொள்ளுங்கள்
அமைதியை அனுபவியுங்கள் புதுவழியினை
உருவாக்குங்கள்

நண்பனை தேர்ந்தெடுங்கள் நல்வழியை
பின்பற்றுங்கள்
கனவு காணுங்கள் நனவாக மாறிடுங்கள்
திட்டம் தீட்டுங்கள் இடைவிடாது முயற்சியுங்கள்
செயல்படுங்கள் வெற்றிக் கனியை பறித்திடுங்கள்


**உன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும்**
**உன் சரித்திரத்தில் ஓர் ஏடாகும்.**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (IVDei) எளிமையான முறையில் விளங்கிக் கொள்ளும் வகையில் மாணவர் மறைவழி என்ற நூலை தொகுத்து இருக்கின்றார். மாணவர்கள், சிறுவர்கள் எவ்வாறு மறைக்கல்வி அனுபவங்களை பெறவேண்டும், அதை எவ்வாறு வாழ்வாக்கி வாழ வேண்டும் என்பதை இப்நூல் நமக்கு சொல்லி நிற்கிறது. இப்புத்தகம் மாணவருக்கு, ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களுக்கு ஒரு பொக்கிஷமாக கிடைத்திருக்கிறது. இப்புத்தகத்தில் இருந்து சில மறை அனுபவங்களை சிறுவர்களே உங்களுக்கு பயிற்சியாக தருகின்றோம். கற்று, பயிற்சி பெற்று மறைவாழ்வை அனுபவமாக்குங்கள். அதை அன்றாட வாழ்வில் வாழ பழகிக் கொள்ளுங்கள்.**

## 1. பொதுவான நல்ல பழக்கங்கள்.

ஒருவர் நல்ல பழக்கங்களால் நல்லவர் ஆகிறார்.
தீய பழக்கங்களால் தீயவர் ஆகின்றார்.
நல்ல பழக்கங்களால் நீர் நல்லவர் ஆக விருப்பமா?
தீய பழக்கங்களால் தீயவராக விருப்பமா?
நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்?

### கடவுள்



கண் விழித்ததும் கடவுளை அப்பா என்று அழையுங்கள். நாள் முழுவதும் அவரை அடிக்கடி நினையுங்கள். ஒவ்வொரு நாளும் அவருக்கு நன்றி சொல்லுங்கள். வசதி வாய்ப்புக்களால் அவரை மட்டும் தேடுங்கள். எல்லாவற்றுக்கும் அவருக்கே முதலிடம் கொடுங்கள்.

### பெற்றோர்



அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மதிப்புக் கொடுங்கள்
அவர்களுக்கு மரியாதை செய்யுங்கள்
அவருக்கு கீழ்ப்படியுங்கள்
அவருக்கு உதவி செய்யுங்கள்
அவர்களை பெருமைப்படுத்துங்கள்

### கல்வி

கல்வியை கற்க ஆசைப்படுங்கள்
அதை முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள்
அதற்கு போதிய நேரம் ஒதுக்குங்கள்
கற்றதை மற்றவர்களோடு பகிருங்கள்
கற்றவர்களைப் பின்பற்றுங்கள்




### ஒழுக்கம்

அன்றாட நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துங்கள்
எச்சூழலிலும் உண்மையை மட்டும் பேசுங்கள்
வரவு செலவில் நேர்மையாயிருங்கள்
தாழ்ச்சியோடு பிழைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்
தன்மானத்தோடு வாழப் பழகுங்கள்

1. செபம்
2. கல்வி
3. ஒழுக்கம்
4. விளையாட்டு
5. பணி

### ஞானம்

நல்லோர், தீயோரை இனம்காணுங்கள்
நல்லோரை நாடுங்கள், தீயோரிடமிருந்து விலகுங்கள்
தெரியாதோரிடம் எச்சரிக்கையாயிருங்கள்
உண்மை, பொய்மை பிரித்தறியுங்கள்
பக்கச் சார்பற்ற நீதியைக் கடைப்பிடியுங்கள்.



தொடரும்

## அறிந்து கொள்ளுங்கள்

- ✖ பிரித்தானிய நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம் **வெஸ்ட் மினிஸ்டர்**
- ✖ உலகின் மிக பழைமையான பாராளுமன்றம் உள்ள நாடு **இங்கிலாந்து**
- ✖ முதலாவது அரசியலமைப்பை அறிமுகப்படுத்திய நாடு **பிரித்தானியா**
- ✖ டொனமுர் அரசியலமைப்பு ஆரம்பமான ஆண்டு **பிரித்தானியா**
- ✖ இலங்கையின் முதலாவது ஜனாதிபதியின் பெயர் **எட்மன்ட் கொட்ரிங்டன் கிரின்டன்**
- ✖ இலங்கையின் ஒலிவர் குணத்தில்லாக்காவிற்கு பின் ஆளுநராக பதவி வகித்தவர் **வில்லியம் கொப்பல்லா**
- ✖ சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலப்பான சோல்பரி அரசியலமைப்பின் சிற்பி **ஐவர் ஜெனிங்ஸ்** ஆவர்.
- ✖ இலங்கையின் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தராக 1942 - 1955 வரை கடமையாற்றியவர் **ஐவர் ஜெனிங்ஸ்**
- ✖ உலகத்தைக் கலக்கிய சர்வதிகாரி **பெனிட்டோ முசோலினி** ஆவர்.

ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12

## "உன்னைத் தூக்கிக்கொண்டு நடந்தேன்"

**ENNIFER JILL SCHWIRZER** என்ற கவிஞர் எழுதிய "காலடித்தடங்கள்" (Footsteps) என்ற கவிதையின் சுருக்கம் இது: மனிதன் ஒருவன், தன் வாழ்க்கைப் பயணத்தைத் திருப்பிப்பார்க்கிறான். பயணத்தில் கடவுள் தன்னோடு நடந்து வந்ததற்குச் சான்றாக, பாதையில் இரு ஜோடி காலடித் தடங்கள் பதிந்திருந்தன. அவனுக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அந்தப் பாதையில், ஒரு சில நேரங்களில், ஒரு ஜோடி காலடித் தடங்களே இருந்ததைப் பார்க்கிறான். நினைவுபடுத்தி பார்த்தபோது, அந்த நேரங்களெல்லாம் அவன் அதிக துன்பத்தோடு போராடிய நேரங்கள் என்று கண்டுபிடிக்கிறான். உடனே அம்மனிதன் கடவுளிடம், "துன்ப நேரத்தில் என்னைத் தனியே தவிக்க விட்டுவிட்டு போய்விட்டீர்களே. இது உங்களுக்கே நியாயமா?" என்று முறையிடுகிறான். "மகனே, பெரும் துன்பங்கள் வந்தபோது ஒரு ஜோடி காலடித் தடங்களே இருப்பதைப் பார்த்துவிட்டு அவசர முடிவேடுத்துவிட்டாய். அந்த நேரத்தில் உன்னைவிட்டு நான் எங்கும் போகவில்லை. உன்னைத் தூக்கிக்கொண்டு நடந்தேன்" என்றார் கடவுள்.



# க. பொ.த சாதாரண மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் – 2017

மாணவர் ஒளி

பகுதி 1

1. ஐந்நூலுக்குப் பயன்படுத்தப்படும் வேறு இரு பெயர்கள்
 1) இணைச்சட்டம், எண்ணிக்கை
 2) தோரா, திருச்சட்டம்
 3) நீதிச்சட்டம், பஞ்சாகமம்
 4) லேவியர், இணைச்சட்டம்

2. யூதர்களும் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொண்டுள்ள பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை
 1) 27 நூல்கள் 2) 46 நூல்கள்
 3) 39 நூல்கள் 4) 66 நூல்கள்

3. பழைய ஏற்பாட்டில் ......... பிரதியிலுள்ள 46 நூல்களையுமே கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொண்டது. இடைவெளிக்குப் பொருத்தமான விடை
 1) மசோரோடிக் 3) இணைத்திருமுறை
 2) செப்துவாஜிந் 4) எபிரேய

4. "தெயோபில்" என்ற பெயரின் அர்த்தம்
 1) ஆண்டவரின் நண்பன்
 2) ஆண்டவரின் தூதன்
 3) ஆண்டவரின் சீடன்
 4) ஆண்டவரின் ஊழியன்

5. பவுலின் அறிவுரைகளைக் கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்கள்
 1) எபேசிரியர், கலாத்தியர்
 2) எபேசிரியர், கொலோசையர்
 3) உரோமையர், பிலமோன்
 4) கொலோசையர், கலாத்தியர்

6. A - மக்கபேயர் முதலாம் புத்தகம்
 B - பாரூக்
 C - திருப்பாடல்கள்
 D - சாலமோனின் ஞானம்
 மேலே தரப்பட்ட நூல்களுள் இணைத்திருமுறை நூல்கள் கொண்ட தொகுதி
 1) A யும் C யும் 3) C யும் D யும்
 2) B யும் C யும் 4) A யும் B யும் D யும்

7. இறைவனுடன் உறவு கொண்டு வாழ மனிதன் படைக்கப்பட்டுள்ளான் எனக் கூறியவர்
 1) புனித அகுஸ்தீனார்
 2) புனித பிரான்சிஸ்
 3) புனித அந்தோனியார்
 4) புனித பவுல்

8. "மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்ற பின் இஸ்ரயேல் வீட்டாரிடம் போய்ப் பேசு" என இறைவன் யாருக்கு கூறினார்.
 1) கிறிஸ்துவுக்கு
 2) எபிரேய இறைவாக்கினருக்கு
 3) திருமுழுக்கு யோவானுக்கு
 4) எசேக்கியேல் இறைவாக்கினருக்கு

9. "என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே சிறு பிள்ளை நானே" இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
 1) எசேக்கியேல் இறைவாக்கினரால் ஆண்டவருக்கு
 2) மலாக்கி இறைவாக்கினரால் ஆண்டவருக்கு
 3) எசாயா இறைவாக்கினரால் ஆண்டவருக்கு
 4) எரேமியா இறைவாக்கினரால் ஆண்டவருக்கு

10. வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் ஆட்டுக்குட்டி, அரக்கப்பாம்பு மூலம் அடையாளப்படுத்தப்படுவது
 1) உண்மையும், பொய்மையும்
 2) கீழ்ப்படிவும், தலைமைத்துவமும்
 3) வாழ்வும், இறப்பும்
 4) கிறிஸ்துவும், அலகையும்

11. தாயாம் திருச்சபை திருவழிபாட்டு ஆண்டின் பிரதான காலங்களாக குறிப்பிடப்பட்டுள்ள இரு காலங்களாவன
 1) திருவருகைக்காலம், தவக்காலம்
 2) திருவருகைக்காலம், நத்தார்க் காலம்
 3) திருவருகைக்காலம், பாஸ்காக்காலம்
 4) தவக்காலம். பாஸ்காக்காலம்

12. பின்வருவனவற்றுள் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் தொகுதி
 1) நாத்தான், குல்தா, மீக்காயா
 2) எலியா, எலிசா, செப்பனியா
 3) மீக்காயா, ஒபதியா, எசாயா
 4) நாகூம், யோனா, ஆமோஸ்

13. பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ரயேலர் தம் சொந்தநாட்டிற்கு வந்து சமய, சமூக, புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டமை தொடர்பான விளக்கங்கள் தரப்பட்டுள்ள நூல்
 1) ரூத்து, எஸ்ரா 3) எஸ்ரா,நெகேமிய
 2) ரூத்து,நெகேமியா, 4) எஸ்தர்,எஸ்ரா

14. திருத்தூதர் பணி நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம்
 A. எருசலேமில் நற்செய்திக்கு சான்றுபகர்தல்
 B. கலாத்தியில் நற்செய்திக்கு சான்றுபகர்தல்
 C. யூதேயாவிலும் சமாரியாவிலும் நற்செய்திக்கு சான்றுபகர்தல்
 D. உரோமையில் நற்செய்திக்கு சான்றுபகர்தல்
 மேற்படி கூற்றுக்களின் படி சரியான விடை
 1) A,C 2) A,B 3) A,B, C 4) A,C,D

15. இயற்கைக்கு மாறாக இடம்பெறும் நிகழ்வு புதுமை என..... கூறுகிறார் இடைவெளிக்கு பொருத்தமான விடை
 1) தூய அம்புறோஸ் 3) தூய அகுஸ்தினார்
 2) தூய ஜெரோம் 4) தூய பவுல்

16. "இறைவன் நாம் வழிபடும் ஆலயங்களிலும் பிரசன்னமாக இருக்கின்றார்" எனக் கூறியவர்
 1) இறைவாக்கினர் எசாயா 3) ஆபிரகாம்
 2) இறைவாக்கினர் மலாக்கி 4) தூய லூக்கா

17. மரியாவின் சேனையை ஆரம்பித்தவர்
 1) அதிவணக்கத்துக்குரிய லியோ ஜோசப் ஆண்டகை
 2) அருட்பணி பற்றிக் ஓசானம் அடிகளார்
 3) திரு பிராங்டப் அவர்கள்
 4) தூய அன்னை தெராசா

18. இறைவன் ஆபிரகாமை தேர்ந்துகொண்டது
 1) சிதறிச் சென்ற மக்களை ஒன்று சேர்ப்பதற்கு
 2) புதிய நாட்டைக் கொடுப்பதற்கு
 3) ஒரே கடவுளை வழிப்படுவதற்கு

19. "இயேசு இறைமகனாகிய மெசியா என்னும் நம்பிக்கையை ஏற்படுத்துவது" இது எந்த நற்செய்தியின் நோக்கமாக உள்ளது?
 1) தூய லூக்கா நற்செய்தி
 2) தூய யோவான் நற்செய்தி
 3) தூய மத்தேயு நற்செய்தி
 4) தூய மாற்கு நற்செய்தி

20. குழுமவாழ்வு, செபவாழ்வு, பணிவாழ்வு என்பன
 1) துறவற வார்த்தைப்பாடு
 2) குருத்துவ வாழ்வின் பண்புகள்
 3) தொடக்க கிறிஸ்தவ சபையின் பண்புகள்
 4) துறவற வாழ்வின் பண்புகள்

21. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள்
 1) யோபு, இனிமைமிகுபாடல், திருப்பாடல்கள்
 2) சபைஉரையாளர், சாலமோனின் ஞானம், துன்பமிகுபாடல்
 3) தானியேல், சீராக்கின் ஞானம், நீதிமொழிகள்
 4) சாலமோனின் ஞானம், நீதிபதிகள், எஸ்தர்

22. "இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னையும் நினைவிற்கொள்ளும்" என்று கூறியவர்
 1) அரிமத்தியா ஊர் யோசேப்பு
 2) இயேசுவின் இரு பக்கங்களிலும் அறையப்பட்ட கள்வர்களில் ஒருவன்
 3) மகதலா மரியா
 4) ஆளுநர் பிலாத்து

23. பயிரிடுதல் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் "அபாத்" என்பதாகும். இங்கு அபாத் என்பதன் கருத்து
 1) உழைத்து உருவாக்குதல்
 2) பராமரித்தல்
 3) அதிகாரம் செலுத்துதல்
 4) படைப்பைப் பாதுகாத்தல்

24. தூய மாற்கு யாருடைய மொழி பெயர்ப்பாளராக இருந்தார்?
 1) தூய பவுலின் 3) தூய யாக்கோபுவின்
 2) தூய பேதுருவின் 4) தூய அந்தோனியாரின்

25. உடல் சார்ந்த இரக்கச் செயல்களில் ஒன்று
 1) துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது
 2) அறிவற்றோருக்க கற்பிப்பது
 3) குற்றங்களை மன்னிப்பது
 4) அனாதைகளுக்கு இல்லிடம் அளிப்பது

26. லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று சிறுவருக்கு தேவ அன்னை காட்சியளித்தது.
 1) பாத்திமா நகரில்
 3) லூர்து நகரில்
 2) வேளாங்கண்ணி கிராமத்தில்
 4) பெத்தலகேம் நகரில்

27. திருச்சபையின் முதல் மறைசாட்சியானவர்
 1) தூய ஸ்தேவான் 3) தூய பெரிய யாக்கோபு
 2) தூய சந்தியோகு 4) தூய பவுல்

28. 2001 மாசி மாதம் 21ம் நாள் திருத்தந்தை தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பரினால் கருதினால் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்
 1) திருத்தந்தை பிரான்சிஸ்
 2) திருத்தந்தை 6ம் பவுல்
 3) திருத்தந்தை 10ம் டியுஸ்
 4) திருத்தந்தை 12ம் பியுஸ்

29. முதலாம் கட்டளைக்கு எதிரான செயல்
 1) கிறிஸ்தவனாக கிறிஸ்துவுக்குச் சான்றுபகர மறுத்தல்
 2) அன்றாட நிகழ்வுகளின் போது இறைவனுக்குக் குறை கூறுதல்
 3) புனிதமானவற்றையும் இறைவார்த்தையையும் அவமரியாதையாகப் பயன்படுத்துதல்
 4) பணம், பட்டம், புகழ் உடைமைகளின் பின் செல்லல்

30. திருமுழுக்கு யோவானின் பாலைவனப் போதனையுடன் நற்செய்தியை ஆரம்பித்தவர்
 1) தூய மத்தேயு 3) தூய மாற்கு
 2) தூய லூக்கா 4) தூய யோவான்

31. படைப்புப் பற்றிய இரண்டாம் கதையில் காணப்படும் முக்கியத்துவம்
 1) ஓய்வு நாள் பற்றியது
 2) ஏழு நாட்களுக்குள் அனைத்தையும் படைத்தது பற்றியமை
 3) மனிதனின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டமை
 4) மனிதனுள் காணப்படும் கீழ்ப்படியாமை

32. ஆன்மீக நற்செய்தி நூலாக ------------ விளங்குகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமான விடை
 1) தூய லூக்கா நற்செய்தி
 2) தூய மாற்கு நற்செய்தி
 3) தூய மத்தேயு நற்செய்தி
 4) தூய யோவான் நற்செய்தி

33. துறவற வாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்தவர்கள்
 1) தூய பெனடிக் / தூய ஆசீர்வாதப்பர்
 2) தூய ஜெறோம் / தூய அகுஸ்தீனார்
 3) எகிப்து அநதோனியார் / தூய பசில்
 4) தூய பவுல் / தூய பெனடிக்

34. "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்" ஏனெனில் ---------------------- ------------- மேலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடை
 1) அவர்கள் நிறைவு பெறுவர்
 2) விண்ணரசு அவர்களுக்குரியது.
 3) அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்
 4) அவர்கள் கடவுளைக் காண்பர்.

35. "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்." இவ்வாறு கூறப்பட்டது
 1) இயேசுவால் பேதுருவுக்கு
 2) இயேசுவால் பவுலுக்கு
 3) பவுலால் அனனியாவுக்கு
 4) இயேசுவால் நிக்கதேமுவுக்கு

36. யூதர்களின் மூப்பர் சங்கத்தின் முன் கொண்டு செல்லப்பட்ட இயேசுவை அதன்பின் எங்கே கொண்டு சென்றார்கள்?
 1) ஏரோதிடம்
 2) அரிமத்தியா ஊர் யோசேப்புவிடம்
 3) தலைமைக் குருவிடம்
 4) பிலாத்துவிடம்

37. "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை." என்ற இயேசுவின் திருவாக்கை தன் விருதுவாக்காகக் கொண்டவர்
 1) இயேசு
 2) தூய மக்ஸி மில்லியன் கோல்பே அடிகளார்
 3) தூய யோசவ் வாஸ்
 4) திருத்தந்தை தூய இரண்டாம் அருள் சின்னப்பர்

38. 1973ம் ஆண்டு ஆர்ஜன்டீனாவின் இயேசு சபையின் மாகாணத் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்
 1) திருத்தந்தை 16ம் பெனடிக்ற்
 2) திருத்தந்தை பிரான்சிஸ்
 3) திருத்தந்தை தூய 2ம் யோண் போல்
 4) தூய யோசவ் வாஸ் அடிகள்

➲15 பக்கம்

# ஆசிய இளையோர் தினம் – 2017 ஆவணி 02 – 07




இந்தோனேசியாவின் யோக்யகார்த்தாவில் கடந்த வாரம் 02ஆம் திகதி தொடக்கம் 06ஆம் திகதி வரை 7வது ஆசிய இளையோர் தினம் சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டனர். இவ்விளைஞர்கள் சமூக ஊடகங்களை ஞானத்தோடு பயன்படுத்த உறுதியளித்துள்ளார்கள்.

பிறருக்கு நல்தூண்டுதல்களை ஏற்படுத்தும் முறையில், இறைவார்த்தையைப் பரப்பவும், அதைப் பகிர்ந்துகொள்ளவும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு, இளையோர் தீர்மானித்தனர். 7வது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்ட 21 ஆசிய நாடுகளைச் சேர்ந்த இளையோர் எடுத்துள்ள



இத்தீர்மானத்தை, இந்நிகழ்வின் நிறைவுத் திருப்பலியில், அனைத்து இளையோரின் சார்பாக, இரு இளையோர் வாசித்தனர். தொழில்நுட்பமும், சமூக ஊடகங்களும் இளையோரின் சமூக வாழ்வில் ஓர் அங்கமாக மாறியுள்ளவேளை, காழ்ப்புணர்வு, பகைமை போன்ற எதிர்மறை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாமல், கடவுளின் வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளவும், மற்றவர்க்குத் தூண்டுதலாக வாழவும், இவற்றைப் பயன்படுத்த உறுதி எடுத்துள்ளோம் என, அந்த இரு இளையோரும் அறிவித்தனர்.

மேலும், 7வது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளில், இந்தோனேசிய மிதவாத முஸ்லிம் நிறுவனங்களைச் சார்ந்த, நூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் தங்களின் பங்களிப்பை அளித்துள்ளனர். ஆசிய இளையோர் நாள் நிகழ்வில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கு, திருப்பலி நிறைவேற்றி, மறையுரையாற்றிய ஆயர், ஹென்றி டி சூசா அவர்கள், பன்மைத்தன்மையில் ஒற்றுமை என்பது பற்றி வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கு இடையேயுள்ள அழகு மற்றும், வேறுபாடுகள் பற்றி மறையுரையில் எடுத்துச்சொன்ன பெல்லாரி ஆயர், மக்கள், மொழிகள், கலாச்சாரங்கள், மதங்கள் போன்றவை பன்மைத்தன்மையைக் குறித்து நிற்கின்றன என்றும், வாழ்வின் எல்லாக் கதவுகளையும் திறப்பதற்கு, ஒற்றுமையைச் சாவியாகக் கொண்டிருக்க வேண்டுமென்றும், ஆசிய இளையோரிடம் கூறினார். இந்தியாவின் அறுபது கோடிக்கு மேற்பட்ட இளையோரின் வாழ்த்துக்களையும் தெரிவித்த ஆயர், ஹென்ரி டி சூசா அவர்கள், ஆசியாவின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக, வளர்ந்துவரும் சமய பயங்கரவாதத்தை முறியடிக்க, பொறுப்புணர்வோடு செயல்படுமாறும் கேட்டுக்கொண்டார். இளையோரின் திறமைகள், சக்திகள், கற்பனைகள், தலைமைத்துவம் ஆகியவை, திருஅவைக்கும், ஆசியாவுக்கும் தேவைப்படுகின்றன என்றும் கூறினார், ஆயர் ஹென்ரி டி சூசா.

## வரலாற்றில் முத்திரைப் பதித்துச் செல்லட்டும் இளையோர்

இந்தோனேசியாவில் 6ம் திகதி ஞாயிறன்று முடிவுற்ற ஆசிய இளையோர் தின நிறைவு நிகழ்ச்சிக்கு, திருத்தந்தையின் வாழ்த்துக்களை வெளியிடும் சிறப்புச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், திருப்பீடச் செயலர். 7வது ஆசிய இளையோர் தினத்தையொட்டி, இந்தோனேசியாவின் யோக்யகர்த்தாவில் கூடியிருந்த இளையோரை திருத்தந்தை வாழ்த்துவதுடன், தன் செப உறுதியை தெரிவிப்பதாகவும் திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள்



அனுப்பியுள்ளச் செய்தி கூறுகின்றது. மேலும், ஆசியா முழுவதும் உள்ள இளையோர், இறைவனின் அழைப்புக்கு விசுவாசத்துடனும் மன உறுதியுடனும் பதிலளிப்பதற்கு திருத்தந்தை செபிப்பதாகவும் இச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

வரவிருக்கும் உலக இளையோர் நாள் நிகழ்வுகளுக்கு தங்களைத் தயாரித்துவரும் இளையோர், அன்னைமரியை தங்கள் முன்மாதிரிகையாகக் கொண்டு, அவரிடம் தங்கள் சொந்த தாயைப்போல் பேசி, அவரின் பரிந்துரையில் நம்பிக்கைக் கொள்வார்களாக” என திருத்தந்தை அச்செய்தியில் கூறியுள்ளார்.

“இயேசுவை நெருக்கமாக பின்பற்றுவதன் வழியாக, அன்னைமரியாவைப்போல் உலகை மேம்படுத்த, இளையோர் உதவுவதுடன், வரலாற்றில் தங்கள் முத்திரையைப் பதித்துச் செல்பவர்களாக இருப்பார்களாக” என திருத்தந்தையின் நம்பிக்கையை மேலும் எடுத்துரைக்கிறது, கர்தினால் பரோலின் அவர்களின் செய்தி. பானமாவில் 2019ம் ஆண்டு தை 22 முதல் 27 வரை சிறப்பிக்கப்படவுள்ள உலக இளையோர் தினக் கொண்டாட்டங்களுக்கு தயாரிப்பாக, இம்மாதம் 2ம் திகதி முதல் 6 வரை, இந்தோனேசியாவின் யோக்யகர்த்தா நகரில், 7வது ஆசிய இளையோர் நாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

## அடுத்த ஆசிய இளையோர் நாள் 2020ல் இந்தியாவில்

அடுத்த ஆசிய இளையோர் நாள், 2020ம் ஆண்டில், இந்தியாவில் நடைபெறும் என, ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவரான கர்தினால், ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள் அறிவித்துள்ளார். இந்தோனேசிய நாட்டின் யோக்யகார்த்தாவில் நடைபெற்ற 7வது ஆசிய இளையோர் நாளின் நிறைவுத் திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றிய, மும்பை பேராயர் கர்தினால் கிரேசியஸ் அவர்கள், இத்திருப்பலியின் இறுதியில், 8வது ஆசிய இளையோர் நாள், 2020ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெறும் என அறிவித்தார்.

ஆவணி 06, இஞ்ஞாயிறன்று நடைபெற்ற இத்திருப்பலியில், கர்தினால் கிரேசியஸ், இந்தியத் திருஅவையின் சில அதிகாரிகள், மற்றும், சில இந்திய இளையோர் பிரதிநிதிகள், மூங்கிலால் எளிமையாகச் செய்யப்பட்ட ஆசிய இளையோர் நாள் சிலுவையை, இந்தோனேசிய இளையோரிடமிருந்து பெற்றனர்.



இரண்டு, மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் சிறப்பிக்கப்படும் ஆசிய இளையோர் நாள், முதன் முதலில், 1999ம் ஆண்டில், தாய்லாந்தின் ஹூவா ஹின் நகரில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, இந்நாள், தாய்வானின் தாய்பேய் நகரில் 2001ம் ஆண்டிலும், இந்தியாவின் பெங்களூரில் 2003ம் ஆண்டிலும் நடைபெற்றது. 2006ம் ஆண்டில் ஹாங்காங்கிலும், 2009ம் ஆண்டில் பிலிப்பீன்சிலும், 2014ம் ஆண்டில் தென் கொரியாவிலும், ஆசிய இளையோர் நாள் சிறப்பிக்கப்பட்டது.

யோக்யகார்த்தாவில், ஆவணி 2ம் திகதி ஆரம்பித்த 7வது ஆசிய இளையோர் நாள், ஆவணி 6ம் திகதியோடு நிறைவடைந்தது. இந்நிகழ்வில், 6 கர்தினால்கள், 52 ஆயர்கள், 158 அருள்பணியாளர்கள், 41 இருபால் துறவியர் உட்பட, இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இளையோர், 21 ஆசிய நாடுகளிலிருந்து கலந்துகொண்டனர்.

## இளையோரே, நீங்கள் திருஅவையின் நம்பிக்கை – திருத்தந்தை



“இளையோர், விசுவாசம், மற்றும் அழைப்பை தேர்ந்துதெளிதல்” என்ற தலைப்பில், இளையோரை மையப்படுத்தி, 2018ம் ஆண்டில் 15வது உலக ஆயர்கள் மாமன்றம் வத்திக்கானில் இடம்பெறவுள்ளது.

இம்மாமன்றத்திற்குத் தயாரிப்பாக, 16 வயது முதல், 29 வயது வரையுள்ள இளையோர் அனைவருக்கும் கேள்விகள் அனுப்பப்பட்டுள்ளன. உலகளாவிய சமூகத்தை வளப்படுத்துவதற்கு உலகின் இளையோர் எடுக்கும் முயற்சிகளை அங்கீகரிக்கவும், உள்ளூர் சமூகங்களில் இளையோரின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவுமென, ஐக்கிய நாடுகள் நிறுவனம், ஆகஸ்ட் 12ம் தேதியை, உலக இளையோர் நாளாக அறிவித்து கடைப்பிடித்து வருகிறது.

1991ம் ஆண்டில், ஆஸ்ட்ரியாவின் வியன்னாவில், ஐ.நா. நடத்திய முதல் உலக இளையோர் கருத்தரங்கில் கலந்துகொண்ட, இளையோர் பிரதிநிதிகளின் பரிந்துரையின்பேரில், உலக இளையோர் நாளை உருவாக்கியது ஐ.நா. பொது அவை.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வலட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**6. சமயம் என்பது என்ன?**
மனிதன் இறைவனுக்குக் காட்டும் அன்பு, மதிப்பு, மரியாதையே சமயமாகும். முழு உலகையும் படைத்து, பாதுகாத்து வரும் எல்லா வல்லமையும் நிறைந்த இறைவனை அறிந்து, அன்பு செய்து மதிப்பு மரியாதையும் கொள்வதே சமயமாகும். அதாவது அவரை அன்போடு வணங்கி, வழிபடுவதேயாகும். அனைத்திற்கும் மேலாக அவரது சித்தத்தை நிறைவேற்றுவதாகும்.

**7. சமயம் நமக்கு கொடுத்து நிற்பது என்ன?**
சமயம் நம்மை இறைவன்பால் ஈர்க்கின்றது. விண்ணக பேரின்பத்தை ஒருசில மணித் துளிகளாவது அனுபவிக்க வாய்ப்பளிக்கின்றது.

மனிதன் மகிழ்ந்து வாழ ஏங்குகின்றான். எனினும் நிறைவான மகிழ்வை உலகம் சார்ந்தவற்றின் வழியாக பெற்றுவிட முடியாது. ஆன்மா சார்ந்த நிறைவை, இயலுலகு சார்ந்தவற்றிற்கு அப்பால், இயலுலகு கடந்த தெய்வ சக்தியினூடாகவே அடைந்துவிட முடியும். அச்சக்தியின் வடிவமே இறைவன். எனவேதான் **‘எனது ஆன்மா இறைவனை அடையும் வரை அமைதி கொள்ளா’** என்கிறார் புனித அகுஸ்தினார்.

**8. இறைவன் ஒருவர் இருக்கின்றார் என நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்?**
நம்மைச் சூழவுள்ள அனைத்திலிருந்தும், இயேசு கிறிஸ்துவின் படிப்பினைகளிலிருந்து, இறைவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள இயலும்.

**‘கடவுள் இல்லை’ என அறிவிலிகள் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றனர் அவர்கள் சீர்கெட்டு அருவருப்பான செயல்களில் ஈடுபடுகின்றனர். நல்லது செய்வோர் எவருமே இல்லை. (திபா 14:1)**

**9. நம்மை சூழவுள்ளவற்றிலிருந்து எப்படி இறைவனை அறிந்து கொள்ள முடியும்?**
உறுதியான குறிக்கோளுடன், நேர்த்திவாய்ந்த அற்புதமான ஒழுங்மைப்பைக் கொண்ட நம்மைச் சூழவுள்ள அனைத்திலிருந்தும் நாம் இறைவனை அறிந்து கொள்ளலாம்.

உலகிலுள்ள அனைத்தும் ஓர் அற்புதமான தெளிவான நோக்கத்துடன் செயற்படுகின்றன. ஓர் குறிப்பிட்ட நோக்கமின்றி ஒன்றுமே நடந்துவிடுவதில்லை. அனைத்தும் ஒரு குறிப்பிட்ட விளைவை நோக்கியே இயங்குகின்றன. அதேவேளை ஒவ்வொரு விளைவும் ஒரு காரணத்தை கொண்டுள்ளது. இவ்வாறு இந்த முடிவற்ற காரணப்படுத்தும் சங்கிலிக்கோர்வை தொடர்ந்து செல்லலாம். இறுதியாக எதுவித அல்லது எவராலும் விளைவிக்கப்படாது ஒரு முடிவற்ற நிறைவான காரணத்தை கண்டுணர வேண்டும். அந்த இறுதியான, நிறைவான காரணம், நம்மைப் பிரமிக்க செய்கின்ற இந்த பிரமாண்டமான பூவுலகனைத்தையும், திட்டமிட்டு செயல்படுத்தக் கூடிய ஓர் மிக கூர்மையுடைய ஒருவராக இருக்க வேண்டும் அந்த அறிவாற்றல் உடையவரையே நாம் இறைவன் என அழைக்கின்றோம்.

தற்கால விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பின்படி சூரியன், சந்திரன் கூட நிரந்தமற்றவை. அவை ஓர் ஆரம்பத்தை கொண்டவையாகவும், படிப்படியாக அழிவுறு நிலைக்கு உட்பட்டுவருவதாக இருக்கின்றன. இது இவ்வாறாயின் இவ்வுலக நிலைப்பாட்டிற்கும், பாதுகாப்புக்கும் காரணமாக ஓர் “வல்லமை” நிச்சயமாக செயற்படுகின்றது. மேலும் இந்த “வல்லமை” ஓர் நிலைப்பேறான ஓர் வல்லமையுடையதாகவும், கூர் மதிப்பாற்றலை தன்னகத்தே கொண்டதாக இருக்க வேண்டும். இவ்வாற்றல் திறன் வாய்ந்தவரையே நாம் “இறைவன்” என அழைக்கின்றோம்.

**ஆண்டவர் என் கற்பாறை என் கோட்டை என் மீட்பர் என் இறைவன் நான் புகலிடம் தேடும் மலை அவரே என் கேடயம், எனக்கு மீட்பளிக்கும் வல்லமை, என் அரண். (திபா 18:2)**

**10. நம்மைச் சூழவுள்ளவற்றிற்கும் மேலாக வேறு எவ்வகையிலாவது இறைவனை அறிந்து கொள்ளலாமா?**
அற்புதமான முறையில் இறைவன் வெளிப்படுத்திய செய்திகளடங்கிய புனித விவிலியத்தினூடாக நாம் இறைவனை அறிந்து கொள்ள முடியும்.

**11. திருவிவிலியம் (திருமறைநூல்கள்) என்பது யாது?**
திருமறைநூல்கள் கொடுத்து நிற்பவை யாதெனில் இறைவன், தம்மைப்பற்றி, நம்மைப்பற்றி அவர் நம்மட்டில் கொண்டுள்ள அன்பு, நம்மை மீட்க அவர் கொண்டுள்ள திட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. திருமறை நூலிலும் திருச்சபையின் படிப்பினைகளிலும் இவ்வெளிப்பாட்டை உள்ளடக்கியவையாக உள்ளன. எவ்வாறாயினும் இறைவனை நாம் அறிந்து கொள்வது ஓர் வரையறைக்கு உட்பட்டதாகவே உள்ளது. எனவே இறைவனை நாம் முழுமையாக அறிந்து கொள்ளலாம் என விளைவது ஓர் மட்டுமீறிய நம்பிக்கையாகும். நமது அறிவாற்றலுக்கேற்ப இறைவனை ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம். விண்ணக வாழ்வை நமதாக்கிக் கொள்ள நமக்குத் தேவையானவற்றை இறைவன் தாமே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். விண்ணகத்திலேயே நம் இறைவனை முழுமையாக நாம் அறிந்து கொள்ளலாம்.

**12. திருமறை நூல் என்பது என்ன?**
பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பே திருமறை நூலாகும்.

உரோமை கத்தோலிக்க (Roman Catholism) படிப்பினைகளின்படி விவிலியம் திருமறைநூலாகும். இதோடு இணைந்து புனித பாரம்பரியமும், இறைவனின் ஆட்தன்மை, சித்தம் என்பவற்றின் மூலாதாரங்களை உள்ளடக்கிய இறைவார்த்தையாக அமைகிறது. இவை ஒன்றிணைந்து விசுவாசத்தின் ஒழுக்க வழியாகவும் அமைகிறது (Rule of Faith)

திருமறை நூல் எழுத்துருவம் பெற்ற இறைவார்த்தை என கூற முடியும். இது கிறிஸ்து பிறப்புக்கு முன்னைய காலப் பகுதியை உள்ளடக்கிய 45 பழைய ஏற்பாட்டு நூல்களையும், கிறிஸ்து பிறப்புக்கு பின்னைய 27 புதிய ஏற்பாட்டு நூல்களையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. எனவே விவிலியம் ஒன்றிணைந்து 72 நூல்களைக் கொண்டதாக இருக்கின்றது.

திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே விவிலியம் பாவனையில் இருந்தபோதிலும். அது ஒரு (Canon) கட்டளைக் கோட்பாட்டு நியதிக்குட்பட்ட நூலாக அல்லது பரிசுத்த ஆவியின் உந்துதலுக்குட்பட்ட நூல்களின் வரிசையில் மெய்யான ஆதாரத்தைக் கொண்ட நூலாக திரித்தெந்தீன் சங்கத்தால் 8.4.1546இல் அதிகாரப் பூர்வமாக உறுதி செய்யப்பட்டது.

விவிலியத்துக்கு எழுத்தமைப்புக் கொடுத்தவர்கள் வெறுமனே இறைவன் கையின் கருவிகள். அதன் உண்மையான ஆசிரியர் இறைவன்.

**மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. இவ்வாறு கடவுளின் மனிதர் தேர்ச்சி பெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதி பெறுகிறார். (2 திமோ 3:16-17)**

**13. இறை பாரம்பரியம் என்றால் என்ன?**
வாய்மொழி மூலமாக பகிரப்பட்டு வந்த இறைவனின் படிப்பினைகளே இறை பராமரிப்பாகும்.

விவிலியம் இறை வெளிப்பாட்டின் ஒரு பகுதியை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால், கிறிஸ்துவின் படிப்பினைகளின் பெரும்பகுதி வாய்மொழி மூலமாக அவர் தம் சீடர்களால் பகிரப்பட்டு வந்தது. இவை கத்தோலிக்க திருச்சபையாம் அவர் தம் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இயேசுக் கிறிஸ்து தமது படிப்பினைகளை தவறு, திரிவு இன்றி போதிக்கும் பொறுப்பை தாம் நிறுவிய திருச்சபையை கொண்டு நடத்த தம்மால் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலரிடம் ஒப்படைத்தார். இன்று இப்பொறுப்பானது அப்போஸ்தலர் வழித்தோன்றல்களான கத்தோலிக்க திருச்சபையின் அருட்பணியாளர்களிடம் உறைந்துள்ளது. நாம் இவற்றை சமய உண்மைகள் பற்றி அறிவுரை கூறும் திருச்சபை அதிகாரம் (Magisterium) என அழைக்கின்றோம்.

**வேறுபல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார். அவை எல்லாம் இந்நூலில் எழுதப்படவில்லை. இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன. (யோவான் 20:30-31)**

**14. விவிலியத்திற்கும் இறை பாரம்பரியத்துக்கும் இடையே ஏதாவது தொடர்பு உண்டா?**
ஆம் விவிலியமும் இறை பாரம்பரியமும் இணைந்தே இறைவெளிப்பாட்டை உள்ளடக்குகின்றன. இக்கோட்பாடுகளைப் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு விளக்கி, போதிக்கும் பொறுப்பை திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**15. இறைவன் மனிதனோடு பேசியுள்ளாரா?**
ஆம் இறைவாக்கினர் மூலமாகவும், தமது மகன் இயேசு கிறிஸ்து மூலமாகவும் இறைவன் மனிதனோடு பேசியுள்ளார்.

ஆரம்ப காலத்தில் தாம் தேர்ந்தெடுத்த நபர்களான இறைவாக்கினர் மூலமாக இறைவன் பேசியுள்ளார். காலம் வந்தபோது தமது மகன் இயேசு கிறிஸ்துவை இவ்வுலகுக்கு அனுப்பினார். இயேசு இறைவன் பற்றிய உண்மைகளை எடுத்தியம்பி, தவறின்றி கற்பிக்கும் தம் பணியை தொடர்ந்தாற்ற திருச்சபையை நிறுவினார். இத்திருச்சபையையே நாம் கத்தோலிக்கம் என அழைக்கின்றோம். பரிசுத்த ஆவியின் விசேட அருட்கொடையால், திருச்சபை தவறின்றி செயலாற்ற பாதுகாக்கப்படுகின்றது. “கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளை அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம் உள்ளடக்கியுள்ளது (Apostles Creed)

**பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார் இவர் வழியாக உலகத்தைப் படைத்தார். (எபிரேயர் 1:1-2)**

பாடங்கள் தொடரும்..

## சிந்தனைக்கு



கடவுள் ஒரு நாள் உலகைக் காண
தனியே வந்தாராம் கண்ணில்
கண்ட மனிதரை எல்லாம்
நலமா என்றாராம். அப்படிச்
சிந்தித்துக் கொண்டே வரும்போது
ஒரு பெரிய பணக்காரனைக்
கண்டாராம். பணக்காரரும்
கடவுளை அடையாளம் கண்டு
கொண்டவுடன் பெருமையாக தனது
சொத்துக்களை எல்லாம் பட்டியல்
போட்டுக் கொண்டே போனாராம்.
பொறுமையாகக்
கேட்டுக் கொண்டிருந்த
கடவுள் இறுதியாகப்
பணக்காரரின்
உடம்மைப் தொட்டு
இது எனக்குச்
சொந்தமானது
என்றாராம். பணக்காரன்
வெட வெடத்துப்
போய் நின்றான்.

**தென்றல் காற்றுக்**
**சொந்தமில்லை**
**தேன் பூவுக்குச்**
**சொந்தமில்லை**
**மழை மேகத்துக்குச்**
**சொந்தமில்லை**
**நீர் அருவிக்குச்**
**சொந்தமில்லை**
**நீ உனக்கே சொந்தமில்லை**
**உன்னை நீ பகரும்போது**
**இடைக்கும் இன்பம் தான்**
**உனக்குச் சொந்தம்**



# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 06

## காட்சி 06

சங். டாக்டர் மனுவேல் நூன் போர்மிகோ 5ஆம் காட்சியை செப்டெம்பர் 13ஆம் திகதி 1917ஆம் ஆண்டு நேரில் வந்து பார்த்தார். பல மக்களையும் கண்டு பேசினார். அதே மாதம் 29ஆம் திகதி காட்சி கண்ட குழந்தைகள் மூவரின் வீடுகளுக்கு போய் விசாரணை செய்தார். குருவானவர் கூடுதலான கேள்விகளை லூசியாவிடமே கேட்டார்கள். குழந்தை-களின் பதில்களை கொண்டு அவருக்கு திருப்தி ஏற்பட்டது. குழந்தைகள் மூவரும் உண்மையை தான் கூறுகின்றார்கள் என்று அவருக்கு புலப்பட்டது. அக்டோபர் காட்சியின்போது தானும் அங்கு இருக்க வேண்டும் என்ற முடிவுடன் திரும்பிச் சென்றார். அக்டோபர் மாதம் 12ஆம் திகதி புலர்ந்தது. லூசியாவின் பெற்றோருக்கு ஒரே கவலை. நாளை விடிந்தால் என்ன நடக்குமோ என்ற பெரும் கவலையில் இருந்தார்கள்.

### தேவ அன்னையின் ஆறாம் காட்சி

1917ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி, மாலையில் இருந்து மக்கள் கூட்டம் கோவா டா ஈரியாவில் திரள ஆரம்பித்தது. கடும் புயலும், மழையும் எந்நேரமும் வரலாம். இந்த அறிகுறிகளை கண்டு மக்கள் பின்வாங்குவதாயில்லை.

சிறிது நாட்களாக ஆட்சி பீடமும், தேவ எதிர்ப்புப் பத்திரிகைகளும் மக்களின் விசுவாசத்தை உடைக்கவும், முடிந்த அளவு குறைக்கவும் ஒன்று திரண்டு முயன்றன. நிந்தையும் பரிகாசமும் ஏளனமும் மிகுந்தன. அச்சுறுத்தல்கள் பல பக்கங்களிலும் கேட்டன. "உலகம்" என்ற பிரபல நாளிதழில் திருச்சபை பழிப்புப் பாமரமக்களின் விசுவாசப் பரிகசிப்பும் நிறைந்திருந்தன. எதிர்ப்பிரச்சார துண்டுப் பிரசுரங்கள் எங்கும் விநியோகிக்கப்பட்டன.

ஆனால் விசுவாசம் சந்தேகத்தை விட வலிமை வாய்ந்தது. அன்பு பகையை விட அதிக சக்தியுடையது. இவ்வுண்மையை நிலை நாட்டுவது போல் போர்த்துக்கல் எங்குமுள்ள கத்தோலிக்க மக்கள் எறும்பு ஊர்ந்து வருவதுபோன்று எல்லா திசையிலிருந்து கோவா டா ஈரியாவை நோக்கி நடந்த வண்ணமிருந்தார்கள். கூட்டம் கூட்டமாக ஜெபமாலை ஜெபித்துக் கொண்டு வந்தார்கள். மாமரியை வாழ்த்திக் கொண்டே வழி நடந்தார்கள். மாதா மீது பாடல்களும், பிரார்த்தனைகளும் எங்கும் ஒலித்தன.

இக்கும்பலில் பல நோயாளிகள், பற்பல உடல் நோய்களால் நொந்தவர்கள், நடக்க முடிந்தவர்கள் நடந்தும், நடக்க இயலாதவர்களை மற்றவர்கள் சுமந்துக் கொண்டோ வாகனங்களில் அல்லது பார்ரோ என்ற குட்டையான கழுதை மீது ஏற்றிக் கொண்டு வந்தார்கள். இன்னும் பலர் வேத எதிர்பாளர்களும், இறைவனைக் கூட ஏற்காத நாஸ்திகர், சில பெரிய தனவந்தர்கள் வந்தார்கள்.

### குழந்தைகளின் குடும்பங்களின் நிலை

லூசியா குடும்பமும் பிரான்சிஸ் ஜசிந்தா குடும்பமும் ஒரு மாதிரி வியப்புக்குரியதும், எதிர்பார்ப்பு ஏக்கம் நிறைந்ததுமான, என்னவென்று விவரிக்க முடியாத நிலையில் இருந்தன. லூசியா, பிரான்சிஸ், ஜசிந்தா மூவருக்கும் அன்னை-யின் நினைவும் இயேசுவைப் பார்க்கலாம் என்ற ஆவலும் மிகுந்திருந்தன. அவர்கள் கலங்கவுமில்லை பயங்கொள்ளவுமில்லை. ஆனால் மற்றவர்களுக்கு அந்த இரவு எப்படியோ பயமூட்டுவதாக இருந்தது. அக்டோபர் 13ஆம் திகதி புலர்ந்தது. அன்று சனிக்கிழமை இரு குடும்பங்களும் அதிகாலையில் விழித்துக் கொண்டார்கள். மரிய சோராவுக்கு என்ன செய்வது சொல்வது என்று ஒன்றும் புரியவில்லை. குடும்பத்தில் யாரும் அமைதியாக எதையும் பேசவோ, செய்யவோ முடியாமல் அநேக மக்கள் இவ்விரு வீடுகளையும் முற்றுகையிட்டது போல் வளைந்துக் கொண்டார்கள். காட்சிக் காணும், குழந்தைகளைப் பார்க்கவும் அவர்களுடன் பேசவும் ஏற்பட்ட ஆவலால், மரியாதை சம்பிரதாயம் எதையும் கவனிக்காமல் சும்மா வீட்டினுள்ளே கும்பல் நுளைந்துவிட்டது. மாட்டோ வீட்டிலும் இதே கூட்டமும் சந்தடியும் தான். யாரும் அவர்களைத் தடுக்கவில்லை. அல்யுஸ்திரஸ் கிராம வாசி ஒருவர் மாட்டோவிடம் வந்து மெதுவாக, **'மாட்டோ இன்றைக்கு நீ மட்டும் கோவா டா ஈரியாவுக்கு போக வேண்டாம். ஏதும் தவறு என்றால் உம்மை சனக்கூட்டம் அடித்துக் கொன்றுவிடும். குழந்தைகள் மிகவும் சிறியவர்கள்-யிருந்தப்பதால் அவர்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள்'** என்றான். மாட்டோ மிகவும் தைரியத்தோடு மிகவும் உரத்தக் குரலில் **'நான் வெளிப்படையாகத் தான் அங்குப் போகப் போகிறேன். யாருக்குமே நான் பயப்படவில்லை. எல்லாம் குறிப்பட்டப்படியே நடைபெறும் என்பதில் எனக்கு சந்தேகம் கிடையாது'** என்று கூறினார்.

இதே வேளை ஒரு பணக்கார பெண் லூசியாவிடம் நீலநிற சட்டையும், ஜசிந்தாவிற்கு வெள்ளை நிற சட்டையும் கொண்டு வந்து அதை உடுத்துமாறு வற்புறுத்தினாள். ஆனாலும் சிறுமிகள் இருவரும் அதை மறுத்து விட்டனர். சாதாரண வெள்ளை உடைகளுடன் கோவா டா ஈரியாவை நோக்கிப் புறப்பட்டார்கள்.

### கோவா டா ஈரியாவல்

போகும் வழியெல்லாம் ஒரே கூட்டம். ஒருவர் ஜசிந்தாவை தன் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு, நடந்தார். அவரின் பின்னால் லூசியாவும், பிரான்சிஸும் சென்றார்கள். 13ஆம் திகதி காலையிலிருந்தே ஒரே அடைமழை, மழை எவ்வளவு தான் பெய்தாலும் மக்கள் பின் வாங்காமல் வந்துக்கொண்டே இருந்தார்கள். நாஸ்தீகரும், திருச்சபை எதிரிகளும் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தார்கள். போர்த்துக்கலின் எல்லா பத்திரிகை நிருபர்களும் வந்திருந்தார்கள். சில குருக்களும், காணப்-பட்டார்கள் அந்த அஸின்ஹோரா மரத்தடிக்கு குழந்தைகள் மூவரும் வந்து சேர்ந்தார்கள். அம்மரத்தை பூக்களால் மரிய கொரெய்ரா என்ற பெண் அலங்கரித்து வைத்திருந்தாள்.

மழையின் இறைச்சலை விட செபமாலை சொல்லும் சத்தம் எங்கும் கேட்டுக் கொண்டிருந்தது. எல்லோரின் கண்களும் அஸின்ஹோரா மரத்தையும் அதனரு-கிலிருந்து மூன்று குழந்தைகளையும் நோக்கியிருந்தன.

அஸின்ஹோரா மரத்தருகே முந்திய இரவு முதல் ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு குரு லூசியாவிடம் தேவ தாய் வரும் நேரம் எது என்று கேட்டார். **'நடுப்பகல்'** என்றால் லூசியா. **'நடுப்பகலாகின்றது தேவதாய் என்றால் பொய் கூறமாட்டார்கள். பார்ப்போம்** என்றார்.

செபமாலையின் ஒலி எங்கும் ஒலித்துக் **கொண்டே இருந்தது.**

**'எல்லோம் குடைகளை மடக்குங்கள்'** என்று சத்தமாக கூறினாள் லூசியா. மழை பெய்த்துக் கொண்டிருந்தது. லூசியாவின் குரலுக்கு எல்லோரும் பணிந்து மள மளவென குடைகளை மடக்கிக் கொண்டார்கள். திடீரென லூசியா **'ஜசிந்தா முழுங்காலிடு அம்மா வருவது தெரிகின்றது. ஒளியைப் பார்க்கின்றேன்'** என்றாள் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மரிய ரோசா தன் மகளிடம் **லூசியா நன்றாகப் பாரம்மா, ஏமாந்து போய்விடாதே'** என்றாள். ஆனால் லூசியா இதை கேட்வில்லை அன்னையின் காட்சியில் மூழ்கிவிட்டாள்.

**'அம்மா உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்'** என்று கேட்டாள் லூசியா. தேவ அன்னை அளவற்ற அன்புடன் பிள்ளைகளைப் பார்த்து, **'இங்கு என் மகிமைக்கென ஒரு ஆலயம் கட்ட வேண்டும். நானே செபமாலை மாதா. ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லி வர வேண்டும். யுத்தம் சீக்கிரம் முடியப் போகின்றது. போர் வீரர்களும் வீடு திரும்புவார்கள்'** என்று கூறினார்கள்.

லூசியா தேவதாயிடம் **'அம்மா உங்களிடம் பல உதவிகள் கேட்க வேண்டியிருக்கிறது, சில நோயாளிகளுக்கு சுகம் பாவிகளுக்கு மனம் திரும்புதல் இன்றும் மற்றவைகள்...'** என்றாள். மக்கள் அவளிடம் சமர்பித்த விண்ணப்பங்களை இவ்வாறு கூறினாள்.

**சிலவற்றை செய்வேன். எல்லாவற்றையுமல்ல. மனிதர்கள் தங்கள் வாழ்வை திருத்த வேண்டும். தங்கள் பாவங்களுக்கு அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும்.** தொடர்ந்து பேசுகையில் தேவதாயின் முகம் வாடி மிகத்துயரத்துடன் **'ஏற்கனவே மிகவும் நொந்து போயிருக்கும் நமதாண்டவரை மனிதர்கள் இதற்கு மேலும் நோகச் செய்யக் கூடாது** என்றார்கள். இதுவே நமது அன்னை 06ஆம் காட்சியில் பேசிய கடைசி வார்த்தைகள் முகம் வாடி மிக துயரத்துடன் கூறிய வார்த்தைகள்.

**(இறுதிக் காட்சியில் இடம் பெற்ற நிகழ்வுகள் அடுத்த இதழில் தொடரும்)**

## புனித ஜான் யூட்ஸ் (St. John Eudes)

ஜான் யூட்ஸ் 1601ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். பக்தியுள்ள கிறிஸ்தவர். சிறு வயதிலேயே நற்கருணை பெற்றார். மிகவும் தாழ்ச்சியுடன் ஒப்புரவு அருட்சாதனம் அடிக்கடி பெற்று வந்தார். சிறுவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக வளர்ந்தார். அன்னை மரியாவிடமும், இயேசுவிடமும் மன்றாடி தன் கற்பை அர்ப்பணித்து, பாதுகாத்து வந்தார். பாரிசு நகரில் இயேசு சபை குருக்களிடம் கல்வி பயின்று தேர்ந்தார். குருவாகி மறைப்பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் இதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்ததால் "பிரெஞ்ச் ஆரட்டரி" என்றழைக்கப்பட்ட சபையில் சேர்ந்து, குருத்துவப் பயிற்சி பெற்றார். தியானங்கள் கொடுப்பதிலும், செபிப்பதிலும் வல்லவர். பல மணி நேரம் இறைவனோடு ஒன்றித்து செபித்தார்.

20 டிசம்பர் 1625இல் குருப்பட்டம் பெற்றார். பங்குகளில் பல ஆண்டுகள் பணியாற்றினார். மறைப்பணியாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். சிறந்த மறைப் பணியாளர்களை உருவாக்கினார். வழிதவறி அலைந்த பெண்களை ஒன்றுதிரட்டி நல்வழிகாட்டி, வாழ்வை மாற்றி அமைத்தார். இயேசு மரியா சபை (Congregation of Jesus and Mary) என்ற ஒரு துறவற சபையை நிறுவினார். மக்களுக்கு பொது தியானங்கள், மறையுரைகள் நிகழ்த்துவது, குருத்-துவக் கல்வி நிலையங்களை நடத்துவது, குருக்களுக்கு தியானங்கள், அருளுரைகள் வழங்குவது, இந்தச் சபையைச் சேர்ந்த குருக்களின் பணி, பெண்களுக்கு "கருணை அன்னை மரியாவின் சபை" (The Order of Our Lady od Charity) என்ற 15 துறவற சபையை ஏற்படுத்தினார்.



## 03 திருமுழுக்கு யோவான்

திருமுழுக்கு யோவான் சிறையிலிருந்தபோது இயேசுவின் நற்செய்திப் பணி பற்றி கேள்விப்படுகிறார். அரசியல் நோக்கமேமின்றி அன்பான கனிவான இயேசுவின் பணி பற்றி விளக்கம் தேடினார் இதனால் தமது சீடர்களுள் சிலரை இயேசுதான் உண்மையாக வரப்போகின்ற மெசியாவா? என்று தெரிந்து வர அனுப்பினார். இயேசு அவர்களிடம் தாம் செய்வதையும் போதிப்பதையும் யோவானிடம் கூறும்படி பதிலனுப்பினார்.

யோவானின் மீது ஏரோதுக்கு பயம் இருப்பினும் அவரை நேர்மையானவராகவும் தூய நெஞ்சத்தவராகவும் மெச்சினார். சிறையில் யோவான் போதிப்பதை சில முறை கேட்டும் இருக்கிறார். இருப்பினும், அவருடைய பிறந்த நாள் விருந்தின்போது ஏரோதியாளின் மகள் சலோமி கொடுத்த அவசரத்தனமான வாக்கினால் யோவானின் உயிரை விரயமாக்கினார். யோவானின் தலை துண்டிக்கப்பட்டு ஏரோதியாளிடம் கொடுக்கப்பட்டது. தூய ஜெரோம் அவள் யோவானின் தலையை பலகாலமாக வைத்து அவ்வப்பது அவரின் நாக்கினை கத்தியால் குத்தி மகிழ்ந்ததாக கூறுகிறார். மரபின்படி யோவான் சாக்கடல் ஓரமாக இவரின் தலை வெட்டப்பட்டு இவரது உடல் சமாரியாவில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இயேசுவின் பகழ் எங்கும் பரவுவதைப் பார்த்து ஏரோது திருமுழுக்கு யோவான் தான் மீண்டும் உயிர் பெற்று வந்ததாக அச்சமுறுகின்றார்.

பழைய ஏற்பாட்டு இறைவாக்கினருள் இறுதியானவர் யோவான் புதிய ஏற்பாட்டு கதாபாத்திரங்களில் வித்தியாசமானவர். இவருடைய பணிக்கு மக்கள் மிக அருமையாக பதிலளித்தனர். பல்வேறு மக்களினத்தாரும் இவரது போதனையால் மனம் மாறி மீட்பின் வருகைக்காக ஆயத்தம் செய்து கொண்டனர். இவரது உள்ளீடு எலியா இறைவாக்கினரது பண்புகளைக் கொண்டிருந்தது. எலியாவைப்போல் உள்ளது உள்ளது போல் பேசும் தன்மை கொண்டிருந்தார் யோவான். பிறரைக் கண்டு அச்சமின்றி பேசியவர் ஏரோது மன்னனையும் விட்டுவைக்கவில்லை. இவர் தனித்து நின்றவர் அச்சமின்றி போராடி உண்மையை வலியுறுத்தியவர் திருமுழுக்கு யோவான்.

யோவான் மக்கள் முன் பணியுரைக்கு முன் பாலைவனத்தில் இருந்தார். இது அவருடைய அரசியல், ஆன்மீக அறநெறி பாலைவன நிலையைக் குறிப்பதாக உள்ளது. மனமாற்றத்திற்கு அழைப்பு தரும் போதகரின் வாழ்க்கைத் தரம் இவரிடம் தென்பட்டது. இவர் தாம் மெசியா அல்ல மாறாக வரப்போகின்றவரின் பாதையை ஆயத்தம் செய்பவன் என்பதைத் தெளிவாய் தெரிந்தும் அறிவித்தும் வந்தார். தனது உடைமையிலும் உடையிலும் எளிமையைக் கையாண்டார். இயேசு மனிதரில் யோவான் சிறந்தவர் என்று மொழிந்ததில் அவரின் பெருமையும் மகத்துவமும் விளங்கும்.

திருமுழுக்கு யோவான் விசித்திரமான ஒரு மித்த சிந்தனை கொண்ட மனிதராய் இருந்தார். தமது பணியென்ன என்பதையறிந்து அதைத் தெளிவுற அரங்கேற்றம் செய்தார். தமது முழு முயற்சியையும் இதற்கென கொடுத்தார். இவருக்கென்று அதிகாரமோ அந்தஸ்தோ ஆதிக்கமோ இல்லையெனினும், அவருடைய போதனையில் அதிகாரமும் ஆணித்தரமும் இருந்தது. அவருடைய வார்த்தையில் இருந்த உண்மையைப் பலரும் உணர்ந்தனர். இதனால் புது வாழ்வையும் வாழ்வின் உயர்தன்மையையும் அறிந்து மனம்மாறினர். மக்கள் கூட்டம் இவரை நாடி வந்தாலும், இவர் இயேசுவையே முன்னிறுத்தி பேசினார். எனவே உண்மையை நன்குணர்ந்த நேர்மையான போராளி திருமுழுக்கு யோவான்.

## 01 மருத் திருப்பதியில்...

முக்கியம் பெறுகின்றது. Simple Faith Practical Faith எம்மிடம் இருக்க வேண்டும். நவீன, விஞ்ஞான விசுவாசம் எதற்கும் உதவப் போவதில்லை. நாம் இறைவனின் பிள்ளைகள் என்பதை எமது செயற்பாட்டின் மூலம், அவரது திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் காட்டவேண்டும். இதைத் தவிர்த்து ஆண்டவரே ஆண்டவரே என்போர் விண்ணரசில் நுழைய மாட்டார்கள் என்று நாம் விசுவாசத்தோடு தண்ணீர் கேட்டும் என்று கேட்போம். அன்னை எமக்குத் தேவையானதிற்கு அதிகம் தந்திருக்கின்றார். எனவே பரம திருத்துவத்தில் நம்பிக்கை வைப்போம். விசுவாசம் கொள்வோம். எனவே தற்காலிக சுகபோகங்களை நாடுவதைத் தவிர்த்து நிறைவான ஆன்மீக வாழ்வை வாழ்வோம். அதனை விசுவாசத்தோடு வாழ்வோம். விசுவாசம் அற்றவர்கள் குருடர்களுக்குச் சமம். அவர்கள் தங்களை மட்டுமே அன்பு செய்வார்கள். இதைத் தவிர்த்து அன்னை மரியாளைப் போல் விசுவாசத்தோடு வாழுவோம் என்று தன் மறையுரையை முடித்தார்.

இத்திருநாட்த் திருப்பலியில் தமிழில் யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அதிமேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மறையுரை வழங்கினார். அதிலே எலிசபெத்தம்மாளைச் சந்தித்த மரியன்னை தன்னுடைய அன்பைக், கரிசனையை வெளிக்காட்டியபோது எவ்வாறான மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகியதோ அதேமாதிரியான சூழ்நிலை இன்று உருவாகியிருக்கின்றது. மழையில்லாமல் வரட்சியாக இந்தப் பிரதேசம் காட்சியளித்தது. ஆனால் இன்று மழை பெய்து குளிர்ச்சியான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இது மருதமடு அன்னையின் அற்புதமான புதுமை எனலாம். மருதமடுத் திருப்பதியை அண்டிய பகுதியில் மட்டுமே இந்த வரலாறு காணாத மழை பெய்துள்ளது. இது அன்னையின் பக்தர்களுக்கு அவர் மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு அன்னை வழங்கிய விசேட ஆசீர்வாதம் எனலாம்.

திடீரென மழை பெய்து மடுத்திருத்தலமே வெள்ளத்தில் மூழ்கிய நேற்றைய நாளில் திருவிழா நடைபெறுமா? எனும் அச்சம் பக்தர்கள் மத்தியில் சூழ்ந்திருந்த வேளையில் மருதமடு அன்னையின் அருளால் எதிர்பாராத விதமாக மழை ஓய்ந்து இயற்கை அமைதியானது. மக்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும் பெரு மனநிம்மதியையும் ஏற்படுத்தியுள்ளது. கானான் ஊர் திருமண விருந்தில் இரசம் பற்றாக்குறையானபோது அவர்கள் சென்று மரியன்னையிடம் முறையிட்டபோது மரியன்னை கூறுகின்றார். அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்று. இந்த விசுவாசம் எம்மிடம் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். நேற்றைய சம்பவத்தின் மூலம் அன்னையின் மகிமை மேலும் எங்கள் மத்தியில் மேலோங்கியது. இதேபோன்றுதான் அன்றும் கானாவூரில் நிகழ்ந்தது. அதுமட்டுமல்லாது இன்றும் எமக்கு பரிந்துரை பேசிக்கொண்டிக்கின்றார். எனவே தான் இவ்விண்ணேற்பு விழா எமக்குப் பெரும் சவாலாக இருக்கின்றது. நாம் கட்டிக் காக்கின்ற, அலங்கரிக்கின்ற உடல் ஒருநாள் இறக்கத்தான் போகின்றது. எனவே நாம் இறைவனோடு வாழ அழைக்கப்படுகின்றோம். அதற்கு நாம் அவர் சொல்வதையெல்லாம் செய்ய வேண்டும் என்று அன்னை நமக்கு கூறுகின்றார். அப்போது எமக்கு ஏற்படும் அனைத்து துன்பங்களிலும் அவர் பாதுகாவலியாக இருந்து எம்மைக் காப்பாள் என்று குறிப்பிட்டார்.

இறுதியில் திருச்சுரூப பவனியும் அதனைத் தொடர்ந்து சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. இவ்வாண்டுத் திருவிழாவிலே சுமார் 7 இலட்சம் பேர் கலந்து அன்னையின் ஆசீரைப் பெற்றனர் எனலாம்.

**தகவல் : R. ஜோசப் ஜெயகாந்தன்.**

## 01 இனங்களுக்கிடையே

மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் அண்மையில் கட்புல மற்றும் அரங்கக் கலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அப்பல்கலைக்கழக விரிவுரையாளரான ஜூலம்பிட்டியே மங்கள தேரர் அவர்களால் எழுத்தாக்கம் செய்யப்பட்ட "தெமல கிரியா பத விமர்ஷன" (தமிழ் வினைச்சொற்களின் விமர்சனம்) என்னும் நூல் வெளியீட்டு விழாவினை தலைமையேற்று உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அன்றைய தினம் எதிர்கட்சி தலைவர் ஆர் சம்பந்தன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி திரு மைந்த ராஜபக்ஷ அவர்களுடன் பாராளுமன்ற அமைச்சர்கள், ஏராளமான பௌத்த மதத் தேரர்கள் பங்குபற்றியிருந்த இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஆண்டகை அவர்கள் "சிங்களவர் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்று அறிந்திருப்பதன் வழியாக இனங்களுக்கிடையேயான ஒன்றிணைப்பையும், உறுதுணையையும், சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்த மிகப் பெரிய பங்களிப்பையும் அளிக்கும். அத்தோடு மீண்டும் ஒருமுறை இந்நாட்டில் யுத்தக்கலவரங்கள் ஏற்படாமலிக்கவும், சமாதானமும், அமைதியும் நிறைந்த நாடாகக் இந்நாட்டைக் கட்டியெழுப்ப இம்மொழிகளைக் கற்பதன் வழியாக நாம் அனைவரும் கரக்கோர்க்க வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் உரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

**தகவல் மற்றும் படங்கள் ரீ சுனில் பர்னாந்து மற்றும் ரொஷான் பிரதீப்**

## 11 க.பொ.த சாதாரண...

39. எந்த ஒருவரும் தமது வாழ்நாள் முழுவதும் கவனியாதுவிட்ட எதையும் அவரின் மரணத் தறுவாயில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது எனக் கூறியவர்
    1) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள்
    2) திருத்தந்தை தூய இரண்டாம் யோண் போல்
    3) தூய அன்னை திரேசா
    4) தூய யோசவ் வாஸ் அடிகள்

40. உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக ---------- மேலே உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடை
    1) நன்மை செய்யுங்கள்
    2) இறைவனிடம் வேண்டுங்கள்
    3) தீமை செய்யுங்கள்
    4) செபியுங்கள்

## 14 புனித ஜான் யூட்ஸ்

அதிலிருந்து "நல்லாயன் கன்னியர் சபை" (Good Shepherd Sister) உருவானது.

1627 மற்றும் 1631இல், பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து வந்தார். அவர்களை அன்போடு பராமரித்து காத்தார். இயேசுவின் திரு இருதய பக்தியையும், மரியாவின் மாசற்ற இதய பக்தியையும் ஊக்குவித்து வளர்த்தார்.

புனித மார்கரீத் மரியா பிரான்ஸ் நாட்டில் திருஇருதய ஆண்டவரிடம் காட்சி பெறுவதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே தன் துறவற இல்ல ஆலயத்தில் திரு இருதய ஆண்டவரின் விழாவை கொண்டாடினார். அவர் குருமடத்தில் இருந்த காலத்தில் அனைவருக்கும் முன்மாதிரிகையான வாழ்வை தன் செபத்தின் வழியாக வாழ்ந்து காட்டினார்.

மறைப்பணியின்போது, பல தியானங்கள், கொடுப்பதன் வழியாக பலருக்கு ஆறுதல்படுத்தும் பணியையும், குணமளிக்கும் பணியையும் நற்செய்திப் பணியையும் ஆற்றினார். இதன் பலனாக எண்ணிலடங்காக மக்களை இறைவழி நடத்தினார்.


மரியாவின் மாசற்ற இருதய பக்தியை உலகத்தில் பரப்ப அடித்தளம் அமைத்தார். தன்னுடைய 20 ஆண்டுகால ஆராய்ச்சியின் விளைவாக இயேசுவின் திரு இருதயமும் மரியாவின் மாசற்ற இருதயமும் முழுவதுமாக ஒத்த இருதயங்கள் எனக் கண்டுபிடித்தார். 1917ஆம் ஆண்டு அன்னை மரியா பாத்திமா நகரில் காட்சி கொடுத்தபோது அன்னையின் மாசற்ற இதயமே பாத்திமா செய்திகளின் மையமாக இருந்தது. இதனால் மரியாவின் மாசற்ற இதய பக்தி முயற்சிகள் இன்னும் சிறப்பாக வளர்ந்தன. இயேசு கிறிஸ்துவின் தாய் மரியாவிடம் பக்தியில்லாத ஒருவன் உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்பார்.

மரியாவின் மாசற்ற இருதய பக்தி முயற்சிகள் 1952ஆம் ஆண்டு ஆடி 7ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பயஸால் அங்கீகரிக்கப்பட்டது. மரியாவின் மாசற்ற இருதய விழாவை இயேசுவின் திரு இருதய பெருவிழாவிற்குப் அடுத்து வரும் சனிக்கிழமை அன்று உலகம் முழுவதும் கொண்டாடத் திருத்தந்தை பணித்தார்.

1680ஆம் ஆண்டு ஆவணி 19 அன்று மரித்து விண்ணகம் சேர்ந்தார். "இயேசு மரியா திரு இருதயங்களின் தந்தை. அறிஞர் திருத்தூதர்" எனப் புனிதரை அழைத்த திருத்தந்தை 10ஆம் பயஸ் இவருக்கு சித்திரை 25ஆம் 1909 முக்திபேறு பட்டம் அளித்தார். திருத்தந்தை 11ஆம் பயஸ் 31 வைகாசி 1925ஆம் ஆண்டு புனிதர் பட்டம் வழங்கினார்.

## மேடையில் மட்டும்தான் அன்பா?

அன்று ஆகாஷ் அன்பைப் பற்றி, நகைச்சுவை கலந்து மேடையில் சொன்ன ஒவ்வொரு கருத்தையும் கேட்ட பார்வையாளர்கள், அரங்கமே அதிரும்படி கைதட்டிக் கொண்டிருந்தார்கள். பார்வையாளர்களின் கைதட்டல் தந்த உற்சாகத்தில் ஆகாஃக்கு, அவரையும் அறியாமல் கருத்துக்கள் ஊற்றெடுத்துவர, சிறப்பாக உரையாற்றி முடித்தார். கூட்டம் முடிந்ததும், அரங்கத்தில் பலர் ஆகாஷிடம் வந்து கைகுலுக்கி வாழ்த்திவிட்டுச் சென்றார்கள். கூட்டத்திலிருந்து, முதியவர் ஒருவர் ஆகாஷிடம் வந்தார். "தம்பி, நீங்க நல்லாப் பேசினீங்க. அன்பைப் பற்றி எவ்வளவு அழகாச் சொன்னீங்க. சுயநலம் பெருகிவிட்ட இந்தக் காலத்துல உங்களை மாதிரி அன்பைப் பற்றி எடுத்துச் சொன்னாதான் மத்தவங்களுக்குப் புரியும்.." என்று சொல்லிப் பாராட்டினார். பின் ஆகாஷ் அவரிடம், ஐயாவுக்கு எந்த ஊர்? என் சொற்பொழிவை இதற்கு முன்னாள் கேட்டிருக்கீறீர்களா?" எனக் கேட்டார். "இல்லை தம்பி.. நான் வெளியூர். வரன் பார்க்கிற விஷயமா இங்கே வந்தேன். எங்க ஊருக்கு ராத்திரிதான் பஸ். அதுவரைக்கும் நேரம் போகனுமேன்னு இங்கே வந்தேன்!" என்று சொன்னார் முதியவர். "ஐயா, உங்கள் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறீர்களா?" எனக் கேட்டார் ஆகாஷ். என் பொண்ணுன்னே வெச்சுக்கோங்களேன். என் அண்ணன் பொண்ணு. அண்ணன் சின்ன வயசுலயே விபத்துல போய்ட்டார். அவரோட ரெண்டு பொண்ணுக, ஒரு பையன் எல்லாரையும் நான்தான் வளர்த்தேன். எல்லாரையும் படிக்கவெச்சு ஆளாக்கி, ரெண்டுபேருக்கு கல்யாணமும் பண்ணி வெச்சுட்டேன். கடைசிப் பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடிட்டிருக்கேன். மாப்பிள்ளை பையன் இந்த ஊர்லதான் டீச்சரா இருக்கார்னு தெரிஞ்சு பார்த்துட்டுப்போக வந்தேன். இனிதான் என் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யணும்" என்று பெரியவர் சொல்லிவிட்டு நகர்ந்து செல்ல, சுருக்கென்று இருந்தது ஆகாஃக்கு. அண்ணன் பிள்ளைகளை, தன் பிள்ளைகளாய் வளர்த்து ஆளாக்கிய இந்தப் பெரியவர் எங்கே? சொந்த அம்மாவை தன்னுடன் வைத்திருந்தால் சுதந்திரம் இருக்காது என்று, என்னைவிட வசதியற்ற தம்பியின் வீட்டுக்கு அனுப்பிவிட்ட நான் எங்கே? அன்பு என்பது மேடையில் பேசுவதற்கு மட்டும்தானா? அது வாழ்க்கையில் நாம் காட்ட வேண்டிய உணர்வு அல்லவா?" இவ்வாறு சிந்தித்த ஆகாஷ், வயது முதிர்ந்த தன் அம்மாவைத் தன்னுடன் அழைத்துவரத் தீர்மானித்தார். மறுநாளே அம்மாவை அழைத்துவந்ததோடு, மேடையில் அன்பு பற்றிப் பேசுவதைக் குறைத்துவிட்டு, பொதுச்சேவையில் ஈடுபடுவதற்கும் தீர்மானித்தார்.




# சிறுநீரக கற்களின் அறிகுறிகள்!

## குணப்படுத்த உதவும் மருத்துவ முறைகள்...!

சிறுநீரகத்தில் சேரக்கூடிய அதிகப்படியான கனிம சத்துக்களும், உப்பும் கற்களாக மாறிவிடும். இந்த கற்கள் சிறுநீரகத்தின் உள்ளே இருக்கும் போது எந்த ஒரு அறிகுறியையும் வெளிபடுத்தாது. ஆனால், இது சிறுநீரகப் பாதையை நோக்கி நகரும் போது அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும். திடப்பொருளாக மாறக்கூடிய பொருட்கள் சிறுநீரகத்தில் கற்களாக மாறுகின்றன. இப்படி கற்கள் சிறுநீரகத்தில் சேர்வதற்கு ஒருவரது வாழ்க்கை முறையும், உணவு பழக்கவழக்கமும் தான் காரணம்.

அந்த பிரச்சினை ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றால், ஆட்டு இறைச்சி, ஷெல் மீன் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். மேலும் குறைவான அளவில் மாமிச வகை புரோட்டின்கள், அதிக அளவில் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை சாப்பிடுவதன் மூலம் சிறுநீரகத்தில் கற்கள் சேர்வதைத் தடுக்கலாம். சிறுநீரக கற்கள் உருவத்தில் வேறுபட்டிருக்கும். சிறியதாக இருந்தால் சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். பெரிய கற்களாக இருந்தால் வலி ஏற்படுவதோடு வேறு சில அறிகுறிகளையும் ஏற்படுத்தும்.

**சிறுநீரகத்தில் கற்கள் இருப்பதை காட்டும் அறிகுறிகளையும் இதற்கான மருத்துவ முறைகளையும் பார்ப்போம்.**

முதுகு அல்லது அடிவயிற்றில் வலி சிறுநீரக கற்கள் இருந்தால், அது முதுகுப் பகுதியின் ஒரு பக்கம் மற்றும் அடி வயிற்றுப் பகுதியில் கடுமையான வலியை ஏற்படுத்தும். இந்த கற்கள் சிறுநீரக பாதையில் நகர்ந்து செல்லும் போது, வலி இன்னும் தீவிரமாக இருக்கும்.

### சிறுநீரில் இரத்தம்

சிறுநீர் கழிக்கும் போது வலி, எரிச்சல், துர்நாற்றத்துடனான சிறுநீர் மற்றும் இரத்தம் கலந்த சிறுநீர் போன்றவையும் சிறுநீரக கற்கள் இருப்பதற்கான அறிகுறிகளாகும்.

### சரளைக் கற்கள்

சிறுநீரக கற்கள் இருந்தால், கழிக்கும் சிறுநீரில் மிகச்சிறிய அளவிலான சரளைக்கற்கள் இருக்கும். ஆனால் இந்த கற்கள் வலி எதையும் ஏற்படுத்தாது.

### குமட்டல் /வாந்தி

சிறுநீரக கற்கள் இருந்தால், அடிக்கடி குமட்டல் மற்றும் வாந்தி உணர்வை அனுபவிக்கக்கூடும். சில நேரங்களில் காய்ச்சலும் வரக்கூடும். ஹைப்பர்யூரியா சிறுநீரக கற்கள் இருந்தால், அடிக்கடி அவசரமாக சிறுநீர் கழிக்க நேரிடும். இது ஒரு ஆரம்ப கால சிறுநீரக கற்கள் இருப்பதற்கான அறிகுறிகளுள் ஒன்று. தீவிர நிலையில் இருப்பதற்கான அறிகுறி சிறுநீரக கற்கள் முற்றிய நிலையில் இருந்தால், தாங்க முடியாத அளவில் வலி ஏற்படுவதோடு, உட்காரவோ, நிற்கவோ அல்லது படுக்கவோ முடியாமல் அவஸ்தைப்படக்கூடும். முக்கியமாக சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்படக்கூடும்.

## சிறுநீரக கற்களுக்கான சிகிச்சைகள்:

### தண்ணீர்

ஒருவர் தினமும் அதிகளவில் தண்ணீர் குடித்தால், சிறுநீரில் உள்ள அதிகப்படியான கனிமச்சத்துக்கள் சிறுநீரின் வழியே வெளியேற்றப்பட்டு, சிறுநீரக கற்கள் உருவாவது தடுக்கப்படுவதோடு, ஏற்கனவே இருக்கும் சிறுநீரக கற்களும் வெளியேறிவிடும்.

### மருந்துகள்

சிறுநீரக கற்கள் தீவிர நிலையில் இருந்தால், மருத்துவரை அணுகுவது மிகவும் முக்கியம். மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகள் அல்லது மாத்திரைகள், சிறுநீரக பாதையுடன், உடலில் உள்ள தசைகளை ரிலாக்ஸ் அடையச் செய்யும். முக்கியமாக இந்த மருந்து மாத்திரைகள் சிறுநீரக கற்களை உடைத்து, எளிதில் வெளியேறவும் செய்யும்.

### ஷாக்வேவ் லித்தே ட்ரீப்சி

இந்த சிகிச்சை பெரிய அளவில் இருக்கும் சிறுநீரக கற்களைக் கரைக்க மேற்கொள்ளப்படுவதாகும். இந்த இயந்திரத்தின் வழியே உடலில் உயர் அழுத்த ஒலி அலைகள் அனுப்பப்பட்டு, பெரிய அளவிலான சிறுநீரக கற்கள் மிகச்சிறிய அளவில் உடைக்கப்பட்டு, எளிதில் உடலில் இருந்து வெளியேற்றப்படும்.

### இயற்கை வைத்தியங்கள்

எலுமிச்சை சாறு, ஆலிவ் ஆயில் மற்றும் ஆப்பிள் சீடர் வினிகர் கலவை சிறுநீரக கற்களை வேகமாக கரைக்க மிகவும் உதவியாக இருக்கும். அதற்கு எலுமிச்சை சாறு, ஆலிவ் ஆயில் மற்றும் ஆப்பிள் சீடர் வினிகரை ஒன்றாக கலந்து குடித்துவிட்டு, அதனைத் தொடர்ந்து 12 அவுன்ஸ் சுத்தமான நீரைக் குடிக்க




வேண்டும். பின் 1/2 எலுமிச்சையை 12 அவுன்ஸ் நீரில் கலந்து குடிக்க வேண்டும். இப்படி அடிக்கடி குடித்தால், விரைவில் சிறுநீரக கற்கள் கரையும்.

### உவா உர்சி

இது சிறுநீரக கற்களுக்கான ஒரு பாரம்பரிய நிவாரணி. இது சிறுநீரகங்களில் உள்ள தொற்றுக்களைக் குறைக்க உதவுவதோடு, சிறுநீரக கற்களை வெளியேற்றி இதுவரை சந்தித்த அசௌகரியத்தைப் போக்கும். அதற்கு இதனை தினமும் மூன்று வேளை 500 மி.கி எடுக்க வேண்டும்.

### சீமை சாமந்தி வேர்

இந்த வேர் சிறுநீரகங்களைச் சுத்தம் செய்ய உதவும் மற்றும் சிறுநீரகங்களின் சாதாரண செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும். சிறுநீரக கல் பிரச்சினையில் இருந்து நல்ல தீர்வை விரைவில் பெற தினமும் இருவேளை 500மிகி இதனை எடுக்க வேண்டும்.

### கிட்னி பீன்ஸ்

கிட்னி பீன்ஸில் மக்னீசியம் ஏராளமாக உள்ளது. இது சிறுநீரக கற்களின் அறிகுறிகளைக் குறைக்க உதவும். அதற்கு சிறிது கிட்னி பீன்ஸை கொதிக்கும் நீரில் 6 மணிநேரம் நன்கு கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி, குளிர வைத்து நாள் முழுவதும் குடிக்க வேண்டும்.

### மாதுளை ஜுஸ்

சிறுநீரக கற்கள் இருப்பவர்கள், மாதுளை ஜுஸை தினமும் குடித்து வந்தால், சீக்கிரம் சிறுநீரக கல் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

### செலரி

செலரியில் சிறுநீர் பெருக்கி பண்புகள் உள்ளது. இது சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். அதற்கு செலரியைக் கொண்டு டீ தயாரித்து குடிக்க வேண்டும் அல்லது செலரி விதைகளை உணவில் சேர்க்க வேண்டும்.

### துளசி

துளசி டீ சிறுநீரகங்களின் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும். சிறுநீரக கல் பிரச்சினை இருப்பவர்கள், துளசி டீயை நாள் முழுவதும் குடித்து வந்தால், அது உடலில் கனிமச்சத்து, யூரிக் அமிலம் மற்றும் திரவங்களின் அளவை நடுநிலையாக பராமரிக்கும். அதற்கு ஒரு ஸ்பூன் துளசி ஜுஸ் உடன் சிறிது தேன் கலந்து, தினமும் என ஆறு மாதம் தொடர்ந்து குடிக்க வேண்டும். இதனால் சிறுநீரக பாதையில் உள்ள கற்கள் முற்றிலும் வெளியேறிவிடும்.

**நன்றி : போல்ட்ஸ்கை**

# தேங்காய் பொறை...!



## இதன் நன்மைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

தேங்காய் மற்றும் இளநீரில் உள்ள சத்துக்களை விட, தேங்காயின் உள்ளே பூ முளைத்த அல்லது பொறை வைத்த தேங்காயில் அதிக சத்துக்கள் உள்ளன.

பொறை தேங்காயில் மனித உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து அதிகமாக இருப்பதால், அவை உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை இருமடங்காக அதிகரிக்கச் செய்து, தொற்று நோய்களிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கும் கேடயமாக உதவுகிறது.

பொறை தேங்காயில் உள்ள தாது, விட்டமின் சத்துக்கள் குடலுக்கு வேண்டிய பாதுகாப்பு தந்து, ஜீரண மண்டலத்தை சக்திப்படுத்தி, மலச்சிக்கல் போன்ற பிரச்சினைகள் வராமல் தடுக்கிறது.

தேங்காய் பொறை, இன்சுலின் சுரப்பியைத் தூண்டி இன்சுலின் சுரக்கச் செய்யும் ஆற்றல் கொண்டது.

தேங்காய் பொறையை சாப்பிட்டு வந்தால், இரத்தத்தில் உள்ள அதிக சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தி, நீரிழிவு நோய் வரும் அபாயத்தைத் தடுக்கிறது.

தேங்காய் பொறை, இதயத்தில் படியும் கொழுப்பைக் கரையச் செய்து, இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்கும். இதனால், இதய நோய்கள், உடல் எடை அதிகமாதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறது .

தேங்காய் பொறையைச் சாப்பிடுவதால், தைராய்டு, புற்றுநோய், சிறுநீரகத் தொற்று நோய் போன்ற பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

# தினமும் சோடா குடிப்பவரா நீங்கள்?



## அதற்கான தீமைகளை தெரிந்து கொள்ளுங்கள்!

அனைவரும் விரும்பி குடிக்கும் சோடாவினால், எவ்வளவு ஆபத்தான நோய்கள் ஏற்படும் என்பது உங்களுக்கு தெரியுமா?

சோடா குடிப்பதால் ஏற்படும் தீமைகள் என்ன?

சோடாவை தினமும் குடிப்பதால், இதய நோய்கள் மற்றும் உடல் பருமன் இரண்டு மடங்காக அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றது.

சோடாவில் உள்ள மூலப்பொருட்கள், நரம்பு மண்டலத்தின் வலிமையை விரைவில் இழக்கச் செய்து, நரம்புத் தளர்ச்சி உருவாகும் வாய்ப்பை அதிகப்படுத்துகிறது.

சோடா குடிப்பதால், இரத்த அழுத்த மாறுபாடு, உடலில் அதிக காற்றழுத்தத்தை உண்டாக்கி, தலைவலி, வயிற்றுவலி மற்றும் உடல்வலி போன்ற பிரச்சினையை ஏற்படுத்தும்.

முதுமையில் அல்சீமர் நோய்க்கு ஆளாக்கப்பட்டு, ஞாபக மறதி, மந்தத் தன்மை, வாய் குழறுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும் வாய்ப்பை உண்டாக்குகிறது.

உடலில் அதிகப்படியாக செரடோனின் சுரப்பை தூண்டச் செய்து, ஒருவித ஹைபர் நிலை மற்றும் நிம்மதியற்ற நிலையை உருவாக்கிவிடும்.

சோடாவை மதுவுடன் கலந்து குடித்தால், சர்க்கரை நோய் ஏற்படும். அதுவே ஒரு நாளைக்கு 2 முறைக்கு மேல் சோடா குடித்தால், அது அடிக்கடி தலைசுற்றல், வாந்தி, மயக்கம், போன்ற பல பிரச்சினைகளை ஏற்படுத்தும்.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"மன்னிப்பு, நம் இதயங்களை சுதந்திரமானவைகளாக மாற்றி, நாம் புதிதாக தொடங்க உதவுகிறது. மன்னிப்பு, நம்பிக்கையை வழங்குகிறது. மன்னிப்பு இல்லாமல் திருஅவை கட்டியெழுப்பப்பட முடியாது"

"தன்னை இருளுக்குள் வைத்து பூட்டிக்கொள்ளாமல், கடந்த காலங்களிலேயே வாழ்ந்து கொண்டிராமல், நாளை என்பதை காணவல்ல இதயத்தின் நற்பண்பே, நம்பிக்கை"

"மற்ற மனிதர்கள், குறிப்பாக, அவர்கள் வலிமையற்றவராகவும், நலிந்தோராகவும் இருக்கும்போது, மதிப்போடு ஏற்கப்படவேண்டிய கொடைகள், ஏனென்றால், கிறிஸ்து, அவர்களில் நம்மைச் சந்திக்க வருகிறார்"

"இயேசுவின் பெயரில், நம் சான்று வாழ்வு வழியாக, அமைதி இயலக்கூடியதே என்பதை நம்மால் அறியச் செய்ய முடியும்!"

"இன்றைய காலக்கட்டத்தில் வாழும் கலைஞர்கள், தங்கள் படைப்பாற்றல் வழியே, படைப்பின் அழகை ஒவ்வொருவரும் கண்டுணர உதவவேண்டுமென செபிப்போம்"

"நற்செய்தி, தொற்றிக்கொள்ளக்கூடிய மகிழ்வால் நிறைந்துள்ளது, ஏனெனில், அது புதிய வாழ்வை தன்னுள் கொண்டிருப்பதோடு, அதை வழங்கவும் செய்கிறது"

"ஒவ்வொரு நாள் வாழ்வின் சூழல்களில், பலன்களைத் தேடாமல் நன்மைகளை ஆற்றும்போது, அவை பயன் தருவதாக அமையும்"

"நற்செய்திப் பணியில், தன் சொல்லாலும், வாழ்வாலும் போதித்த புனித தோமினிக் அவர்களுக்காக, இன்று இறைவனுக்கு மகிமையளிப்போம்"

"அன்புள்ள இளையோரே, நீங்கள் திருஅவையின் நம்பிக்கை. உங்களது எதிர்காலம் பற்றி கனவு காண்கின்றீர்களா? அப்படியானால், உலக ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துகொள்ளுங்கள்"

"நம்மை ஏதாவது துன்புறுத்தும்போது, அஞ்சாதே! முன்னோக்கிச் செல்! நான் உன்னோடு இருக்கிறேன்! என, இயேசு நம் இதயங்களில் பேசுவதை உற்றுக்கேட்க வேண்டும்"

"இறைவன் மீதான நம்பிக்கையுடன் நம்மை அவரிடம் ஒப்படைக்கும் நம் பயணம், தினமும் தொடங்குகிறது, அதுவும் ஒவ்வொரு நாள் காலையிலும் தொடங்குகிறது"

பலவீனமானவர்களின் நற்பண்பாக அல்ல, மாறாக, தான் பெரியவன் என்பதை காட்டுவதற்காக, மற்றவர்களை கீழ்த்தரமாக நடத்தாத, பலசாலிகளின் நற்பண்பாக, தாழ்ச்சியை, அன்னைமரியில் காண்கிறோம்"

"நம் வருங்காலத்திற்கான வாழ்த்துக்களை, அன்னை மரியாவின் விண்ணேற்பு நமக்கு வழங்குகிறது, இயேசு கிறிஸ்துவின் வெற்றியோடு புதிய வானம் மற்றும் புதிய பூமியைக் குறித்து அறிவித்துக்கொண்டே, வானகம் நோக்கி நம் பார்வையை, இவ்விழா திருப்புகிறது"

# கருணைக்கொலைக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்திக்கொள்ள...



பெல்ஜிய நாட்டில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் மையங்களில் பணியாற்றிவரும் பிறரன்பு சபையின் அருள்சகோதரர்கள், கருணைக்கொலைக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆணையிட்டுள்ளார். பெல்ஜியத்தில் 15 மையங்களில் பணியாற்றிவரும் இந்த அருள்சகோதரர்கள், மனநலப் பாதிப்புள்ள நோயாளர்களுக்கு, கருணைக்கொலைக்கு ஆதரவு வழங்குவதை, இம்மாத இறுதிக்குள் நிறுத்த வேண்டுமென்று, திருத்தந்தையின் அனுமதியுடன், திருப்பீடம், கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. இம்மாதத் தொடக்கத்தில் அச்சகோதரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், பெல்ஜியத்தில் இம்மையங்களில் பணியாற்றும் அருள்சகோதரர்கள் எல்லாரும் இணைந்து, கருணைக்கொலைக்கு ஆதரவு தெரிவிப்பதைக் கைவிடுவதாக உறுதியளிக்கும் கடிதம் ஒன்றை கையொப்பத்துடன், அச்சபையின் தலைவருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மனித வாழ்வு, கருவான நேரம் முதல், இயற்கையான மரணம் அடையும்வரை, மதிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும் என்ற, வாழ்வு குறித்த திருஅவையின் அதிகாரப்பூர்வ போதனைகளுக்கு முழு ஆதரவு வழங்குவோம் என்று, அக்கடிதத்தில் குறிப்பிட வேண்டுமென்றும் திருப்பீடம் வலியுறுத்தியுள்ளது. அனைவரும் இணைந்து எழுதும் இக்கடிதத்தில் கையொப்பமிட மறுப்பவர்கள், திருஅவை சட்டத்தின்படி, கடும் தண்டனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் திருப்பீடம் எச்சரித்துள்ளது. மேலும், பெல்ஜியத்தில் பணியாற்றிவரும் தனது சபை அருள்சகோதரர்களின் நிலைப்பாடு குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள அச்சபையின் தலைவர் அருள்சகோதரர், René Stockman அவர்கள், வாழ்வு முழுமையானது என்பது, கிறிஸ்தவ அறநெறிக்கோட்பாட்டின் மையமும், அடித்தளமுமாகும் என்றும், வாழ்வு இறைவனின் கொடை, அது பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்றும் கூறியுள்ளார். பெல்ஜியத்தில் கருணைக்கொலை சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# அன்னை மரியாவைப்போல் நம் சமூகத்திற்கு இயேசுவைக் கொணர்வோம்

முதிர்ந்த வயதில் எலிசபெத் கருவுற்றிருக்கின்றார் என்ற செய்தியை, வானதூதர் வழியாக அறியவந்த அன்னை மரியா, எலிசபெத்துக்கும், இவ்வுலகம் முழுமைக்கும் எடுத்து வந்தது இயேசுவையே என, மரியின் விண்ணேற்பு விழாவன்று மூவேளை செப உரை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

"பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" என எலிசபெத், அன்னை மரியாவை நோக்கி வாழ்த்தியதையே, நம் "அருள் நிறை மரியே" செபத்தில் கூறுகிறோம் என்பதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதிய வயதில் குழந்தைப் பேறடைந்த சக்கரியா, எலிசபெத் தம்பதியருக்கு, அன்னை மரியாவின் வருகையுடன், கூடுதல் மகிழ்ச்சி பொங்குகிறது, ஏனெனில், வாழ்வுக்கும் குடும்பத்திற்கும், மக்களின் மீட்புக்கும் அர்த்தம் தருபவர், அன்னை மரியுடன் வந்துள்ளார் என்றார்.

எளியோர் மற்றும் ஏழைகளின் வழியாக தன் மீட்புத்திட்டத்தை இறைவன் நிறைவேற்றுகிறார் என, அன்னை மரியா பாடும் புகழ் பாடல் குறித்தும் தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எலிசபெத்தின் வீட்டில் மகிழ்ச்சியை மட்டுமல்ல, விசுவாசத்தையும் அதன் வழி வரும் நம்பிக்கை, செபம் மற்றும் வாழ்த்தையும் நாம் காண்கிறோம் என்றார்.

அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழாவை சிறப்பிக்கும் நாம், இயேசு கிறிஸ்து எனும் விலை



மதிப்பற்ற கொடையை நமக்கும், நம் குடும்பங்களுக்கும், சமுதாயத்திற்கும் கொணர வேண்டுவோம் எனவும் மக்களை நோக்கி விண்ணப்பித்தார், திருத்தந்தை. கருணையை வழங்கவும், மன்னிக்கவும், பிறரைப் புரிந்து அவர்களுக்கு ஆறுதலளிக்கவும் தேவையான பலத்தையும் வேண்டுவோம் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நாட்களில், உலகின் பல்வேறு பகுதிகளில் இயற்கை பேரிடர்களாலும், சமூகப் பதட்ட நிலைகளாலும், மோதல்களாலும் துன்புறும் மக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும், அமைதியின் அரசியாம் அன்னை மரியிடம் ஒப்படைப்பதாக எடுத்துரைத்தார்.

# 90ம் ஆண்டை சிறப்பிக்கும் பார்வைத் திறனற்ற சகோதரிகள் சபை



பார்வைத் திறனற்ற அருள் சகோதரிகள், தங்கள் நாள் முழுவதையும் திருநற்கருணை ஆராதனையில் செலவிடுவதற்கென உருவாக்கப்பட்ட துறவு சபையொன்று தன் 90ம் ஆண்டை சிறப்பிக்கிறது.

1927ம் ஆண்டு, ஆகஸ்ட் 15ம் தேதி, இத்தாலி நாட்டில், புனித லுயிஜி ஓரியோனே (Luigi Orione) அவர்களால் உருவாக்கப்பட்ட பிறரன்பு மறைப்பணியாளர்கள் சிறிய சகோதரிகள் சபையினர், தற்போது ஸ்பெயின், பிலிப்பின்ஸ், கென்யா, அர்ஜென்டினா பிரேசில் மற்றும் சிலே ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

ஒவ்வொரு நாளும், நற்கருணை வழிபாட்டில் ஈடுபடும் இச்சகோதரிகள், திங்களன்று வியாதியுற்றோர், செவ்வாயன்று இளையோர், புதனன்று அமைதி, வியாழன் - இறையழைத்தல், வெள்ளி - முதியோர், சனிக்கிழமை - குழந்தைகள், ஞாயிறு - குடும்பங்கள் என்று வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு கருத்தை மையப்படுத்தி செபித்து வருகின்றனர்.

பார்வைத் திறனற்ற இச்சகோதரிகள், அண்மைய ஆண்டுகளில் கணணியை இயக்கும் வழிகளை கற்றுக்கொண்டு, கணணி வழியே தங்களை வந்தடையும் கருத்துக்களைத் திரட்டி, அவற்றிற்காக செபித்து வருவதாகக் கூறியுள்ளனர் என்று, CNA கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது.

# அன்பே இதயம்

அன்பு என்பது சொற்களில் வாழ்வதல்ல. அன்பைச் சொற்களால் விளக்க முடியாது. இதயத்தின் செயல்களால் விளக்க முடியும்" என்கிறார் அன்னை தெரசா, அன்பு அடுத்தவர் துயர் தீர்க்கத் துடைக்கும் அருட்கருணை! வாழ்வை இனிதாக்குவது அன்பு, கஷ்டங்களிலிருந்து மீளச் செய்வது அன்பு. நமது குடும்ப வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையை சுவைக்கச் செய்வதும் அன்பு. இதயமே அன்பில் ஊறி வளர்வோம். அன்பு தன்னுயிர்போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் பண்பு கொண்டது. இனிய கூட்டுறவில் பிறப்பது மனிதநேயம். இதயத்தின் ஈரமாய் மனித நேயத்தின் சாரமாய் மனிதம் நிறைந்தவர்கள் மனிதர்கள்.

ஒரு நாள் ஓர் ஆசிரியர் நான்கு மாணவர்களை அழைத்து "உங்கள் அன்பை வெளிப்படுத்தும் விதமாக எதையாவது கொண்டு வாருங்கள்" என்று அனுப்பினார். நான்கு மாணவர்களும் பக்கத்திலிருந்த நந்தவனத்திற்கு சிட்டாகப் பறந்து சென்றனர். ஒவ்வொருவராகத் திரும்பி ஆசிரியரிடம் வந்த போது ஒரு மாணவன் கையில் மலர் இருந்தது. இன்னொரு மாணவன் கையில் வண்ணத்துப் பூச்சி இருந்தது. மற்றொரு மாணவனின் கையில் அழகான பறவைக் குஞ்சு இருந்தது. முதலில் புறப்பட்டுப்போன மாணவனோ வெறுங்கையோடு வந்தான். "ஏன் ... கொடுப்பதற்கு உனக்கு ஒன்றுமே கிடைக்கவில்லையா?" என்று பரிவோடு கேட்க, மாணவன், "சார் நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. பறித்தால் வாடிப்போகும் என்று செடியிலேயே விட்டுவிட்டேன். வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன். சிறகுகளின் வண்ணங்கள் என் சிந்தனையைக் கவர்ந்ததால் அது சுதந்திரமாகப் பறக்கட்டும் என்று விட்டுவிட்டேன். கூட்டுக்குள் குறுகிக் கிடந்த பறவைக் குஞ்சையும் பார்த்தேன். எடுத்து வந்தால் தாய்ப் பறவை தவிக்குமே என்று அங்கேயே விட்டுவிட்டு வந்தேன்" என்றான். ஆசிரியரின் கண்களில் ஈரம் கசிந்தது. அந்த மாணவனை அன்பாய் அணைத்துக்கொண்டு "அன்பு என்றால் இதுதான்" என்று உச்சி முகர்ந்தார்.

இரக்கம் என்பது அன்புதான். இன்னொரு ஜீவனின் துயர் தீர்ப்பதும் அன்புதான். கல்லையும் கசிந்துருகச் செய்யும் ஆற்றல் அன்புக்கு உண்டு. அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது. அன்புக்கு பொறாமையில்லை தீங்கு நினையாது. அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவசிக்கும் என்கிறது விவிலியம். எல்லாச் சமயங்களும் புராணங்களும் போதிப்பது அன்பைத்தான். தன் வாழ்நாள் முழுவதும் கற்றதை கொண்டு, நாம் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் அன்புடன் இருத்தல் வேண்டும்" என்று ஏழே ஏழு வார்த்தைகளில் இரத்தினச் சுருக்கமாக எழுதியவர்தான் ஆஷ்டஸ் ஹக்ஸ்லி என்ற பிரபல எழுத்தாளர். நாம் அன்பு கலந்த நேசத்துடன் செய்யும் செயல்கள்தான் நமது வாழ்நாளில் மிகப்பெரியதொரு சாதனையாக இருக்கும். இந்தச் சாதனைகளே பரிசும் பாராட்டும் பெற்றுத்தரும். அந்தப் பாராட்டு இதயத்தைக் கசிந்துருகச் செய்யும்.

## வாழ்க்கைக்குரிய வளங்கள்....



**'நாம் அன்பு கலந்த நேசத்துடன் செய்யும் செயல்கள்தான் நமது வாழ்நாளில் மிகப்பெரியதொரு சாதனையாக இருக்கும்'.**

குடிமக்கள் அனைவருக்கும் விசுவாசமாக ஒரு நல்ல ராஜா இருந்தார். ராஜாவை ஒரு மீனவன் மிகவும் நேசித்தான். ராஜாவுக்குப் பிடித்த ஒரு குறிப்பிட்ட மீன் ஒருநாள் அதிர்ஷ்டவசமாக அவனுக்குக் கிடைத்தது. அந்த மீன் விலை மதிப்புமிக்கது என்றாலும், அதை விற்காமல் மன்னனுக்கு அன்புப் பரிசாக வழங்க முடிவு செய்து அரண்மனைக்குப் புறப்பட்டான். அரண்மனை வாயிலில் உள்ளே சென்று, மன்னனைப் பார்த்து தலை வணங்கி தான் கொண்டு சென்ற மீனை தட்டில் வைத்ததும் மன்னனின் முகம் மலர்ந்தது. "ராஜா... இன்றுதான் இந்த மீனைப் பிடித்தேன். இதை நீங்கள் விரும்பினால் தயவு செய்து என் அன்பின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றான் மீனவன்.

மன்னன் மனம் நெகிழ்ந்து ஏற்றுக்கொண்டு தனது உதவியாளரை அழைத்து ஒரு பை நிறைய பொற்காசுகளைக் கொண்டு வரச்சொல்லி ஒரு வெள்ளித்தட்டில் கொட்டினான். அதில் ஒரு காசு மட்டும் தவறி விழுந்து உண்டோடி கீழே விழும் முன்பு மீனவன் ஓடிச்சென்று அதைப் பிடித்துக்கொண்டான். அதைக் கண்ட ராணி ராஜாவிடம் "இந்தப் பேராசைப் பிடித்தவனைப் பாருங்கள். நீங்கள் இவ்வளவு பொற்காசுகளைத் தரும்போதும் கேவலம் ஒரு காசுக்காக ஓடுகிறான்" என்றாள். ராஜாவுக்குப் கோபம் கொப்பளித்து "பேராசை பிடித்தவனே! நான் உனக்கு நூறு தங்கக் காசுகள் தரும்போது நீ என் ஒரு காசுக்காகத் துரத்தி ஓடுகிறாய். உன் பேராசைக்கு அளவே இல்லையா? என்று கேட்க. திடுக்கிட்ட அந்த மீனவன் வருத்தத்துடன் "ராஜா என் மனம் கவர்ந்த ராஜாவுக்கு இந்த மீனைப் பரிசாகத்தான் கொண்டு வந்தேன். எதையும் பதிலாகப் பெறுவதற்காக நான் வரவில்லை. உங்கள் உருவம் இந்த நாணயத்தில் இருப்பதால் தான் அதைத் துரத்தி ஓடினேன். என் ராஜாவின் பிம்பம் தரையில் வீழ்வதை நான் பார்க்க விரும்பவில்லை" என்று கூறிவிட்டு தலைவணங்கிச் சென்றான்.

தன் தவறுக்கு வருந்திய ராஜா ஒரு தூதுவனை அனுப்பினான். எங்கே தான் தண்டிக்கப்படப் போகிறோமோ என்று மீனவன் பயந்தான். ஆனால் மன்னன் அவனுக்கு இரண்டு பை நிறைய தங்கக் காசுகளைக் கொடுத்து அனுப்பினான். இதுதான் கசிந்துருகச் செய்யும் அன்பு! இதயத்தின் தலைச்சிறந்த அன்புதான் வெற்றி பெறுவதற்கான திறவுகோல். இதயத்தின் அன்பால் நமது வாழ்வில் வளம் கூடும்.




பிறர் உறவில் வளர ~ அவர் குறை பொறுக்கும்
நிறை குணம் வேண்டும் தம் பொருள் பகிர்ந்தளிக்கும்!

அருள் மனம் வேண்டும் ~ பிறர் உடைமை
வஞ்சித்துப் பெறும் மடைமை சிறிது மில்லா
சீர்மிகு உள்ளம் வேண்டும்

பொய், புரட்டு, சூது, வஞ்சனை செய்தொருவர்
வளர்ந்தார் என்ற சரித்திரம் இங்கில்லை.
எதை உலகிற்குக் கொணர்ந்தோம்!

அதைவிட்டுப் போவதில் வருந்த இருக்கும் வரை
இருப்பதைப் பகிர்ந்து இன்புடன் உறவில் வளர்வோம்!
முன்கை நீண்டால் முழங்கை நீளும்
பழமொழி யறிவோமே!

'ஈத்துவக்கும் இன்பம் அறியார் தாமுடைமை
வைத்திழக்கும்! என்றாரே வள்ளுவரும்!
எனவே உறவுகள் வளர உள்ளதைக் கொடுப்போம்!
கனிந்த நம் உள்ளத்தையும் கொடுப்போம்!

அன்பு மலர்ந்த முகமும் வாய்மை வழியும் சொல்லும்
இரக்கம் சுரக்கும் இதயமும் கனிவு கசியும் கண்களும்
பரிவு பொங்கும் மனமும் பாசம் கொண்ட உள்ளமும்
உடையார் முன் ஊரும் உலகமும், சுற்றமும்,
சொந்தமும் கூடி வந்து கொண்டாடுமே!

எனவே பிணக்குகள் நீங்கி,
இணக்கமுடன் வாழ்வோம் ~ அன்பில்
கூடி வாழ்ந்து உறவில் வளர்வோம்
இறையருளைப் பெற்று நிறைவாழ்வு எய்துவோம்!

**நன்றி**

**அன்னை வேளாங்கண்ணி**



## புனித மரிய பவுஸ்தினா கொவல்ஸ்கா 112வது பிறந்த தின வாழ்த்துக்கள்

பிறப்பு : 1905.08.25
இறப்பு : 1938.10.05
புனிதர் பட்டம் : 2000.04.30

புனித மரிய பவுஸ்தினாவே! உங்களுடைய மரணத்திற்குப் பின்பும் உங்கள் பணி தொடரும் என்றும், எங்களை நீங்கள் மறக்கமாட்டீர்கள் என்றும் கூறினீர்களே (குறி:281)

எங்கள் தாசர் இயேசு உங்களுக்கு விசேட வரங்களை அருளி இவ்வாறு கூறினார். உங்களுடைய விருப்பத்திற்கேற்ப நீங்கள் விரும்பியவர்க்கு நீங்கள் விரும்பிய நேரத்தில் அருள்களை பகருவீர்கள்.

இதன் மீது நம்பிக்கைக் கொண்டு எனக்கு மிக முக்கியமாக (உங்கள் விண்ணப்பத்தைக் குறிப்பிடவும்) தேவைப்படும் அருள்களை உங்கள் பரிந்துரை மூலம் பெற்றுத் தாரும்.

அனைத்திற்கும் மேலாக நீங்கள் இயேசுவை அன்பு செய்து, இயேசுவின் இரக்கத்தை மகிமைப்படுத்தியது போன்று, நானும் என் வாழ்வில் இயேசுவின் இரக்கத்தை மகிமைப்படுத்த ஒவ்வொரு நிமிடமும் உதவியருளும் ஆமென்.

**தொகுப்பு : செல்வி**

# உறுதியான விசுவாசமும், காலத்துக்கேற்ப பணிகளுமே இன்றைய தேவை...



விசுவாசம் என்பது ஒருவர் மேல் நாம் கொண்டிருக்கும் பற்று என்று கூறலாம். அதாவது வாழ்விலும் தாழ்விலும் அவரே தனக்கு ஏக துணை என்ற நினைப்போடு, அவரிலே முழுமையான நம்பிக்கை கொண்டு, வாழும் வாழ்வே விசுவாச வாழ்வு ஆகும். செல்வத்திலே செழித்து, இன்பத்திலே திளைத்து, நிம்மதியோடு வாழ்ந்த ஆபிரகாம் இறைவனின் அழைப்பை உள்வாங்கி, தெரியாத இடத்தில், புரியாத மனிதர்கள் மத்தியில் வாழ புறப்படுகிறார் (தொ.நூ 12:1-4). இதுதான் உண்மையான விசுவாசம். தன்னை அழைத்த இறைவனுக்கு, அவரில் கொண்டிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பதில் மொழி என்றும் இதனை இனங்கண்டுகொள்ள முடியும். இறைவனில் விசுவாசம் கொண்ட மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் இறைவனைப் பிரதிபலித்து வாழ்ந்தார்கள் என்று திருவிலியமும், திருச்சபை பாரம்பரயமும் எமக்கு சான்று தருகின்றன. இன்று புரியாத உலகில், அழிவுக் கலாச்சாரத்துக்குள், முகமூடி தரித்து வாழும் மக்கள் மத்தியில் வாழும் எமது விசுவாசம் எத்தகையதாக இருக்க வேண்டும்?

இன்று மனிதம் சிதைக்கப்படுகிறது. பணத்திற்காகவும், சுயலாபத்திற்காகவும், மனிதனுடைய உரிமைகள் விலைபோகின்ற துர்ப்பாக்கிய நிலையே எமது சமுதாயத்தில் தலைதூக்கியுள்ளது. உண்மையைப் பேசுபவன் உலகறியாதவன் என்றும், ஏமாற்றி பிழைக்கத் தெரியாதவன் அனுபவமில்லதாவன் என்றும், நீதி நியாயம் பேசுபவர்களை புரட்சிக்காரர் என்றும் முத்திரை குத்தி மக்களை ஒரு மயக்க நிலைக்கு அழைத்துச் செல்லும் இக்காலத்தில் எமது விசுவாசம் குடத்தில் இட்ட விளக்காக அல்ல மாறாக சமூகத்தில் படர்ந்திருக்கும் பொய்களுக்கும், போலிகளுக்கும் எரியுட்டும் பிளம்பாக மாற வேண்டும். மக்களின் மயக்க நிலைகள் தெளிய, உண்மை நிலையை அவர்கள் உணர, சமூகம் ஒரு நல்ல மாற்றத்தை அடைய எமது இன்றைய பணிகள் அமைய வேண்டும். இதுவே இன்றைய தேவையும்கூட. நற்செய்தியின் ஒளியில் சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இதிலே ஒரு தெளிவும், இப்பணியை செய்ய வேண்டும் என்ற உறுதியும் எழும் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் அறிகுறிகளை அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அதற்கு விளக்கம் கொடுப்பது திருச்சபையின் கடமை என்கிறது இரண்டாம் வத்திக்கான சங்கம் (இ.உ.தி 4). எனவே கிறிஸ்துவின் பணியாளர்களாகிய எமது விசுவாசம் குறுகிய நோக்கங்களுக்கும், கோணல் மனப்பான்மைகளுக்கும் இடங்கொடாமல் உலகத்தை நோக்கி ஒரு பரந்த விசுவாசமாக அமையவேண்டும். விசுவாசத்தை பாதுகாக்க நாம் உலகத்தை விட்டு ஓட நினைப்பது நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல, நம் விசுவாசம் என்னும் உறுதி பெறவில்லை என்பதனையே காட்டுகிறது. எமது விசுவாசம் உறுதியானது என்றால் அது எமது பணிகளிலே குறிப்பாக நற்செய்தி அறிவுப் பணியிலே வெளிப்பட வேண்டும். இன்றைய பொருளாதார, சமூக அடிமைத் தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் பணியில் நாம் முன்வரவில்லை யென்றால், காலத்தின் அறிகுறிகளை நாம் கண்டுணர வில்லையென்றால், மக்களின் இன்றைய தேவைகளில் நாம் கண்மூடிவிட்டோம் என்றுதான் பொருள்.

திருத்தந்தை 6ம் சின்னப்பர் கூறுவதைப்போல "கோடிக்கணக்கான மக்களின் விடுதலையை அறிவிப்பதும், அதற்கு துணை செய்வதும், சான்றுபகருவதும், திருச்சபையின் கடமை. இது நற்செய்திப்பணிக்கு புறம்பானதல்ல" மாறாக இதுவே இன்றைய தேவை. இன்று எமது சமுதாயத்தில் பெரும்பகுதி மக்கள் தங்களிலே பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும், மனவேதனை களுக்கும், இழப்புக்களுக்கும் ஆளாகி வாழ்வில் நம்பிக்கையிழந்து, வாழ்வின் பொருள் மறந்து, வாழ்வே வேண்டாம் என்று நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மட்டில் எமது கடப்பாடு என்ன? புனித யாக்கோபு தனது கடிதத்தில் குறிப்பிடுவதைப் போல ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லதிருக்கும் போது அவர்கள் உடலுக்கு தேவையானவற்றை ஒன்றும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள் குளிர் காய்து கொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன? (யாக் 2: 15-16).

இன்று கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவனாக அழைப்புப் பெற்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் மட்டில் பல பொறுப்புக்கள் காத்திருக்கின்றன. ஒவ்வொரும் நற்செய்தி தரும் விசுவாச ஒளியில் முன் சென்று, இன்றைய காலத்தின் தேவையினை சமூக நோக்கில் விளங்கிக் கொண்டு, கிறிஸ்தவ விழுமியங்களை தங்கள் வாழ்வில் பிரதிபலித்து, தாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதே இன்றைய தேவை அதுவே அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வும் ஆகும்.

**ஆக்கம்**
**அருட் சகோ. றமேஸ்**
**அ.ம.தி**

## சிந்தனைக்கு....!

**மழையில் நனைந்து**
**கொண்டே வீட்டுக் வந்தேன்**
**"குடை எடுத்துட்டுப் போக**
**வேண்டியதுதானே"**
**என்றான் அண்ணன்**

**எங்கேயாச்சும் ஒதுங்கி**
**நிற்க வேண்டிதுதானே**
**என்றாள் அக்கா**

**"சளி பிடிச்சுக்கிட்டு செலவு**
**வைக்கப் போற பாரு,**
**என்றார் அப்பா**

**தன் முந்தானையால்**
**என் தலையை துவட்டிக்**
**கொண்டே திட்டினாள்**
**அம்மா**
**என்னையல்ல**
**மழையை**

**அன்பு என்பது**
**அலாதியானது,**
**அனைத்தையும்**
**கடந்தது. தனக்னெ**
**வாழாமல் பிறர்கென**
**வாழ்வதில் மகிழ்வது.**
**தன்னை வருத்தி தியாகம்**
**செய்வது. பிறர் நலனில்**
**தன் நலன் விழைவது.**
**தாயன்போ யாவற்றையும்**
**விஞ்சியது. தன்**
**குழந்தைக்காக தனை**
**இழக்கும் ஆற்றல்**
**மிக்கது. தன் மானிடரின்**
**அன்பே இப்படியெனில்**
**இறைவனின்**
**அன்புதான்**
**எத்துணை மேல்!!!**



## சொல்ல வேண்டியதை

சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய
இடத்தில் சொல்லியாகணும்
சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய
நேரத்தில் சொல்லியாகணும்
சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய
விதத்தில் சொல்லியாகணும்
சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய
காரணங்களுடன் சொல்லியாகணும்
சொல்ல வேண்டியதை சொல்ல
வேண்டியவர்களிடம் சொல்லியாகணும்
சொல்ல முடியாதவற்றை சொல்லாமல்
சொல்லியாகணும்




## பெருந்தன்மை



- கொடுப்பது, பெறுவது இரண்டும் பெருந்தன்மையோடு இணைந்த வார்த்தைகள்
- கொடுப்பதும் பெறுவதும் குடும்ப உறவையும் பிற குடும்பங்களோடு உள்ள உறவையும் வளர்க்கும்
- கடவுளின் பெருந்தன்மையைப் போற்றிப் புகழ்
- நீ பெற்றதைப் பிறருக்கு முடிந்த அளவு கொடுத்து மகிழ்
- கொடுப்பதற்கு முதலிடம் கொடுத்து அதன் பயனைக் காண்
- எதிர்பார்ப்பு இல்லாமல் நல்லதைப் பிறருக்குக் கொடு
- உன்னிடமிருந்து பெருந்தன்மையைப் பிறர் கற்றுக் கொள்ளட்டும்





# புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்

## முகத்துவாரம், கொழும்பு – 15,

**201வது வருடாந்த திருவிழா 2017**

### 24.08.2017 – கொடியேற்றம்

மாலை 4.00 மணி – செபமாலை பிரார்த்தனை இடம் பெறும்.
மாலை 4.30 மணி – பங்கில் இறந்து போன ஆன்மாக்களுக்கான திருப்பலி (சிங்களம்) திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றம்.

25.08.2017 – 01.09.2017 மாலை 6.15 திருப்பலி (சிங்களம்)


**2.09.2017 மாலை ஆராதனை – இரவு 7.00 மணிக்கு**

### 03.09.2017 திருவிழா திருப்பலிகள்

காலை 5.00 மணி திருப்பலி (சிங்களம்) காலை 6.00 திருப்பலி (சிங்களம்) காலை 8.00 மணி திருப்பலி (சிங்களம்) காலை 11.00 மணி திருப்பலி (தமிழ்) மாலை 4.00மணி திருப்பலி (சிங்களம்) அதனைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

பங்குத்தந்தை
மற்றும்
பங்கு மக்கள்

---




தூய யோசேவ்வாஸ் ஆண்டிலே தூய்மையான குடும்ப வாழ்வை நோக்கி

# தேசிய குடும்ப ஞானொடுக்கம்

2017 செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 24ஆம் தி கதி ஞாயிற்றுக்கிழமை வரை

## தலவில புனித அன்னம்மாள் திருத்தலத்தில்

தமிழ், சிங்கள மொழியிலான துறவிகளும், பொதுநிலையினரும் உங்கள் ஆன்மீக மேம்பாட்டிற்காக இம்மூன்று நாட்களிலும் உரையாற்றுவார்கள்

உரைகள் : வளர்ந்தோர், இளைஞர்கள், மற்றும் சிறுவர்கள் என மூன்று நிலைகளிலும் இடம்பெறும்
தங்குமிடம் : குறித்தளவே உள்ளதால் முடிந்தளவில் ஒழுங்கு செய்து தரப்படும்.
உணவு / பானம் : சாதாரணமான விலையில் பெற்றுத்தரப்படும்
விண்ணப்பங்கள் : பங்குத்தந்தையிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ளவும்



ஒருங்கிணைக்கும் அருட்தந்தை

தேசிய குடும்பல நலப் பணியகம்
ராஜபக்ஷ தோட்டம்' துடெல்ல ஜா-எல தொ.பே
011 2225333 / 0772595008

Q17N3473)

---

COLOMBO CATHOLIC BOOKSHOP

## இறக்குமதி செய்யப்பட்ட பீடத்துணி



இறக்குமதி செய்யப்பட்ட பீடத்துணி
பீடத் துணி (முன் பகுதி மட்டும்)

Serving the Catholic Faithful

**தற்போது விற்பனைக்கு**
விலை 11400.00

## போர்த்துக்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான திருப்பலி மேலாடைகள்



**தற்போது விற்பனைக்கு**
**விலை**
ரூபா 10200/- தொடக்கம்
18600/- வரை



Serving the Catholic Faithful

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம்,
இல.02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08, தொ.பே இல 011 4373869' colombocatholicbookshop@gmail.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்